ISBN : 978-81-685845-5-6

செந்தமிழறிஞர்கள்:108



புதுமைப்பித்தன்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/88.%20%E0%AE%AA%E0%AF%81%E0%AE%A4%E0%AF%81%E0%AE%AE%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D_1906

செந்தமிழ்சிற்பிகள்

புதுமைப்பித்தன் (1906 - 1948)



அறிமுகம்

புதுமைப்பித்தன் என்ற புனைப்பெயர் கொண்ட சொ. விருத்தாசலம் (ஏப்ரல் 25, 1906 - சூன் 30, 1948), மிகச்சிறந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு முன்னோடியாக இவர் கருதப்படுகிறார். கூரிய சமூக விமர்சனமும் நையாண்டியும், முற்போக்குச் சிந்தனையும், இலக்கியச் சுவையும் கொண்ட இவருடைய படைப்புகள், இவரின் தனித்தன்மையினை நிறுவுகின்றன. இவரது படைப்புகள் மிக அதிகமாக

விவாதிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, 2002இல் தமிழக அரசு இவரது படைப்புகளை நாட்டுடமை ஆக்கியது

புதுமைப்பித்தன் கடலூர் மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார். தொடக்கக் கல்வியைச் செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் பயின்றார். தாசில்தாராகப் பணி புரிந்த அவர் தந்தை ஓய்வு பெற்றமையால், 1918-இல் அவரது சொந்த ஊரான திருநெல்வேலிக்குத் திரும்பினார்.

புதுமைப்பித்தன் எழுத்துப்பணியில் முழுவீச்சில் ஈடுபட்டது 15 ஆண்டுகளுக்கும் குறைவான காலம் தான். அக்குறுகிய கால அளவிலேயே அவர் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கிட்டத்தட்ட அதே எண்ணிக்கையுள்ள கட்டுரைகள், 15 கவிதைகள், சில நாடகங்கள், புத்தக விமரிசனங்கள் என எழுதிக் குவித்தார். அவரது எழுத்துக்கள் அவரைப் புரட்சி எழுத்தாளராக அடையாளம் காட்டின. அவர் கையாண்ட விஷயங்களும் கதாபாத்திரங்களும் தமிழ்ப் புனைவு உலகுக்குப் புதியதாய் அமைந்தன.

நூற்றுக்கும் மேற்பட்ட சிறந்த சிறுகதைகளை உலகத்தரத்தில் எழுதியவர்.அவற்றின் கருத்து செறிவால் பாரதியை அடுத்தவர்.இன்று வரை தமிழ் சிறுகதை உலகின் மன்னாதி மன்னர்.பல மேற்குலக இலக்கியங்களைத் தமிழுக்குள் தன் மொழிபெயர்ப்பின் மூலம் கொண்டு வந்தவர்.அந்த வேள்விக்காக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொண்டவர்.

புதுமைப்பித்தன் 15 கவிதைகள் எழுதியுள்ளார். அவரது முதல் கவிதையான திரு ஆங்கில அரசாங்க தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம், 1934ல் வெளிவந்தது. அவரது கவிதைகள் பெரும்பாலும் அவரது நண்பர் தொ. மு. சிதம்பர ரகுநாதனுக்கு வெண்பா வடிவில் எழுதப்பட்ட கடிதங்களாக அமைந்திருந்தன.

சென்னை, தஞ்சாவூர்த் தமிழ் அல்லாது பிற வட்டார வழக்குத் தமிழில் எழுதிய முதல் எழுத்தாளர் புதுமைப்பித்தன். பெரும்பாலும் இவரது கதாபாத்திரங்கள் நெல்லைத் தமிழில் பேசினர். அவரது கதைகள் அவர் வாழ்ந்த இடங்களான சென்னை மற்றும் திருநெல்வேலியைக் களமாகக் கொண்டிருந்தன. அவரது நடையில் பேச்சுத்தமிழ் மற்றும் செந்தமிழ் இரண்டும் கலந்திருந்தன. சிக்கலான விஷயங்களைக் கையாளும்போது கூட அவரது எழுத்துக்களில் நையாண்டி இழைந்தோடுவது அவரது சிறப்பு.

(😊)(😊) @@@@@@@@ (😊)(😊)

புதுமைப்பித்தன்



பிறப்பு	சொ. விருத்தாசலம் ஏப்ரல் 25, 1906 திருப்பாதிரிப்புலியூர்
இறப்பு	சூன் 30, 1948 (அகவை 42) [1] திருவனந்தபுரம்
குடியுரிமை	இந்தியா
கல்வி	கலைத்துறை இளமாணிப் பட்டம்
கல்வி நிலையம்	மதுரை திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரி
காலம்	1906-1948
வகை	சிறுகதை
இலக்கிய இயக்கம்	மணிக்கொடி இயக்கம், நவீன தமிழ் இலக்கியம்
துணைவர்	கமலா

பிள்ளைகள்	**தினகரி**
குடும்பத்தினர்	**பெற்றோர்: சொக்கலிங்கம் பிள்ளை-பர்வதத்தம்மாள்**

படைப்புகளும் சிந்தனைகளும்

புதுமைப்பித்தன் எழுத்துப்பணியில் முழுவீச்சில் ஈடுபட்டது 15 ஆண்டுகளுக்கும் குறைவான காலம் தான். அக்குறுகிய கால அளவிலேயே நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கட்டுரைகள், 15 கவிதைகள், சில நாடகங்கள், புத்தக விமரிசனங்கள் என எழுதிக் குவித்தார். இவரது எழுத்துகள் அவரைப் புரட்சி எழுத்தாளராக அடையாளம் காட்டின. இவர் கையாண்ட கதைக்களங்களும் கதாபாத்திரங்களும் தமிழ்ப் புனைவுலகுக்குப் புதியதாய் அமைந்தன. தமிழ் இலக்கிய உலகம் சில எழுதப்படாத விதிகளால் முடக்கப்பட்டிருப்பதாக அவர் கருதினார். தன் கட்டுரை ஒன்றில் இவ்வாறு கூறுகிறார்:

> “இலக்கியத்தில் இன்னதுதான் சொல்ல வேண்டும், இன்னது சொல்லக்கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாகவும், அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல; சுமார் இருநூறு வருஷங்களாக ஒருவிதமான சீலைப்பேன் வாழ்வு நடத்திவிட்டோம். சில விஷயங்களை நேர் நோக்கிப் பாக்கவும் கூசுகிறோம். அதனால் தான் இப்படிச் சக்கரவட்டமாகச் சுற்றி வளைத்துச் சப்பைக்கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும் ரத்தக்களறியையும் மனக் குரூபங்களையும் விகற்பங்களையும் உண்டாக்க இடம் இருக்குமேயானால், ஏழை விபசாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப்போய் விடப்போகிறது? இற்றுப்போனது எப்படிப் பாதுகாத்தாலும் நிற்கப்போகிறதா?
>
> மேலும் இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சிதானே? நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், ஸினிமா நடிகை சீத்தம்மாள், பேரம் பேசும் பிரமநாயகம் - இத்யாதி நபர்களை நாள்”

> தவறாமல் பார்த்துக்கொண்டிருந்து விட்டு, இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல், காதல் கத்தரிக்காய் பண்ணிக்கொண்டிருப்பது போன்ற அனுபவத்துக்கு நேர் முரணான விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை.

தனது சமகால எழுத்தாளர்களின் எதிர்விமர்சனங்களைப் புறந்தள்ளி பின்வருமாறு கூறுகிறார்:

> “ வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்துவிட்டவைகளும். அவை உங்கள் அளவுகோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நானும் பொறுப்பாளியல்ல, நான் பிறப்பித்து விளையாடவிட்ட ஜீவராசிகளும் பொறுப்பாளிகளல்ல; உங்கள் அளவுகோல்களைத்தான் என் கதைகளின் அருகில் வைத்து அளந்து பார்த்துக்கொள்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன். ”

சிறுகதைகள்

புதுமைப்பித்தனின் சிறுகதைகள் தான் அவருக்கு எழுத்துலகில் தனி இடத்தை அளித்தன. அவர் எழுதியதாகக் கணிக்கப்படும் 108 சிறுகதைகளில் 48 மட்டுமே அவர் காலத்திலேயே வெளியாகின. அவரது சிறுகதைகள் மணிக்கொடி, கலைமகள், ஜோதி, சுதந்திர சங்கு, ஊழியன், தமிழ்மணி, தினமணியின் ஆண்டு மலர், நந்தன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமாயின. மற்றவை அவர் மறைவுக்குப் பின்னர் வெவ்வேறு காலங்களில் பிரசுரமாயின. கடைசித் தொகுப்பு 2000-இல் வெளியானது. புதுமைப்பித்தன் 1930-களில் உருவாகிய மணிக்கொடி இயக்கத்தின் முக்கிய எழுத்தாளர்களுள் ஒருவராக விளங்கினார். கு. ப. ராஜகோபாலன், பி. எஸ்.ராமையா, வ. ராமசாமி ஆகியோர் மணிக்கொடி இயக்கத்தின் மற்ற புகழ்பெற்ற எழுத்தாளர்களாவர்.

மொழிபெயர்ப்புகள்

புதுமைப்பித்தன் 50-இக்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் பிற மொழிகளிலிருந்து மொழிபெயர்த்துள்ளார். இவர் மொழிபெயர்த்த எழுத்தாளர்களில் சிலர்:

- மொலியர்
- கே பாயில்
- மேக்சிம் கார்க்கி
- சின்கிளெயயர் லூயிஸ்
- எர்னஸ்ட் டோலர்
- வில்லியம் ஷேக்ஸ்பியர்
- இ. எம். டேலாஃப்ல்டு
- வில்லியம் சரோயன்
- இ. வி. லூகாஸ்
- மோஷே ஸ்மிலான்ஸ்கி
- ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்ஸன்
- பிரட் கார்ட்
- ஜான் கால்ஸ்வொர்த்தி
- அலெக்ஸாண்டர் குப்ரின்
- ஆன்டன் செக்கோவ்
- பிரான்ஸ் காஃப்கா
- இல்யா எக்ரன்பர்க்
- கை டி மாப்பாசான்
- வலெரி பிர்யுசொவ்
- அனாடோல் பிரான்ஸ்
- லியோனிட் ஆண்டிரியேவ்
- ஹென்ரிக் இப்சன்
- நாத்தேனியல் ஹாத்தோர்ன்
- எட்கர் ஆலன் போ
- ராபர்ட் முரே கில்கிறிஸ்ட்
- பிரான்ஸிஸ் பெல்லர்பி
- லியோனார்ட் ஸ்ட்ராங்
- ஜேக் லண்டன்
- பீட்டர் எக்கி
- மிக்கெயில் அலெக்ஸாண்ட்ரோவிச் ஷோலோகோவ்
- தாமஸ் வுல்ஃப்
- ஜேம்ஸ் ஹேன்லி.

இவருக்கு மொழிபெயர்ப்புகள், தழுவல்கள் குறித்துத் தெளிவான கருத்து இருந்தது. தழுவல்கள் இலக்கியத் திருட்டுக்குச் சமம் என்றும் பிறமொழி படைப்புகளைத் தமிழுக்குக் கொண்டுவர மொழிபெயர்ப்பே சிறந்த வழியெனவும் கருதினார். 1937-

இல் மொழிபெயர்ப்பா, தழுவலா என்ற பிரச்சனையில் இவருக்கும் கல்கி கிருஷ்ணமூர்த்திக்கும் இடையே காட்டமான இலக்கியச் சண்டையொன்று நிகழ்ந்தது.

கவிதைகள்

புதுமைப்பித்தன் 15 கவிதைகள் எழுதியுள்ளார். அவரது முதல் கவிதையான *திரு ஆங்கில அரசாங்க தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்*, 1934-இல் வெளிவந்தது. அவரது கவிதைகள் பெரும்பாலும் அவரது நண்பர் தொ. மு. சிதம்பர ரகுநாதனுக்கு வெண்பா வடிவில் எழுதப்பட்ட கடிதங்களாக அமைந்திருந்தன. அவரது 15 கவிதைகளும் அவர் இறந்த பின்பு தான் பிரசுரமாயின. அவரது சிறுகதைகளைப் போலவே அவரது கவிதைகளும் நையாண்டியும், நக்கலுமாக இருந்ததன. *மூனாவருணாசலமே மூடா*, அவரது கவிதைகளுள் புகழ் பெற்றது. அது மணிக்கொடி இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் விட்டுவிட்ட ஒரு தமிழ் புத்தகத்தினைச் (மு. அருணாசலத்தின் *இன்றைய தமிழ் வசன நடை*) சாடும் விமரிசனமாக எழுதப்பட்டிருந்தது.

அரசியல் புத்தகங்கள்

புதுமைப்பித்தன் அடிப்படையில் சோஷியலிச கருத்துகளைக் கொண்டவர். அவரது அரசியல் கட்டுரைகள் மற்றும் புத்தகங்களில் குறிப்பிடத்தக்கவை நான்கு. அவை *ஃபாசிஸ்ட் ஜடாமுனி*, (முசோலினியின் வாழ்க்கை வரலாறு) *கப்சிப் தர்பார்*, (ஹிட்லரின் வாழ்க்கைவரலாறு) *ஸ்டாலினுக்குத் தெரியும்* மற்றும் *அதிகாரம் யாருக்கு* (இரண்டும் கம்னியூசத்தையும் ஸ்டாலினின் கொள்கைகளையும் விவரிப்பவை). நான்கு புத்தகங்களுமே ஃபாசிசத்தை எதிர்த்தும் ஸ்டாலினிய கொள்கைகளுக்கு ஆதரவாகவும் எழுதப்பட்டன.

சர்ச்சைகள்

தழுவல் கதைகள்

மாப்பாசான் என்ற பிரெஞ்சு கதாசிரியரின் படைப்புகளின் தழுவல்களாகப் புதுமைப்பித்தனின் சில கதைகள் அமைந்துள்ளன என்று அவரது சம காலத்து எழுத்தாளர்களான பெ. கோ. சுந்தரராஜன் (சிட்டி) மற்றும் சோ. சிவபாதசுந்தரம் குற்றம் சாட்டியுள்ளனர். இலக்கிய ஆய்வாளர் காரை கிருஷ்ணமூர்த்தியும் பின்னர் இதே கருத்தினைக் கூறினார். புதுமைப்பித்தனின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய தொ. மு. சிதம்பர ரகுநாதன் *சமாதி*, *நொண்டி*, *பயம்*, *கொலைகாரன்* கதை, *நல்ல வேலைக்காரன்*, *அந்த முட்டாள் வேணு* ஆகிய கதைகள் மாப்பாசான் கதைகளின் தழுவல்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். *பித்துக்குளி* என்ற கதை ராபர்ட் பிரௌனிங் கவிதையொன்றின் தழுவல் எனவும் கூறியுள்ளார். *டாக்டர் சம்பத்*, *நானே கொன்றேன்*, *யார் குற்றவாளி*, *தேக்கங்கன்றுகள்* போன்ற கதைகளும் தழுவல்களாக இருக்கலாம் எனக் கருத்துகள் உள்ளன. *தமிழ் படித்த பொண்டாட்டி* என்ற கதையைப் புதுமைப்பித்தன் தானே வெளியிட்டுள்ளார். அதன் முன்னுரையில் அது மாப்பாசான் கதையின் தழுவல் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். தழுவல்கள் எனக் குற்றச்சாட்டிற்கு உள்ளான பிற கதைகள் அவர் இறந்தபின் பிறரால் வெளியிடப்பட்டுள்ளன. அவரது ஆதரவாளர்கள், அவர் வெளியிட்டிருந்தால் கண்டிப்பாகத் தழுவல் என்பதைக் குறிப்பிட்டிருப்பார் எனக் கூறுகின்றனர். மேலும் அவர் உயிரோடு இருந்த காலகட்டத்தில் மாப்பாசானின் கதைகள் பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படவில்லை. அவருக்கோ பிரெஞ்சு மொழி தெரியாது. எனவே அக்கதைகள் எவ்வாறு தழுவல்களாக இருக்க முடியும் எனக் கேள்வி எழுப்புகின்றனர். அவரது தழுவல் கதைகள் அனைத்தும் 1937க்கு முன்னதாக எழுதப்பட்டவை. அவ்வாண்டுதான் அவர் கல்கி கிருஷ்ணமூர்த்தியுடன் பிறமொழி படைப்புகளிலிருந்து தழுவி எழுதுவது குறித்து கடுமையான இலக்கியச் சண்டை நடத்தினார்.

தழுவல்கள் இலக்கியத் திருட்டுக்குச் சமம் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.[8][9][11][15][17][19][20]

பிற விமர்சனங்கள்

புதுமைப்பித்தன் சிந்தனை செய்ய வேண்டிய விஷயங்களைப் பற்றி எழுதியுள்ளார், ஆனால் அவற்றுக்கான தீர்வைப் பற்றிக் கூற முயற்சிக்கவே இல்லை என விமர்சிக்கப் படுகிறார். அவரது படைப்புகளில் பிரச்சனைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன; தீர்வுகளை வாசகர்களின் வசம் விட்டுவிடுகிறார். சில சமயங்களில் அவர் கதை நடைபெறும் களத்தையும் கதாபாத்திரங்களின் தன்மையையும் விவரிக்கும் அளவு மையக்கருத்துக்கு முக்கியத்துவம் தருவதில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுகிறார். சமீபத்தில் தமிழ் விமர்சகர் அ. மார்க்ஸ் தலித்துகள், மறவர்கள், கிருத்துவர்கள் மற்றும் புலால் உண்பவர்களை புதுமைப்பித்தன் இழிவு படுத்தியுள்ளார் என விமரிசனம் செய்துள்ளார். 2014ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் புதுமைப்பித்தனின் *துன்பக்கேணி*, *பொன்னகரம்* ஆகிய இரு சிறுகதைகளை தனது பாடத்திட்டத்திலிருந்து நீக்கியது. பல்கலைக்கழக ஆட்சிக்குழு இக்கதைகள் தலித்துகளை இழிவுபடுத்துகின்றன என்று கருதியதால் அவற்றை நீக்கியது.

வல்லிக்கண்ணன் எழுதிய **"இந்திய இலக்கியச் சிற்பிகள்: புதுமைப்பித்தன்"** என்ற நூல், தமிழ் நவீன இலக்கியத்தின் முன்னோடியான புதுமைப்பித்தனின் (1906-1948) வாழ்க்கை, படைப்புகள் மற்றும் இலக்கிய பங்களிப்பை விவரிக்கும் ஒரு சிறந்த வாழ்க்கை வரலாற்று நூலாகும். சாகித்ய அகாதெமி வெளியிட்ட இந்நூல், சிறுகதை மன்னன் என்று போற்றப்படும் புதுமைப்பித்தனின் சமூக விமர்சன, நையாண்டி மற்றும் முற்போக்கு சிந்தனை படைப்புகளைப் பற்றிய விரிவான பார்வையை வழங்குகிறது.

நூலின் முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** வல்லிக்கண்ணன்.

- **பொருள்:** புதுமைப்பித்தனின் பிறப்பு, கல்வி, எழுத்துப்பணி, கதைக்களம் மற்றும் அவரது தனித்துவமான எழுத்து நடை.
- **முக்கியத்துவம்:** நவீனத் தமிழ்ச் சிறுகதை இயக்கத்தைத் தொடங்கி, தமிழ் உரைநடைக்கு வளம் சேர்த்த மாபெரும் இலக்கியச் சிற்பியின் வாழ்க்கை வரலாறு.
- **வெளியீடு:** சாகித்ய அகாதெமி.

இந்த புத்தகம், புதுமைப்பித்தனின் சிறுகதை, கவிதை, விமர்சனம், மொழிபெயர்ப்பு மற்றும் அவரது நையாண்டி உணர்வுகள், சமூக விமர்சனங்கள் போன்றவற்றை ஆழமாக ஆராய்கிறது.

https://www.tamilvu.org/library/nationalized/pdf/81-vallikannan/108-puthumaippiththan.pdf

இலக்கிய வாழ்க்கை

புதுமைப்பித்தன் நெல்லையில் இருக்கும்போதே இலக்கிய விவாதங்கள் வழியாக நவீன இலக்கியத்தை அறிமுகம் செய்துகொண்டார். மாப்பசான், ஆண்டன் செகாவ், ஓ.ஹென்றி, எட்கார் ஆல்லன் போ போன்ற எழுத்தாளர்களின் சிறுகதைகளால் ஈர்க்கப்பட்டு அவ்வடிவம் மீது ஆர்வம் கொண்டிருந்தார்.



சிறுகதைகள்

தொடக்க காலம்

புதுமைப்பித்தன் நெல்லையில் இருக்கும்போதே அவருடைய சிறுகதைகள் வெளியாகத் தொடங்கின. அவருடைய முதல் சிறுகதை 'குலோப்ஜான் காதல்' காந்தி இதழில் 1933-ம் ஆண்டு வெளிவந்தது. 1934 முதல் புதுமைப்பித்தன் மணிக்கொடியில் எழுதத் தொடங்கினார். புதுமைப்பித்தனின் 'ஆற்றங்கரைப் பிள்ளையார்' சிறுகதை மணிக்கொடி இதழில் வெளிவந்த முதல் சிறுகதை. இச்சிறுகதை ஏப்ரல் 1934, 22, 29-ம் தேதிகளில் தொடர்ந்து வெளிவந்தது. இக்காலகட்டத்தில் ஊழியன் இதழில் அகலிகை, தேக்கங்கன்றுகள், தெருவிளக்கு போன்ற கதைகள் வெளிவந்தன.

'புதுமைப்பித்தன் எழுதத் தொடங்கிய 1934-ம் வருடத்தில் மட்டும் நாற்பது நாற்பத்தைந்து கதைகள் எழுதியிருக்கிறார். வெகு ஆவேசமான ஆரம்பத்தையே இது காட்டுகிறது. இக்கதைகளில் பெரும்பான்மையானவை பற்றி மிக உயர்வாகச் சொல்வதற்கு இல்லை என்றாலும் அவருடைய மற்ற கதைகள்போல் இவற்றிலும் அவருக்கே உரித்தானபார்வை ஊடுருவி நிற்கிறது எனலாம்' என்று சுந்தர ராமசாமி மதிப்பிடுகிறார்.

மணிக்கொடிக் காலம்

புதுமைப்பித்தன் முதல்கட்ட மணிக்கொடியில் எழுதத் தொடங்கியவர். அவர் ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன், மௌனி ஆகிய முன்னோடிகளுடன் இணைத்து மணிக்கொடி எழுத்தாளர் என்று அறியப்படுகிறார். மார்ச் 1935-ல் மணிக்கொடி இரண்டாம் முறையாக தொடங்கப்பட்ட போது அதன் முதல் இதழில் புதுமைப்பித்தன் 'துன்பக்கேணி' சிறுகதை வெளிவந்தது. முதல்கட்ட மணிக்கொடியில் புதுமைப்பித்தன் முப்பது கதைகளும், இரண்டாம்கட்ட மணிக்கொடியில் 15 கதைகளுமாக

மொத்தம் 45 கதைகளை புதுமைப்பித்தன் மணிக்கொடியில் எழுதினார் என்று ஆ.இரா.வேங்கடாசலபதி குறிப்பிடுகிறார்.

இக்காலகட்டத்தில் ஊழியன் இதழில் பதிமூன்று கதைகளும், ஆறு தழுவல் கதைகளும் புதுமைப்பித்தனால் எழுதப்பட்டன என ஆ.இரா.வேங்கடாசலபதி குறிப்பிடுகிறார்.

கலைமகள் காலம்

புதுமைப்பித்தனின் கதைகள் ஜோதி, சுதந்திரச் சங்கு, ஊழியன், தமிழ்மணி, தினமணியின் ஆண்டு மலர், நந்தன் போன்ற இதழ்களில் வெளிவந்தன. அவருடைய இறுதிக்காலத்தில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க கதைகள் பல கி.வா. ஜகந்நாதன் ஆசிரியராக இருந்த கலைமகள் இதழில் வெளிவந்தன. தன் இயல்புக்கு ஒவ்வாதது என தான் விலகிச்சென்ற கலைமகள் இதழ் தன்னுடைய கதைகளை வெளியிட்டதை குறிப்பிட்டு புதுமைப்பித்தன் எழுதியிருக்கிறார். ஆ.இரா.வேங்கடாசலபதியின் கூற்றுப்படி 1938 முதல் 1946 வரை கலைமகளில் புதுமைப்பித்தன் 11 கதைகளை எழுதினார். பின்னர் கலைமகள் குடும்ப இதழாக தன்னை மாற்றிக்கொண்டது.

தொகுப்புகள்

புதுமைப்பித்தனின் கதைகளின் வெளியீடு - பதிப்பு வரலாற்றை ஆய்வு செய்து எழுதிய ஆ.இரா.வேங்கடாசலபதியின் முடிவுகளின்படி புதுமைப்பித்தனின் இறுதிக்கதை என ஆய்வாளர்கள் கருதுவது கயிற்றரவு. அது அ.கி. கோபாலன் நடத்திய காதம்பரி இதழில் 1948ல் வெளிவந்தது.

புதுமைப்பித்தன் மொத்தம் 108 சிறுகதைகள் எழுதியுள்ளார். அதில் அவர் காலத்தில் 48 கதைகள் மட்டும் பிரசுரமாயின. 1940-ல் புதுமைப்பித்தனின் முதல் சிறுகதைத் தொகுப்பு 'புதுமைப்பித்தன் சிறுகதைகள்' என்னும் பெயரில் நவயுக பிரசுரமாக வெளிவந்தது.

அதற்கு ரா.ஸ்ரீ.தேசிகன் முன்னுரை எழுதினார்.ஆறுகதைகள், நாசகார கும்பல் ஆகிய தொகுதிகளும் 1941 வாக்கில் நவயுக பிரசுராலயத்தால் வெளியிடப்பட்டன.

1943 டிசம்பரில் கலைமகள் காரியாலயம் வெளியீடாக 'காஞ்சனை முதலிய கதைகள்' என்னும் தொகுப்பு வெளியாகியது. இந்நூலுக்கு புதுமைப்பித்தன் எச்சரிக்கை என்னும் தலைப்பில் முன்னுரை எழுதியுள்ளார். டிசம்பர் 23,1943 தேதியிடப்பட்ட கட்டுரை அது. இந்நூலுக்கு கா.ஸ்ரீ.ஸ்ரீ மெய்ப்பு பார்த்தார். 1947 செப்டம்பரில், சென்னை மயிலாப்பூர் தமிழ்ப் புத்தகாலய வெளியீடாக 'ஆண்மை' தொகுதி புதுமைப்பித்தன் எழுதிய முன்னுரையுடன் வெளிவந்தது.

புதுமைப்பித்தன் மரணத்துக்குப் பின் முல்லை பதிப்பகம், தமிழ்ச்சுடர் நிலையம் ஆகியவை அவர் கதைகளை வெளியிட்டன. 1953 முதல் ஸ்டார் பிரசுரம் அவருடைய கதைகளை தொடர்ச்சியான தொகுப்புகளாக வெளியிட்டது. ஆ.இரா.வேங்கடாசலபதி புதுமைப்பித்தன் எழுதியவை என உறுதியாகத் தெரிந்த கதைகளை மட்டும், தழுவல்கதைகளை நீக்கி 97 கதைகளை அவர் 2000 த்தில் வெளியிட்ட செம்பதிப்பில் சேர்த்துள்ளார்.



கட்டுரைகள்

புதுமைப்பித்தன் சொ.வி., ரசமட்டம், மாத்ரு, கூத்தன், நந்தன், கபாலி, சுக்ராச்சாரி, இரவல் விசிறிமடிப்பு ஆகிய புனைபெயர்களில் இலக்கிய விமர்சனக் கட்டுரைகளையும் மதிப்புரைகளையும் எழுதியிருக்கிறார். தன் இலக்கிய ரசனைப் பற்றி நமது கலைச் செல்வம், கடவுளின் கனவும் கவிஞனின் கனவும், இலக்கியத்தில் உட்பிரிவுகள், இலக்கியத்தின் இரகசியம் போன்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதினார். மேலும் கம்பன், பாரதி, பாரதிதாசன் எனக் கவிஞர்கள் குறித்தும், கவிதைகள் குறித்தும் கட்டுரைகள் எழுதினார்.

தமிழர் நாகரீகத்தின் கிராம வாழ்க்கை, அரிஸ்டாட்டில் கண்ட ராஜீயப் பிராணி போன்ற தனிக் கட்டுரைகள், இராமாயணம், மகாபாரத கதாபாத்திரங்கள் பற்றி சிறு கட்டுரைகள், நாட்டுப் பாடல்கள், தனிப்பாடல்கள் பற்றிச் சில கட்டுரைகள் எழுதியுள்ளார். 'தினமணி', 'தினசரி' நாளிதழ்களில் பணியாற்றிய போது தொடர்ந்து புத்தக மதிப்புரைகளை ரசமட்டம் என்ற பெயரில் எழுதினார். புதுமைப்பித்தனின் பெரும்பாலான கட்டுரைகள் இதழியல் தேவைக்காக எழுதப்பட்டவை.

கவிதைகள்

புதுமைப்பித்தன் வசன கவிதைகளை ஆதரிக்கவில்லை. யாப்பில் அடங்கும் கவிதைகளையே புதுமைப்பித்தன் எழுதினார். சரஸ்வதியை நோக்கி கேட்கிற தொனியில் புதுமைப்பித்தன் எழுதிய 'நிசந்தானோ சொப்பனமோ' என்ற கவிதை பிரபலமானது.

புதுமைப்பித்தன் வெ. கந்தசாமிக் கவிராயர் என்ற புனைப் பெயரில் கவிதைகள் எழுதினார். வறுமையில் வாழ்ந்த கு.ப.ரா இறந்த போது நிதி திரட்டியவர்களை கேலி செய்து 'ஓகோ உலகத்தீர்! ஓடாதீர்!' என்ற கவிதையை எழுதினார். இளம் காதலர்களை கேலி செய்து 'காதல் பாட்டு' என்ற தலைப்பில் நையாண்டி கவிதை எழுதினார். அந்த கால

இந்திய நிலையை 'இணையற்ற இந்தியா' என்ற தலைப்பில் கேலிக் கவிதை எழுதினார். 'தொழில்' என்ற கவிதை முருகனை நோக்கி பாடுவதாகவும் தொழிலில் உள்ள ஏற்ற தாழ்வுகளைக் கண்டிப்பதாகவும் அமைந்தது.

புதுமைப்பித்தனின் பெரும்பாலான கவிதைகள் எளிய யாப்பு முறையில் எழுதப்பட்ட நையாண்டிக் கவிதைகள். ச.து.சு. யோகியார் போன்ற நண்பர்களுடன் அரட்டையடிக்கையில் இயல்பாக அவர் மரபுக்கவிதைகளை சொல்வதுண்டு என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். அவற்றில் சில அவருடைய நண்பர்களின் நினைவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாடகங்கள்

புதுமைப்பித்தன் சில சிறு நாடகங்கள் எழுதியுள்ளார். புதுமைப்பித்தன் எழுதிய முதல் நாடகம் 'பக்த குசேலா - கரியுக மாடல்'. குசேலர் கதையை பகடி செய்து எழுதிய நாடகம் இது. புதுமைப்பித்தனின் 'நிச்சயமா நாளைக்கு' நாடகம் மத்தியதரக் குடும்பத்தின் அன்றாட சிக்கல்களைப் பற்றி பேசுவது. செல்வம் அதிகமாக கொண்ட அறிவிலியையும், ஞானம் கொண்ட ஏழைக்கும் இடையில் நடக்கும் போட்டி நாடகம் 'வாக்கும் வக்கும்'. இது திரைக்கதை வடிவில் எழுதப்பட்டது.

வரலாற்று நூல்கள்

புதுமைப்பித்தன் இத்தாலி சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினியின் வாழ்க்கை வரலாற்றை 'பேசிஸ்ட் ஜடாமுனி' என்ற தலைப்பில் எழுதினார். ஜெர்மன் சர்வாதிகாரி அடால்ப் ஹிட்லர் வாழ்க்கையை 'கப்சிப் தர்பார்' என்ற தலைப்பில் எழுதினார். கப்சிப் தர்பாரின் முதல் பகுதி மட்டும் புதுமைப்பித்தன் எழுதினார். பிற்பகுதிகளை பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றிய ந. ராமரத்னம் எழுதினார்.

நாவல்

புதுமைப்பித்தன் எழுதத் தொடங்கிய 'சிற்றன்னை' நாவல் எழுதி முடிக்கப்படாமல் பாதியில் நின்றது. புதுமைப்பித்தன் ஒரு நாவலுக்கு 'மூக்கபிள்ளை' எனப் பெயரிட்டிருந்தார். அதனை பெருநாவலாக எழுதும் கனவு புதுமைப்பித்தனுக்கு இருந்தது. புதுமைப்பித்தன் எழுதி முடிக்காத நாவல் 'அன்னையிட்ட தீ' என்ற பேரில் பின்னர் ஆ.இரா.வேங்கடாசலபதி முயற்சியால் நூலாக வெளிவந்தது.

மொழிபெயர்ப்புகள்

புதுமைப்பித்தன் 58 சிறுகதைகளுக்கு மேல் உலக இலக்கியத்திலிருந்து மொழிபெயர்த்துள்ளார். அலெக்சாண்டர் குப்ரின் எழுதிய 'யாமா த பிட்' நாவலின் முதல் பாகத்தின் ஒன்பது அத்தியாயங்களை மொழிபெயர்த்தார். குப்ரினின் நாவல், அ.கி. கோபாலன் ஆசிரியத்துவத்தில் வெளிவந்த காதம்பரி இதழில் 'பலிபீடம்' என்ற தலைப்பில் வெளியானது. இறுதி நான்கு அத்தியாயங்கள் க.நா.சுப்ரமண்யத்தால் மொழியாக்கம் செய்யப்பட்டன. புதுமைப்பித்தன் ஷேக்ஸ்பியர் நாடகங்களையும் மொழிபெயர்த்தார்.

திரைப்படத் துறை

1946ல் புதுமைப்பித்தன் எஸ்.எஸ். வாசன் இயக்கத்தில் ஜெமினி ஸ்டூடியோ தயாரித்த 'ஔவையார்' படத்தின் கதை வசனம் எழுத ஒப்பந்தமாகியிருந்தார். எனினும் படம் தயாரான போது புதுமைப்பித்தனின் வசனம் இடம்பெறவில்லை. அந்தப்படத்திற்காக

அவர் எழுதிய வசனங்களில் சில தொ.மு.சி. ரகுநாதனின் நூலில் உள்ளன. அவை நூலாக வெளிவரவில்லை.

1946-ல் புதுமைப்பித்தன் பாஸ்கர் பிக்சர்ஸ் என்னும் நிறுவனத்துக்காக ஏ. முத்துஸ்வாமி இயக்கிய 'காமவல்லி' (1948) என்னும் படத்திற்கு கதை வசனம் எழுதினார்.

1947-ல் புதுமைப்பித்தன் சொந்தமாக படம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். 'பர்வத குமாரி புரொடக்ஷன்ஸ்' என்ற தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கினார். அதில் 'வசந்தவல்லி' என்னும் தலைப்பில் 'குற்றாலக் குறவஞ்சி' கதையை படமாக்க திட்டமிட்டார். நாகர்கோயில் மகாதேவன் நடிக்க, புதுமைப்பித்தன் எழுத்தில் இந்தப்படம் வெளிவரும் என்னும் விளம்பரம் பத்திரிக்கையில் வந்ததோடு நின்றது.

1947ல் ராஜமுக்தி என்னும் படத்துக்காக புதுமைப்பித்தன் எழுதிய திரைக்கதையில் எம்.கே. தியாகராஜ பாகவதர் நடிப்பதாக இருந்தது. ராஜமுக்தி படக்குழுவினருடன் புனா சென்றார் அங்கே அவருக்கு காச நோய் ஏற்பட்டது. உடல்நிலை மோசமாக 1948-ம் ஆண்டு புனாவிலிருந்து திருவனந்தபுரம் திரும்பினார்.

1947ல் புதுமைப்பித்தன் கோயம்புத்தூரைச் சேர்ந்த குப்புராஜ் என்பவர் மதுரை சித்ரகலா ஸ்டுடியோ சார்பில் தயாரிக்க எண்ணிய ஒரு (சரஸ்வதி விஜயம் அல்லது லட்சுமி விஜயம்) திரைப்படத்துக்காக எழுதிய திரைக்கதை வடிவம் 'வாக்கும் வக்கும்' என்ற பேரில் பின்னர் வெளியாகியது. அதை (உரிய அனுமதி இன்றி) தழுவியே ஏ.பி. நாகராஜன் 'சரஸ்வதி சபதம்'(1966) என்னும் படத்தை உருவாக்கினார்.

இலக்கிய முன்னோடியாக நிறுவப்படுதல்

1940-ல் புதுமைப்பித்தனுக்கு முதல் ஏற்பை உருவாக்கியவர் ரா.ஸ்ரீ. தேசிகன். அவர் புதுமைப்பித்தனுக்கு எழுதிய முன்னுரை புகழ்பெற்றது. புதுமைப்பித்தனை வெறும் நையாண்டி எழுத்தாளர், துடுக்குக்காரர் என சிலர் மதிப்பிட்டிருந்த சூழலில் அவருக்கு ஏற்பை உருவாக்கி அளித்தது இந்த முன்னுரை.

1951-ல் சுந்தர ராமசாமி வெளியிட்ட புதுமைப்பித்தன் நினைவு மலர் தமிழ் இலக்கியச் சூழலில் புதுமைப்பித்தனை வலுவாக நிறுவிய தொகைநூல். புதுமைப்பித்தனை இடதுசாரிகள் நச்சிலக்கியவாதி என்றும், மரபுவாதிகள் துடுக்குக்காரர் என்றும் நிராகரித்திருந்த சூழலில் இந்த நூல் அவரை நவீனத்தமிழிலக்கிய முன்னோடியாக நிலைநிறுத்தியது.

1951-ல் தொ.மு.சி. ரகுநாதன் எழுதிய புதுமைப்பித்தன் வரலாறு என்னும் வாழ்க்கைவரலாற்று நூல் புதுமைப்பித்தனை ஓர் இலக்கிய ஆளுமையாக நிலைநிறுத்தியது. இந்நூல் எழுதப்பட சுந்தர ராமசாமி ஒரு காரணம். இந்நூலில் உள்ள பார்வைகளே இடதுசாரிகள் புதுமைப்பித்தனை ஏற்றுக்கொள்ள காரணம் என்று சுந்தர ராமசாமி மதிப்பிடுகிறார். (புதுமைப்பித்தன் கதைகள் முழுத்தொகுப்பு முன்னுரை)

1985-ல் புதுமைப்பித்தனின் பிரசுரமான கதைகளை முழுக்க தேடி எடுத்து ஓர் அட்டவணையை எம். வேதசகாயகுமார் தன் ஆய்வேட்டுக்காக தயாரித்தார். இந்த அட்டவணை பிற்காலத்தைய புதுமைப்பித்தன் ஆய்வுகளுக்கெல்லாம் முன்னோடியான முயற்சியாக அமைந்தது.

1987-ல் க.நா.சுப்ரமணியம் ஐந்திணை பதிப்பக வெளியீடாக வந்த புதுமைப்பித்தனின் முழுத்தொகுதிக்கு 'புதுமையும் பித்தமும்' எனும்

தலைப்பில் எழுதிய நீண்ட முன்னுரையில் மணிக்கொடி முன்னோடிகளில் புதுமைப்பித்தன் ஒருவரே மேதை என்னும் தகுதிகொண்டவர் என மதிப்பிடுகிறார்.

1998-ல் ஆ. இரா. வேங்கடாசலபதி புதுமைப்பித்தனின் அன்னையிட்ட தீ என்னும் வெளிவராத நாவலை பதிப்பித்தார். அந்நூலில் எழுதிய விரிவான முன்னுரையில் புதுமைப்பித்தன் படைப்புகளின் முறையான பதிப்புமுயற்சிகள் பற்றி பேசினார்.

2000-ல் புதுமைப்பித்தன் கதைகளுக்கான முழுமையான செம்பதிப்பு ஆ.இரா.வேங்கடாசலபதியால் காலச்சுவடு பதிப்பகம் வழியாக வெளியிடப்பட்டது. சுந்தர ராமசாமி அதற்கு நீண்ட முன்னுரை எழுதியிருந்தார். ஆ.இரா.வேங்கடாசலபதி தொடர்ச்சியாக புதுமைப்பித்தனின் படைப்புகளை விரிவான ஆய்வுக்குறிப்புகள், காலக்குறிப்புகளுடன் வெளியிட்டார். இந்த நூல்வரிசைகள் புதுமைப்பித்தனின் முன்னோடி என்னும் இடத்தை நிறுவின.

மதிப்பீடுகள்

சமகால மதிப்பீடுகள்

புதுமைப்பித்தன் அவருடைய சமகாலத்திலேயே இலக்கிய மேதை என்னும் மதிப்பை அடைந்தவர். ரா.ஸ்ரீ. தேசிகன் புதுமைப்பித்தனின் கதைகளுக்கு 1940ல் எழுதிய புகழ்பெற்ற முன்னுரையில் "சிறுகதை மர்மங்களை நன்கு அறிந்துள்ள புதுமைப்பித்தனின் கதைகளுக்கிடையே திரியும்போது ஒரு கவி உலகிலே திரிகிற உணர்ச்சி எனக்கு வருகிறது. இவருடைய கதை ஒவ்வொன்றும் ஒரு தனி அனுபவ முத்திரை பெற்றிருக்கிறது. ஒவ்வொன்றிலும் உண்மையின் நாதம் ஒலிக்கிறது....ஒரு கவி உள்ளம் - சோகத்தினால் சாம்பிய கவி

உள்ளம், வாழ்க்கை முட்களில் விழுந்து ரத்தம் கட்டுகிற உள்ளம் கதையின் மூலம் பேசுகிறது." என்று குறிப்பிட்டார்.

'அபாரமான கற்பனை, புதுமையான நடை, ஆற்றல் மிக்க மொழி, மென்மையான பகடி, சூழல் சித்தரிப்பு ஆகியன இவரது சிறப்புகள். இவரது படைப்புகளில் வலியும் அலைக்கழிப்பும் எழுச்சிக்கான கனலும் இருக்கின்றன' என்று கா.ஸ்ரீ.ஸ்ரீ குறிப்பிட்டார்.

முதல் தலைமுறை மதிப்பீடுகள்

"புதுமைப்பித்தன் பரம்பரை எனக்கூறத்தக்க வகையில் தமது வழியில் புதிய சிறுகதை எழுத்தாளர்கள் உருவாவதற்கு பிதாமகராகவும், உந்துசக்தியாக விளங்கியவர்" என்கிறார் தொ.மு.சி. ரகுநாதன்.

'கதை சொல்லும் மேன்மையும் சொந்தக் கற்பனை ஆட்சியும் புதுமைப்பித்தனுக்குக் கைவந்திருப்பதுபோல தமிழில், இந்த நூற்றாண்டில், வேறு ஒருவருக்கும் இருந்ததில்லை என்பது சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் நிரூபிக்கப்பட்டுவிட்ட விஷயம்' என்று க.நா. சுப்ரமணியம் குறிப்பிடுகிறார். (புதுமையும் பித்தமும். புதுமைப்பித்தன் முழுக்கதைத் தொகுதி. ஐந்திணைப் பதிப்பகம். முன்னுரை. 1987)

"தமிழ்ச்சிறுகதை வளர்ச்சியில் அளவுக்கு மிஞ்சிய சோதனைகள் செய்து உருவகத்தில், உள்ளடக்கத்தில், கற்பனையில் என்று பல்வேறு சமயங்களில், பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு அவருக்குப் பின் வந்த படைப்பாளர் பலர் அவர் வழியைப் பின்பற்றும் பக்தர்களாக உருவாக்கியது புதுமைப்பித்தனின் சிறுகதை மேதைமை" என சிட்டி-எம். சிவபாதசுந்தரம் இரட்டையர் மதிப்பிடுகின்றனர். (தமிழ்ச்சிறுகதை வரலாறு.)

இரண்டாம் தலைமுறை மதிப்பீடுகள்

'தமிழ் வாழ்வைப் புரிந்துகொள்வதற்குப் புதுமைப்பித்தன் ஆற்றியுள்ள பங்கு மிக முக்கியமானது. அவருடைய மொழி, மரபின் ஜீவனையும் மண்ணின் சாரத்தையும் இணைத்தது. படைப்புக்கு வலு சேர்க்க உதவிய அவரது ஆற்றல்கள் பல்வேறு தளங்களைச் சார்ந்தவை. இலக்கியம், புராணம், சமயம், ஜாதி,சமூகம், குடும்பம் போன்ற எந்தத் தளத்தில் செயல்படும்போதும் அந்தத் தளத்திற்குரிய வாசனைகளை ஏற்றி மிகுந்த நம்பகத்தன்மையை அவரால் வாசகனின் மனத்தில் உருவாக்கிவிட முடிகிறது. அவரது படைப்புகள் தமிழ்க் கலையின் சாதனை என்று பெருமைப்படும் வகையில் இருக்கின்றன.' என்று சுந்தர ராமசாமி மதிப்பிடுகிறார்.

"வ.வே.சு ஐயரால் தொடங்கப் பெற்ற சிறுகதை மரபு, புதுமைப்பித்தனிடத்து தமிழாகி, தமிழ் உரைநடையின் சிகரமாகி, அகில உலகிற்கும் தமிழின் பெருமையைக் காட்டி நிற்கிறது" என கார்த்திகேசு சிவத்தம்பி மதிப்பிடுகிறார்."

மூன்றாம் தலைமுறை மதிப்பீடுகள்

"புதுமைப்பித்தனின் இலக்கியத்தளம் மிக விரிவானது. திகில் கதைகள், வேடிக்கைக் கதைகள், தத்துவக்கதைகள், மிகை யதார்த்தக்கதைகள், உருவகக் கதைகள், இயல்பு சித்தரிப்புக் கதைகள் என்று பல்வேறு வகைகளில் அவர் கதைகளை எழுதியுள்ளார். அக உத்வேகத்தின் சாத்தியங்களை மட்டுமே நம்பி எழுதும் பாணி புதுமைப்பித்தனுடையது. கதைவடிவம், நடை ஆகியவை பற்றித் தனி கவனமேதும் எடுத்துக் கொள்ளவில்லை. அவரது சிறந்த படைப்புகள் எழுதும் கணத்தில் உருவாகும் தன்னிச்சையான வல்லமையுடன் உள்ளன" என்கிறார் ஜெயமோகன்.

நான்காம் தலைமுறை மதிப்பீடுகள்

"தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் அவருக்கு முன்னோடிகளோ, தடங்களோ இல்லை. அப்படி இல்லாததும் அவருக்கு அநுகூலமாக அமைந்தது அவரது இலக்கிய அழகியலை "மாற்றுப்பார்வை" என்பதாக வரையறுக்கலாம்" என்று சு. வேணுகோபால் குறிப்பிடுகிறார்.

ஐந்தாம் தலைமுறை மதிப்பீடுகள்

'அறிவினால் வழிநடத்தப்படும் படைப்புலகம் புதுமைப்பித்தனுடையது. ஜோடனையாக அல்லாமல் தன்னை அறிவின் பிரதிநிதியாக மிகத்துல்லியமாக அவர் மாற்றிக் கொண்டார் என்பது உண்மையே என்றாலும் அந்த லட்சியவாதமே அவர் படைப்புலகுக்கு பாத்தி கட்டிவிடுகிறது' என்று சுரேஷ் பிரதீப் குறிப்பிடுகிறார்.

புதுமைப்பித்தன் பற்றி எழுதப்பட்ட நூல்கள்

- புதுமையும் பித்தமும்: ஆளுமை - படைப்பு - விவாதம் - க. நா. சுப்ரமண்யம்
- புதுமைப்பித்தன் வரலாறு - தொ.மு.சி. ரகுநாதன்
- புதுமைப்பித்தன்: சில விமர்சனங்களும் விஷமத்தனங்களும் - தொ. மு. சி. ரகுநாதன்
- இந்திய இலக்கியச் சிற்பிகள் - புதுமைப்பித்தன் - வல்லிக்கண்ணன் (சாகித்திய அகாடமி, 1987)
- புதுமைப்பித்தன் ஆளுமையும் ஆக்கங்களும் (கட்டுரை)
- புதுமைப்பித்தன்: ம மரபை மீறும் ஆவேசம் - சுந்தர ராமசாமி (2006) (தொகுப்பாசிரியர்: ராஜமார்த்தாண்டன்)
- புதுமைப்பித்தன் கதைகள்: சு.ரா. குறிப்பேடு
- புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும் - எம். வேதசகாயகுமார்
- புதுமைப்பித்தனும் கயிற்றரவும் - ராஜமார்த்தாண்டன்

- புதுமைப்பித்தன் எனும் பிரம்மராஷஸ் - ராஜ் கௌதமன் (நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்)
- இலக்கிய முன்னோடிகள் 'முதல்சுவடு' - ஜெயமோகன் (நற்றிணை பதிப்பகம், 2003)
- புதுமைப்பித்தனுக்குத் தடை - சுகுமாரன் (தொ-ர்)
- புதுமைப்பித்தன் கதைகள்: அகலமும், ஆழமும் - வே.மு. பொதியவெற்பன்
- புதுமைப்பித்தன் பன்னோக்குப் பார்வை - விஜயபாஸ்கரன் (தொ-ர்)
- புதுமைப்பித்தன் உதிர்த்த முத்துக்கள் - முல்லை முத்தையா
- வேடிக்கை மனிதர் புதுமைப்பித்தன் - முல்லை முத்தையா
- புதுமைப்பித்தன் இலக்கிய சர்ச்சை 1951-52 - எம். எஸ். ஸ்ரீலக்ஷ்மி
- புதுமைப்பித்தனின் சம்சார பந்தம் - கமலா புதுமைப்பித்தன்
- கடைசி நாட்களில் புதுமைப்பித்தன் - எஸ். சிதம்பரம்
- புதுமைப்பித்தன் பற்றி ரகுநாதன் - இளசை மணியன் (தொ-ர்)
- புதுமைப்பித்தன் கனவும் உளப் பகுப்பாய்வும் - தி.கு. இரவிச்சந்திரன்
- புதுமைப்பித்தன் களஞ்சியம் - (பதிப்பாசிரியர் ஆ.இரா.வேங்கடசலபதி)
- புது தில்லியில் புதுமைப்பித்தன் கருத்தரங்கு 1987 - (பதிப்பாசிரியர் ஸ்ரீநிவாச கோபாலன்)

இலக்கிய இடம்

புதுமைப்பித்தன் தமிழ் நவீன இலக்கியத்தின் முதன்மை முன்னோடி என்று கொள்ளத்தக்கவர். அதற்கான காரணங்களை இப்படி வரையறை செய்யலாம்

- தமிழ்ச் சிறுகதையின் எல்லா சாத்தியக்கூறுகளையும் முயன்றுபார்த்து சிறந்த முன்னுதாரணங்களையும் உருவாக்கியவர் அவர்.யதார்த்தச் சித்தரிப்பு, உருவகக் கதை, பகடிக்கதை, துப்பறியும் கதை, பேய்க்கதை, புராண மறு ஆக்கம், வரலாற்றுப்புனைவு, மிகையதார்த்தம், நேர்கோடற்ற

புனைவுமுறை, நாட்டாரியலை புனைவுக்கு பயன்படுத்துதல் என எல்லா வகைமைகளிலும் அவர் படைப்புகளே முன்னுதாரணங்கள். புதுமைப்பித்தன் மறைந்து அரைநூற்றாண்டுக்குப்பின் உருவான மாய யதார்த்தம் போன்ற புனைவுமுறைகளுக்குக் கூட அவர் எழுத்தில் முன்னுதாரணங்கள் உள்ளன.

- நவீன இலக்கியம் என்பது உயர்ந்த மனிதர்களையும், உயர்ந்த இலட்சியங்களையும் உருவாக்குவது மட்டும் அல்ல என்றும் அன்றாடவாழ்க்கையையும், மானுடத்தின் இருண்ட ஆழங்களையும் எழுதுவதும் அதன் பணியே என்றும் தமிழிலக்கியச் சூழலில் நிறுவியவர் புதுமைப்பித்தன். சமூகவிமர்சனத்தன்மையே நவீன இலக்கியத்தின் அடிப்படைப் பண்பு என்று காட்டியவர்.
- நவீன இலக்கியம் மரபிலுள்ள மெய்யியல்தரிசனங்களையும் தத்துவத்தையும் கூட சுதந்திரமாக மறுபுனைவுசெய்யும் ஆற்றலும் உரிமையும் உடையது என்றும், அதன் வழியாக அது மரபை புத்தாக்கமே செய்கிறது என்றும் தன் படைப்புகள் வழியாக நிறுவியவர்.
- ஓர் இலக்கிய ஆளுமையாக நிலைகொள்வதும் இலக்கியவாதியின் கடமையே என்று தன் வாழ்க்கையின் வழியாக நிறுவியவர். சமரசமற்ற விமர்சனத்தன்மை கொண்டிருந்தவர். அதிகாரங்கள்,அமைப்புகள் ஆகியவற்றுக்கு எதிராக இருந்தது மட்டுமல்ல தன் காலகட்டத்தின் இலட்சியவாதத் தன்மைகொண்டிருந்த அரசியல் மற்றும் சமூக இயக்கங்களுடன் இணைந்துகூட செயல்பட மறுத்துவிட்டவர்.தன் படைப்புள்ளத்தை நம்பி தனிமனிதனாகவே நிலைகொண்டவர். தமிழ்ச்சூழலில் படைப்பிலக்கியவாதியின் தனித்தன்மையும் நிமிர்வுமே முதன்மையானவை என்னும் எண்ணம் அவரிடமிருந்தே உருவாகியது.

சுந்தர ராமசாமி நவீனத் தமிழிலக்கியத்தின் இரண்டு தொடக்கப்புள்ளிகளாக சி.சுப்ரமணிய பாரதியார் புதுமைப்பித்தன் இருவரையும் முன்வைக்கிறார். பாரதியார் இலட்சியக் கனவுகளை முன்வைத்தவர். சமூக, அரசியல் இயக்கங்களுடன் இணைந்து செயல்பட்டவர். புதுமைப்பித்தன் தனிமனிதனாக மட்டுமே நின்றவர், விமர்சனப்பார்வை கொண்டவர். மணிக்கொடி முன்னோடிகளில் ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன் போன்றவர்கள் பாரதியின் வழிவந்தவர்கள் ஆயினும் நவீனத்தமிழிலக்கியத்தின் அடுத்த கட்ட தொடர்ச்சி புதுமைப்பித்தனை முன்னோடியாகக் கொண்டவர்களிடமிருந்தே உருவாகியது என்று சுந்தர ராமசாமி மதிப்பிடுகிறார் (புதுமைப்பித்தனின் மனக்குகை ஓவியங்கள்)

படைப்புகள்

கவிதைகள்

- திரு ஆங்கில ஆசான் தொண்டரடிப்பொய்யாழ்வார் வைபவம்
- மூனாவருணாசலமே மூடா
- இணையற்ற இந்தியா
- செல்லும் வழி இருட்டு

சிறுகதைகள்

- அகல்யை
- செல்லம்மாள்
- கோபாலய்யங்காரின் மனைவி
- இது மிஷின் யுகம்
- கடவுளின் பிரதிநிதி
- கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்
- படபடப்பு
- ஒரு நாள் கழிந்தது
- தெரு விளக்கு
- காலனும் கிழவியும்
- பொன்னகரம்
- இரண்டு உலகங்கள்

- மனித யந்திரம்
- ஆண்மை
- ஆற்றங்கரைப் பிள்ளையார்
- அபிநவ் ஸ்நாப்
- அன்று இரவு
- அந்த முட்டாள் வேணு
- அவதாரம்
- பிரம்ம ராக்ஷஸ்
- பயம்
- டாக்டர் சம்பத்
- எப்போதும் முடிவிலே இன்பம்
- ஞானக் குகை
- கோபாலபுரம்
- இலக்கிய மம்ம நாயனார் புராணம்
- 'இந்தப் புரவி'
- காளி கோவில்
- கபாடபுரம்
- கடிதம்
- கலியாணி
- கனவுப் பெண்
- காஞ்சனை
- கண்ணன் குழல்
- கருச்சிதைவு
- கட்டிலை விட்டிறங்காக் கதை
- கட்டில் பேசுகிறது
- கவந்தனும் காமனும்
- கயிற்றரவு
- கேள்விக்குறி
- கொடுக்காப்புளி மரம்
- கொலைக்காரன் கை
- கொன்ற சிரிப்பு
- குப்பனின் கனவு
- குற்றவாளி யார்?
- மாயவலை
- மகாமசானம்
- மனக்குகை ஓவியங்கள்
- மன நிழல்
- மோட்சம்
- 'நானே கொன்றேன்!'
- நல்ல வேலைக்காரன்
- நம்பிக்கை
- நன்மை பயக்குமெனின்

- நாசகாரக் கும்பல்
- நிகும்பலை
- நினைவுப் பாதை
- நிர்விகற்ப சமாதி
- நிசமும் நினைப்பும்
- நியாயம்
- நியாயந்தான்
- நொண்டி
- ஒப்பந்தம்
- ஒரு கொலை அனுபவம்
- பால்வண்ணம் பிள்ளை
- பறிமுதல்
- பாட்டியின் தீபாவளி
- பித்துக்குளி
- பொய்க் குதிரை
- 'பூசனிக்காய்'அம்பி
- புரட்சி மனப்பான்மை
- புதிய கூண்டு
- புதிய கந்த புராணம்
- புதிய நந்தன்
- புதிய ஒளி
- ராமனாதனின் கடிதம்
- சாப விமோசனம்
- சாளரம்
- சாமாவின் தவறு
- சாயங்கால மயக்கம்
- சமாதி
- சாமியாரும் குழந்தையும் சீடையும்
- சணப்பன் கோழி
- சங்குத் தேவனின் மர்மம்
- செல்வம்
- செவ்வாய் தோஷம்
- சிற்பியின் நரகம்
- சித்தம் போக்கு
- சித்தி
- சிவசிதம்பர சேவுகம்
- சொன்ன சொல்
- சுப்பையா பிள்ளையின் காதல்கள்
- தனி ஒருவனுக்கு
- தேக்கங் கன்றுகள்
- திறந்த ஜன்னல்
- திருக்குறள் குமரேச பிள்ளை

- திருக்குறள் செய்த திருகூத்து
- தியாகமூர்த்தி
- துன்பக் கேணி
- உணர்ச்சியின் அடிமைகள்
- உபதேசம்
- வாடாமல்லிகை
- வாழ்க்கை
- வழி
- வெளிப்பூச்சு
- வேதாளம் சொன்ன கதை
- விபரீத ஆசை
- விநாயக சதுர்த்தி
- தமிழ் படித்த பெண்டாட்டி

மொழிபெயர்ப்புகள்

- ஆஷாட பூதி
- ஆட்டுக் குட்டிதான்
- அம்மா
- அந்தப் பையன்
- அஷ்டமாசித்தி
- ஆசிரியர் ஆராய்ச்சி
- அதிகாலை
- பலி
- சித்திரவதை
- டைமன் கண்ட உண்மை
- இனி
- இந்தப் பல் விவகாரம்
- இஷ்ட சித்தி
- காதல் கதை
- கலப்பு மணம்
- கனவு
- காரையில் கண்ட முகம்
- கிழவி
- லதீபா
- மகளுக்கு மணம் செயது வைத்தார்கள்
- மணிமந்திரத் தீவு
- மணியோசை
- மார்க்ஹீம்
- மிளிஸ்
- முதலும் முடிவும்
- நாடகக்காரி
- நட்சத்திர இளவரசி

- ஓம் சாந்தி! சாந்தி!
- ஒரு கட்டுக்கதை
- ஒருவனும் ஒருத்தியும்
- பைத்தியகாரி
- பளிங்குச் சிலை
- பால்தஸார்
- பொய்
- பூச்சாண்டியின் மகள்
- ராஜ்ய பாதை
- ரோஜர் மால்வினின் ஈமச்சடங்கு
- சாராயப் பீப்பாய்
- சகோதரர்கள்
- சமத்துவம்
- ஷெஹர்ச்சாதி - கதை சொல்லி
- சிரித்த முகக்காரன்
- சுவரில் வழி
- தாயில்லாத குழந்தைகள்
- தையல் மிஷின்
- தந்தை மகற்காற்றும் உதவி
- தெய்வம் கொடுத்த வரம்
- தேசிய கீதம்
- துன்பத்திற்கு மாற்று
- துறவி
- உயிர் ஆசை
- வீடு திரும்பல்
- ஏ படகுக்காரா!
- யாத்திரை
- எமனை ஏமாற்ற
- யுத்த தேவதையின் திருமுக மண்டலம்
- தர்ம தேவதையின் துரும்பு

பிற ஆக்கங்கள்

- பிரேத மனிதன் - மேரி ஷெல்லி
- ஷேக்ஸ்பியர் நாடகங்கள்

பிற படைப்புகள்

- சிற்றன்னை (குறுநாவல்)
- ஆண்மை

- நாரத ராமாயணம்

அரசியல் நூல்கள்

- ஃபாசிஸ்ட் ஜடாமுனி
- கப்சிப் தர்பார்
- ஸ்டாலினுக்குத் தெரியும்
- அதிகாரம்

கடிதங்கள்

- கண்மணி கமலாவுக்கு-புதுமைப்பித்தன் கடிதங்கள், சாந்தி பிரசுரம் (தொகுப்பு: இளையபாரதி)

புதுமையும் பித்தமும்

க. நா. சுப்ரமண்யம்

https://www.azhisi.in/2023/04/1.html



புதுமைப்பித்தன் கதைகள் எல்லாவற்றையும் ஒரே நூலாக வெளியிட்டுப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையில் வெளிவருகிற புஸ்தகம் இது. அவர் எழுதிய கதைகளில் மிகச் சிறந்தவையெல்லாம் இதில் அடங்கியிருக்கின்றன. தொண்ணூற்றுச் சொச்சம் கதைகளில் ஒரு முப்பதுக்கும் அதிகமாகவே சிறந்த கதைகளாகவும், இன்னும் 30 கதைகளுக்கு அதிகமாக நல்ல கதைகளாகவும், மற்றவை சாதாரண தரத்தில் அமைந்தவை என்றும் பொதுவாகச் சொல்லலாம். இந்தப் புத்தகத்தில் அடங்காமல் விட்டுப்போன புதுமைப்பித்தன் எழுதிய சிறுகதைகள் சில - ஒன்றிரண்டு இருக்கலாம். அதிகம் போனால்

நாலைந்தும் இருக்கலாம் - அவை கிடைத்தால் அவற்றையும் மறுபதிப்பில் சேர்த்துக்கொள்வார்கள் பிரசுரகர்த்தாக்கள் என்று நாம் நம்பலாம்.

சிறுகதைகள் மட்டும் எழுதவில்லை புதுமைப்பித்தன். சில ஓரங்க நாடகங்கள், மற்றும் இலக்கியப் பொதுக்கட்டுரைகள், வேலூர் வெ. கந்தசாமிப்பிள்ளை என்ற புனைபெயரில் சில கவிதைகள், இவை தவிர பல மொழிபெயர்ப்புகள் (அனேகமாகச் சிறுகதைகள், 'பிரேத மனிதன்' என்கிற மேரி ஷெல்லியின் விஞ்ஞான நாவல், குப்ரினின் 'யாமா'வில் ஒரு பகுதி. இவற்றை மொழிபெயர்த்தார். அவருக்கு ஆங்கிலம் தவிர வேறு ஐரோப்பிய மொழிகள் தெரியாது என்பதனால் இவற்றையெல்லாம் ஆங்கில மொழி மூலம்தான் மொழிபெயர்த்தார்.) இவை தவிர 'ஃபாஸிஸ்ட் ஜடாமுனி' என்று முஸ்ஸாலோனி என்கிற இத்தாலிய சர்வாதிகாரியைப் பற்றி ஒரு ஜீவிய சரித்திரம், மற்றும் பல சந்தர்ப்பங்களில் பல அரசியல் கட்டுரைகள் ('சூறாவளி'யில் இரண்டாவது உலகப்போர் வருமுன் வாராவாரம் ஐந்து மாதங்களுக்கு மேல் எழுதிய 'அங்கே' என்கிற ஐரோப்பிய அரசியல் அரங்கக் கட்டுரைகள் குறிப்பிடத்தக்கன.) மற்றும் பல புது நூல்கள் பற்றித் 'தினமணி' மற்றும் சில பத்திரிகைகளில் அவ்வப்போது ஆணித்தரமான மதிப்புரைகள்! 'ரசமட்டம்' என்ற பெயரில் கல்கி கண்டனக் கட்டுரைகள், ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் ('உலக அரங்கு' என்கிற பெயரில்), பல நண்பர்களுக்கு எழுதிய இலக்கியத்தரமான கடிதங்கள் முதலியவற்றை அவர் எழுதியிருக்கிறார்.

'மேன் ஆப் லெட்டர்ஸ்' என்று குறிப்பிடத்தக்க அளவில் அவர் பல துறைகளிலும் செயல்பட்டிருக்கிறார். கொஞ்ச காலம்தான் உயிர் வாழ்ந்தார். நாற்பத்தியிரண்டு வருஷங்களே உயிர் வாழ்ந்த அவர் இலக்கியத்தில் செயல்பட்ட காலம் பதினைந்தே ஆண்டுகள்தான் என்றாலும் அவர் எழுத்துகள் சாதனையிலும், விஸ்தீரணத்திலும், ஆழத்திலும் அதிகமானவைதான். உத்தியோக வாழ்க்கையில் பெரும்பகுதியும், தினசரிச் செய்திகளை மொழிபெயர்ப்பது, அதற்காக அந்த நாட்களில் பொதுவாகப் பலருக்கும் கிடைத்தது போல 30, 40 என்ற மாதச் சம்பளம், கிடைத்த தேதியில் பெறுவது - இதுதான் வாழ்க்கை முறையாக அவருக்கு அமைந்தது. காரைக்குடியில் 'ஊழிய'னில் சில காலம் சேவைக்குப் பிறகு சென்னை வந்து டி. எஸ். சொக்கலிங்கம் கோஷ்டியில் சேர்ந்து பல ஆண்டுகள் 'தினமணி'யிலும், சில ஆண்டுகள் 'தினசரி'யிலும் பணி செய்தார். கடைசி நாலைந்து ஆண்டுகளில் செய்திப் பத்திரிகை வேலையிலிருந்து விடுதலை பெற்று 'சோதனை' என்று இலக்கியத்திற்கு ஒரு பத்திரிகை நடத்தவேண்டுமென்றும், சினிமாவில் சேர்ந்து சாதனைகள் புரியவேண்டுமென்றும் கனவுகள் கண்டார். 'பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ்' என்று அவரே சினிமா எடுப்பதாக ஆரம்பித்து சரிப்பட்டு வராமல், எம். கே. தியாகராஜ பாகவதர் நடித்த கடைசிப் படமான 'ராஜமுக்தி'க்கு வசனம் எழுதினார். பத்திரிகை வேலையைவிட அதிலும் அதிகமாகப் பணம் வந்ததாகத் தெரியவில்லை.

'ராஜமுக்தி' படத்திற்காகப் புனா போய்விட்டுத் திரும்பித் தமிழ்நாட்டுக்கு வந்தபோது, உடல்நிலை ஏற்கெனவே மோசமானது மிகவும் கெட்டுவிட்டது. திருவனந்தபுரத்தில் அவர் கடைசி நாட்கள் ஆஸ்பத்திரியில் கழிந்தன. சிதம்பரம்

என்ற ஒரு திருவனந்தபுரம் நண்பரும், சிதம்பர ரகுநாதனும் உடனிருந்து கடைசிவரை உதவியதாகத் தெரிகிறது. இடையில் ஜெமினி ஸ்டூடியோ வாசனுக்காக எழுதிய 'ஔவையார்' சினிமா ஸ்கிரிப்ட் இலக்கியத்தரமாக அமைந்தும் ஏற்றுக்கொள்ளப்படாததைக் குறிப்பிட வேண்டும். சினிமாவில் அசாதாரணமானது, மேன்மையானது எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்பது அன்றுமுதல் இன்றுவரை தொடருகிற ஒரு நிலைமை.

இப்படியெல்லாம் பார்க்கும்போது, தன் நாற்பத்தியிரண்டாவது வயதில், 1948இல் இறந்துவிட்ட சொ. விருத்தாசலம் என்பவர் - ஒல்லியான மனிதர், பற்களும், மார்பு எலும்புகளும் எண்ணிவிடக்கூடிய அளவில் வெளியில் தெரியும். குழந்தைப் பிள்ளைத்தனமாக, காரணமில்லாமலேகூட கடகடவென்று சிரிக்கும் சுபாவம் படைத்த இந்த மனிதர் - முழுவாழ்வு வாழ்ந்தவர் என்றுதான் சொல்லவேண்டும். ஆண்டுகள் கணக்கில் இல்லாவிட்டாலும், நிறைவில், சாதனைகளில், தெரிந்த நண்பர்கள் மனங்களில், அவரை வாசித்த வாசகர்கள் உள்ளங்களில், புரிந்துகொண்டவர்கள் நினைப்பில் பூரண வாழ்வு வாழ்ந்தவர் என்றே சொல்லவேண்டும். (புதுமைப்பித்தன் செய்த காரியங்களில் ஒன்றை மேலே சொன்ன பட்டியலில் குறிப்பிட விட்டுவிட்டேன். மூன்று ஆண்டுகள் பொறுப்பேற்று அவர் 'தினமணி'யில் ஆண்டு மலர்கள் தயாரித்தார். வளரும் தமிழ் இலக்கியத்திற்கு வழிகாட்டிய மலர்கள் அவை. அவையும் புதுமைப்பித்தன் சாதனைகளில் குறிப்பிடப்படவேண்டியவை.)

நான் 1935 - 36இல் தமிழில் எழுதத் தொடங்கலாமா என்று தயங்கிக்கொண்டிருந்த காலத்தில் எனக்கு எழுதத் தெம்பு கொடுத்தது புதுமைப்பித்தனும், அவர் கதைகளும்தான் என்று சொல்வது மிகையே ஆகாது. தமிழில் நான் முதன்முதல் படித்த சிறுகதை வத்தலகுண்டு எஸ். ராமையா என்பவர் 'காந்தி' பத்திரிகையில் எழுதிய 'வார்ப்படம்' என்ற கதை. அப்போது வத்தலகுண்டு என்கிற கிராமம் தமிழ்நாட்டில் இருப்பது எனக்குத் தெரியாது. ராமையா என்பதும் தெலுங்குப் பெயரோ என்று எனக்குச் சந்தேகம். அந்தக் கதையைப்போல என்னாலும் தமிழில் எழுத இயலும் என்று தோன்றியது. இரண்டாவது படித்த கதை புதுமைப்பித்தனின் 'சிற்பியின் நரகம்'தான் என்று நினைக்கிறேன். ராமையாவின் 'மணிக்கொடி'யில் 1935இல் வெளிவந்தது. அதைப்போன்ற கதை உலகத்துச் சிறுகதைகளிலேயே வெகுசிலதான் தேடினாலும் கிடைக்கும் என்று எனக்குத் தோன்றியது. நான் ராமையாவைத் தேடிக்கொண்டு போய் டக்கர்ஸ் லேனில் 'மணிக்கொடி' ஆபீஸில் அவரைச் சந்தித்தபோது அவர் 'சிற்பியின் நரகம்' சிறுகதை வந்திருந்த 'மணிக்கொடி' இதழ் ஒன்றை எனக்குப் படிக்கத் தந்தார். கலையென்பது மத விஷயத்துக்கு ஆதாரமாக உபயோகப்பட வேண்டும் என்கிற மரபுக் கருத்தைக் கண்டித்தும், கண்டிக்காமலும், ஓரளவுக்கு இரண்டு சித்தாந்தங்களுமே சரி என்று சொல்லுகிற மாதிரியும் அமைந்திருந்தது கதை. மேலெழுந்தவாரியாகப் படிக்கும்போது மதத்துக்கு அனுசரணையாகக் கலை இருப்பது சரியல்ல என்று ஆசிரியர் சொல்வது போலவும் இருந்தது. இதை மறுத்து நான் ஒரு கதை எழுதவேண்டுமென்று எண்ணினேன். ஆனால் ஏழாண்டுகளுக்குப் பிறகுதான் ('தெய்வ ஜனனம்') 1942இல் எழுத முடிந்தது. அதில் புதுமைப்பித்தனிலிருந்த பூரணத்துவம் வரவில்லை; த்வனியும் வரவில்லை என்பது எனக்குத் தெரிகிறது.

முதல் முதலாக நான் புதுமைப்பித்தனைச் சந்தித்தது எனக்கு நினைவிருக்கிறது. 1936இல் ஜனவரி மாதத்தில் ஒருநாள் கடைசி வாரம் என்று நினைக்கிறேன் - பல்லும் பவிஷுமாக, திருநெல்வேலி ஜிப்பா (?) - அது திருநெல்வேலி ஜிப்பாதானா என்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது. இப்போது சிதம்பர ரகுநாதனும் அதேமாதிரி ஜிப்பா அணிவதை நான் பார்க்கிறேன் - கடகடவென்று கல்லை ஏதோ பித்தளைப் பாத்திரத்தில் உருட்டிவிட்டது போன்ற அடித்தொண்டையிலிருந்து வந்த ஒரு சிரிப்பு. "உங்கள் கதை 'சிற்பியின் நரகம்' நன்றாக இருக்கிறது" என்று நான் சொன்னவுடன், "அப்படித்தான் இருக்கும் ராசாவே! என் கதைகள் எல்லாமே நன்றாகத்தான் இருக்கும்" என்று அகங்காரமில்லாத ஒரு நிச்சயத்துடன் அவர் சொன்னது எனக்குப் பிடித்திருந்தது. என் கையில் காரல் சப்பக் [Karel Capek] என்கிற ஸெக்கோஸ்லோவேக்கிய நாவலாசிரியர் எழுதிய நாவல் இருந்தது. 'அப்சலூட் அட் லார்ஜ்' [Absolute at Large] என்கிற நாவல் என்று எண்ணுகிறேன். 'நான் படித்துப் பார்க்கிறேன்' என்று என் அனுமதியைக் கேட்காமலே என் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டுவிட்ட அவருடைய நெருக்கமும் எனக்குப் பிடித்திருந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

அந்த முதல் சந்திப்புக்குப் பிறகு ஒரு நூறு தடவைகளாவது 'சொ.வி'.யைச் சந்தித்திருப்பேன் என்று தோன்றுகிறது. சந்திப்புகள் குறுகிய கால அளவிலும், சில சந்திப்புகள் மணிக்கணக்கான நேரமும், சில நாட்கள் கணக்கிலும் இருக்கும். இடையில் ஒரு மூன்று மாதங்கள் 222, அங்கப்ப நாயக்கன் தெருவில் நானும், அவரும், கி.ரா.வும் ஒரே அறையில் வசித்தோம். வாசுதேவபுரத்தில் (திருவல்லிக்கேணி) அவர் குடியிருக்கும்போது இருபது, முப்பது நாட்கள் அவர் வீட்டிலே சாப்பிட்டுக்கொண்டு சென்னையில் தங்கியிருந்திருக்கிறேன். நடுவில் ஒரு தடவை தஞ்சாவூரில் நான் இருக்கும்போது இரண்டு, மூன்று தினங்கள் என் மேலவீதி வீட்டில் அவர் வந்து தங்கியிருந்தார். அந்தச் சந்தர்ப்பம் அவர் திருவனந்தபுரம் போய்விட்டுச் சென்னை திரும்புகிற வழியில். சாப்பிடும்போது "பருப்பும், சாதமும் போதும்" என்று அவர் சொன்னது பற்றி என் மனைவி இன்னமும் ஆச்சரியப்பட்டுச் சொல்வதுண்டு. இடையில் ராமசாமி (மண்ணடித்) தெருவில், ராயப்பேட்டை ஹைரோடில் என்று அவர் குடியிருந்த பல வீடுகளிலும் சென்று அவரைச் சந்தித்திருக்கிறேன். புரசைவாக்கம் ஹைரோடில் 45, 46இல் 'சந்திரோதயம்' நடந்துகொண்டிருந்தபோது பழைய 'மணிக்கொடி' பகைப்புலத்தை மீண்டும் கொண்டுவர முடியுமா என்று பார்ப்பதற்காக, புதுமைப்பித்தன், பி. எஸ். ராமையா, பெரிய கிட்டப்பா, கணேச சாஸ்திரி, ராமரத்னம் முதலியவர்களைக்

கூப்பிட்டு ஒரு விருந்திற்குப் பிறகு பேசிக்கொண்டிருந்தது ஞாபகமிருக்கிறது. இந்த விருந்திற்கு ஆர்யாவும், கி.ரா.வும் வராதது ஒரு குறை என்று புதுமைப்பித்தன் சொன்னது நினைவிற்கு வருகிறது.

நான் கடைசியாக அவரைச் சந்தித்ததை நினைவுபடுத்திப் பார்த்துக்கொள்ள முயலுகிறேன். 'சந்திரோதயம்' பத்திரிகை நின்றுபோன பிறகு 1947இல் ராயப்பேட்டை ஹைரோடில் அவருடன் பேசிக்கொண்டு உட்கார்ந்திருக்கும்போது அவர் மனைவி கமலாம்பாள் ஊரிலில்லை. ஒய்.எம்.ஐ.ஏ. ரெஸ்டாரண்டில் (சமீப காலத்தில்தான் அது ராயப்பேட்டை ஹைரோடில் புதுக்கிளை திறந்திருந்தது என்று எண்ணுகிறேன்) காபி சாப்பிட்டுவிட்டுத் திரும்பி வீட்டுக்கு வந்து பேசிக்கொண்டிருந்தோம். தன் மனைவியை அழைத்துக்கொண்டு வர திருவனந்தபுரத்திற்கு அன்று மாலை கிளம்பப்போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார். அதற்குள் கமலாம்பாளே ஊரிலிருந்து வந்துவிடவே நான் அரைமணிநேரம் இருந்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு போய்விட்டேன். அதற்குப் பிறகு இரண்டு வருஷத்திற்குள் அவர் இறந்துவிட்டார். புனேயிலிருந்து உடல்நலம் மோசமாகி அவர் திரும்பியதும், திருவனந்தபுரம் போனதும், நண்பர்கள் பி. வி. லோகநாதனும், சிதம்பர ரகுநாதனும் சொல்லி, எழுதித் தெரிந்துகொண்டதுதான்.

1936 முதல் 1947 வரையில் பழக்கம். சற்று நெருங்கிய பழக்கம் என்றுதான் சொல்லவேண்டும். இலக்கிய நண்பர்கள் என்கிற அளவில் நெருங்கிப் பழகினோம் என்று சொல்லலாம். அப்போதைய தமிழ் எழுத்தாளர்கள் பலருடனும் எனக்கு ஏற்பட்ட பழக்கத்தைவிட அதிக நெருக்கமானதாகத்தான் புதுமைப்பித்தனுடன் நான் பழக நேர்ந்தது. இந்த அளவிற்கு நெருக்கமான பழக்கம் எனக்கு 1942க்குப் பிறகு மௌனியுடனும் ஏற்பட்டது. எங்கள் பேச்சு அனேகமாக படித்த நூல்களையும், எழுதிய விஷயங்களைப் பற்றியும்தான் இருக்கும். சக எழுத்தாளர்களைப்பற்றி அதிகமாகப் பேச்சோ, வம்போ வளர்த்ததாக ஞாபகமில்லை. எங்களிடையே இலக்கிய உலக வம்பு மட்டும் போதுமான அளவு இருக்கும். 1937-38இலேயே மௌனியை, 'சுவாரஸ்யமான மனிதர்; நீங்கள் சந்திக்க வேண்டும்' என்று அவர் சொன்னது நினைவிருக்கிறது.

புஸ்தகங்கள் படிப்பதில் எங்கள் இருவருக்கும் ஆர்வம் அதிகம். ஆனால், புதுமைப்பித்தன் படிக்கிற முறையே அலாதியானது. நான் எந்தப் புஸ்தகத்தையும் வரிவிடாமல், ஒரே மூச்சில், ஆரம்ப முதல் இரவு எத்தனை நேரமானாலும் படித்து முடித்துவிட்டுத்தான் படுக்கப் போவேன். சொ.வி. எந்தப் புத்தகத்தையும் முழுதுமாகப் படித்ததாக எனக்கு நினைவில்லை. முதலில் கொஞ்சம், நடுவில் கொஞ்சம், கடைசியில் கொஞ்சம் என்று படித்துவிட்டு நூலின் விஷயத்தைப் பூரணமாகக் கிரஹித்துக்கொண்டுவிடுவார். எனக்கு எந்த நூலையும் முடிக்க நாலு மணிநேரமாவது ஆகும். அவர் ஒரு மணிநேரத்தில் படித்துவிடுவார். ஆனால் படித்த நூலைப்பற்றி அவர் என்னைவிடவும் அதிகமாக விஷயத்தைச் சொல்லுவார் என்பதை நான் கவனித்திருக்கிறேன். இந்தமாதிரிப் படித்துப் புரிந்துகொள்வதற்கும் ஒரு தனி லாவகம், பழக்கம் தேவை என்று எனக்குத் தோன்றும்.

புதுமைப்பித்தன் எழுதுவதும் கனவேகம்தான். இரண்டு மூன்று நீளக்கதைகள் எழுதும்போது நான் கூட இருந்து பார்த்திருக்கிறேன். எழுத்து அவர் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் படிப்பதற்குச் சிரமமாகத்தான் இருக்கும். அவர் எழுத்தில் நீளக்கோடு போட்டாரானால் 'த' என்று அர்த்தம். சின்னக்கோடு போட்டாரானால் 'க' என்று அர்த்தம். எழுதியதைத் திருப்பிப் படிக்கமாட்டார். 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்', 'காஞ்சனை', 'அன்று இரவு' போன்ற கதைகளை ஒரு மணி, ஒன்றரை மணிநேரத்தில் அவர் எழுதி முடித்துவிடுவதை நான் பார்த்திருக்கிறேன். படித்துப் பார்க்கிறேன் என்று கேட்டால் தரமாட்டார். அவரும் திருப்பிப் படித்துப் பார்க்கமாட்டார். ஏதோ ஓர் இடத்தில், 'என் கதையை முதலில் படிக்கும் வாசகன் நான்தான். அவசரமாக எழுதியதனால் எனக்கே அதில் பல விஷயங்கள் புதுமையாக இருக்கும்' என்று அவர் எழுதியிருக்கிறார். அவருக்கு மட்டுமல்ல, வாசகர்களுக்கும் பலதும் புதுமையாகவும், உன்னதமான கலையாகவும் இருந்தது என்பதுதான் விசேஷம்.

சங்க காலம் என்று தீர்மானமாகாத ஒரு காலத்தைச் சுட்டிக்காட்டுவது போல, மணிக்கொடிக் காலம் என்று சமீப காலத்திய முப்பதுகளில் சில ஆண்டுகளைக் குறிப்பிடுவது பரவலாக வழக்கமாகிவிட்டது. 'மணிக்கொடி' என்கிற பத்திரிகையின் பெயர் அது ஏற்படுத்திய பாதிப்பினாலும், சந்தர்ப்ப விசேஷத்தினாலும் ஒரு குறியீடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வார்த்தையாகிவிட்டது. இன்று திரும்பிப் பார்க்கும்போது அதை ஏற்றுக்கொள்வது அப்படியொன்றும் தவறில்லை என்றுதான் சொல்லவேண்டும். முப்பதுகளில் முழுக்க முழுக்கச் சிறுகதைப் பத்திரிகையாகப் பல நல்ல சிறுகதாசிரியர்களின் எழுத்துகளைத் தாங்கி 'மணிக்கொடி' என்கிற பத்திரிகை, தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் விட்டு விட்டுச் செயல்பட்டது. ஒரு ஐந்தாறு ஆண்டுகள்தான். தமிழ் இலக்கியத்தில் ஒரு புது அலையை உருவாக்க அது போதுமானதாக இருந்தது. குறிப்பிட்ட ஒருசில சிறுகதாசிரியர்கள் அதில் எழுதினார்கள். அந்தக் காலத்தில் சிறுகதைகளையோ, நாவல்களையோ மற்றும் எந்த உரைநடை இலக்கியங்களையுமோ இலக்கியமாகக் கருதுவது பெரும்பாலாக வழக்கத்தில் வரவில்லை. அந்தக் காலத்தில் டாக்டர் பட்டங்களோ சாம்ராட் சக்ரவர்த்திப் பட்டங்களோ இருக்கவில்லை. சிலர் தொடர்ந்து மணிக்கொடியில் எழுதி விஷயம் தெரிந்த வாசகர்கள் சிலரிடையே பெரும்பெயர் பெற்றார்கள். இப்படி எழுதியவர்களில் ந. பிச்சமூர்த்தி, கு. ப. ராஜகோபாலன், புதுமைப்பித்தன், மௌனி, இவர்களுடன்,

‘மணிக்கொடி’ ஆசிரியர்களான பி. எஸ். ராமையா, கி.ரா. இருவரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். தவிர, முன்னும், பின்னுமாக இன்னும் பலரும் எழுதினார்கள். சந்தர்ப்ப சமய விசேஷமாகவும், தமிழ் இலக்கியத்தில் உள்ள ஆர்வம் காரணமாகவும் இவர்கள் ‘மணிக்கொடி’யின் பக்கங்களில் ஒன்று சேர்ந்தார்களே தவிர மற்றபடி வாழ்க்கை நோக்கங்களிலோ, போக்குகளிலோ இவர்களிடம் ஒற்றுமை ஒன்றும் கிடையாது. எனினும், பொதுவாகச் சுதந்திரத் தாகம் (அவ்வளவாக அரசியலில் வெளிப்படாதது), இலக்கிய வேகம் (ஆங்கிலப் படிப்பினால் பெரும் அளவுக்குத் தூண்டிவிடப்பட்டது), லட்சிய நோக்கங்கள் (வாழ்க்கையே லட்சியங்களுடன் வாழப்பட வேண்டும், சில லட்சியங்கள் கைகூடியும் வரலாம்) என்றெல்லாம் இவர்களுக்கு ஒரு ஆதார ஸ்ருதி அமைந்தது. பொதுவாக வாழ்க்கையில் பொருளாதாரக் கஷ்டங்களை அனுபவிக்கப் பிறந்தவர்கள் என்பதும் இவர்களைப் பற்றிச் சொல்லக்கூடிய அடிப்படை விஷயம். அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு பார்வைகளுடன், பலதிறப்பட்ட செயல்திறன்களுடன், வித்தியாசப்பட்ட மண்ணில் பிறந்து வளர்ந்து பெரியவர்களானவர்கள்; சென்னை நகரில் குடியேறியவர்கள். இந்தக் கோஷ்டியினரின் சராசரி வயது முப்பது முதல் நாற்பது வரையில் – அதாவது, அந்தக் காலத்தில்.

சிவனைத் தமிழ் செய்வதற்கு நாயன்மார்கள் போல, சிறுகதையைத் தமிழ் செய்வதற்குப் பிறந்தவர்கள் போல இவர்கள் தோன்றினார்கள். இவர்களுடைய பார்வை வீச்சு சிறுகதைகளுக்கு அப்பாலும் சென்றது என்றாலும், தங்கள் சிறுகதைகளையே மிகச் சிறப்பான சாதனைகளாகக் கருதியவர்கள் இவர்கள்.

தமிழிலக்கிய மறுமலர்ச்சியில் முதல் அலை நாவலில் தோன்றியது. 19ஆம் நூற்றாண்டில் வேதநாயகம் பிள்ளையும், ராஜம் அய்யரும், அ. மாதவையாவும் முதல் மூன்று தமிழ் நாவல்களைச் சிருஷ்டித்துத் தமிழுக்குப் புது உரம் தர முயன்றார்கள். இருபதாம் நூற்றாண்டின்

ஆரம்பத்திலே தமிழ் நாவல் ஓரளவுக்குத் தேக்கம் கண்டுவிட்டது. ஆனால் சுப்ரமண்ய பாரதி மூலம் கவிதையிலும், வ.வே.சு. ஐயர் மூலம் இலக்கிய விமர்சனத்திலும், சிறுகதையிலும் உரம் பெற்றது. பாரதியார் தந்த தமிழ் வேகமும், வ.வே.சு. ஐயர் தந்த ஊக்கமும்தான் 'மணிக்கொடி' எழுத்தாளர்களுக்கு ஆதாரமாக அமைந்தன என்று சொல்லவேண்டும். மரபுக் கவிதைகளிலும் ஜோதி ராமலிங்கம், கோபாலகிருஷ்ண பாரதியார் என்று தொடங்கிய மறுமலர்ச்சி சுப்ரமண்ய பாரதியில் உச்சக்கட்டத்தை எட்டியது. தமிழ் வசனத்திலும், கவிதையிலும், வசன கவிதையிலும் பாரதியாரின் புரட்சி மிக மிகச் சிறப்பானதாக, இன்றுவரை தாக்கமுள்ளதாகச் செயல்படுவதை நாம் காண்கிறோம். ஆனால் சுப்ரமண்ய பாரதியாருடன் ஒப்பிடக்கூடிய கவிகள் ஒருவரும் அவருக்குப் பின் தமிழில் தோன்றவில்லை. ஆனால், எழுத்துக்கு அவர் தந்த வேகம் இன்னும் தொடர்கிறது.

சுப்ரமண்ய பாரதியாரின் சமகாலத்தவராகிய வ. வே. சுப்ரமண்ய ஐயர் ஆரம்பக் காலத்திலிருந்தே இலக்கியச் சிந்தனைகளை வளர்த்து வந்தவர் என்றாலும் அரசியல் காரியங்களில் – அதுவும், முக்கியமாகப் புரட்சி வேலைகளில் – ஈடுபட்டிருந்ததால் அவரால் போதுமான அளவு ஆரம்பக் காலத்தில் இலக்கியச் சாதனை காட்ட இயலவில்லை. புதுவை வந்து பாரதியாரின் நேர்சந்தியும் ஏற்பட்ட பின், கட்டாய அரசியல் ஓய்வின் காரணமாகவும், இலக்கிய விமர்சனம், சிறுகதை என்கிற இரண்டு துறைகளிலும் ஈடுபாடும் சாதனையும் காட்டினார். மிகவும் சிறப்பான சாதனைகள் அவை. பாரதியாரும் மாதவையாவும் கதைகள் எழுதினார்கள். சிறுகதைகள் என்று உருவம் தெரிந்து எழுதவில்லை. வ.வே.சு. ஐயர், சிறுகதை என்று உருவம் தெரிந்து ஐரோப்பிய இலக்கியத்தில், முக்கியமாக ஃபிரெஞ்சு மொழி இலக்கியத்தில் தமக்கு இருந்த பரிச்சயத்தினால் தமிழில் சிறுகதைகளை உருவாக்கிக் காட்டினார். வ.வே.சு. ஐயரின் 'மங்கையர்க்கரசியின் காதல்' என்கிற நூலில் உள்ள சிறுகதைகள் மணிக்கொடிக்காரர்களுக்கும், அவர்களுக்குப் பின்னர் வந்த தமிழ்ச்

சிறுகதாசிரியர்களுக்கும் முன்மாதிரியாக அமைந்தன. வ.வே.சு. ஐயர் ஏற்படுத்திய சிறுகதை அலை முப்பதுகளில் பலம் பெற்றது. இருபதாண்டுகளுக்குப் பிறகு, ஐம்பதுகளில்தான் அவரது விமர்சனப் போக்குத் தமிழர்களிடையே உரம் பெற்றது; பயன் தந்தது என்று சொல்லவேண்டும். முப்பதுகளில் சிறுகதைகள் எழுதியவர்கள் பலரும் – இதற்கு மௌனி ஒரு விதிவிலக்காக இருக்கலாம். அவர் பாரதியையோ, வ.வே.சு. ஐயரையோ தன் கதைகளை எழுதிய காலத்தில் படித்திருந்ததாகத் தெரியவில்லை – மற்ற எல்லோருமே வ.வே.சு. ஐயரின் ‘குளத்தங்கரை அரசமரம்’ என்கிற கதையைத் தங்களுக்கு ஆதர்சமான சிறுகதையாகக் கருதினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இதைக் கு.ப.ரா.வும் புதுமைப்பித்தனும் குறிப்பிட்டே சொல்லியிருக்கிறார்கள்.

தமிழில் சிறுகதை அலை முப்பதுகளில் தோன்றியதற்குப் பல காரணங்கள் கண்டு சொல்லலாம். சுதந்திரத் தாகம் இலக்கியத் துறைகளில் படிந்து சிறுகதையாக உருப்பெற்றது என்று புதுமைப்பித்தன் ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார். ஆங்கில இலக்கியப் படிப்பு அதற்கு முந்திய இருபது முப்பது வருஷங்களில் தமிழர்களிடையே பரவி, தமிழர்களுக்கு இலக்கிய அளவில் பயன் தரத் தொடங்கியிருந்தது. தமிழ்நாட்டில் புதுவிதமான பத்திரிகைகள் தோன்றி பொழுதுபோக்குக்கும், அறிவு விருத்திக்கும் அஸ்திவாரம் போட்டுக்கொண்டிருந்தன. சில ஆசிரியர்கள் பொதுஜன விருப்பத்தைத் திருப்திப்படுத்துகிற அளவில் பல நல்ல, மற்றும் மட்டரகமான ஆங்கிலக் கதைகளைத் தமிழ்ப்படுத்தித் தந்துகொண்டிருந்தார்கள். முப்பது, முப்பத்தைந்து வயதை எட்டியிருந்த ஒருசில தமிழ் அன்பர்களுக்கு ஆங்கிலத்தில் உள்ளது போல பல இலக்கியத் துறைகளிலும் செயலாற்றித் தமிழுக்குப் பெருமை சேர்க்கவேண்டும் என்கிற ஆவல் பரவலாக ஏற்பட்டது. மரபுவழி வந்த தமிழ் இலக்கியங்கள் பொதுஜனத்தையோ, ஆங்கிலம் படித்து ஆங்கில, ஐரோப்பிய இலக்கியம் அறிந்தவர்களையோ எட்டவில்லை. பண்டைத் தமிழிலக்கியம் பண்டிதர்களின்

சொத்தாகவே இருந்தது. இதோடெல்லாம் பாரதியாரும், வ.வே.சு. ஐயரும் தந்த வேகமும் சேர்ந்துகொண்டது. இதெல்லாம் காரணமாகவே ஆங்கிலம் மூலம் உலக இலக்கியம் படித்து, இலக்கிய ஆர்வத்தினால் தூண்டப்பட்டவர்களாக 'ஒன்றுக்கும் உதவாதவர்களாகப் போய்விட்ட' ஒரு கோஷ்டியினருக்கு இலக்கியம், இலக்கியச் சிருஷ்டி என்பது மன ஆறுதல் தருவதாக இருந்தது. குடும்பம், சுற்றத்தார், உறவினர்கள் எல்லோராலும் 'ஒன்றுக்கும் உதவாதவர்களாக'க் கருதப்பட்டவர்கள்தான் பிச்சமூர்த்தி, கு.ப.ரா, புதுமைப்பித்தன், மௌனி முதலியவர்கள்.

இப்படிச் சொல்லுகிறபோது ஏதோ இதில் ஒரு கேலி தொனிக்கிற மாதிரித் தோன்றினாலும், உண்மையில் இருந்த நிலைமை இதுதான். 1900இல் பிறந்த பிச்சமூர்த்தி பி.ஏ. படித்து, பி.எல்'லும் பாஸ் செய்து சுதந்திரத் தாகம், லட்சிய வேகம், இலக்கிய மோகம் இவற்றினால் உந்தப்பட்டவராக, வக்கீலாகப் பொருளீட்ட முடியாதவரானார். கு. ப. ராஜகோபாலனும் பி.ஏ. படித்துவிட்டு, கொஞ்ச காலம் சொல்ப சம்பளத்தில் குமாஸ்தாவாக இருந்து, அந்த அடிமை வாழ்வு பிடிக்காமல், கண் உபத்திரவமும் சேரவே வேலையை உதறிவிட்டு, இலக்கியத்தை நம்பிப் பிழைக்க முடியுமா என்று பார்க்க ஆரம்பித்தார். இருவரும் கும்பகோணத்துக்காரர்கள். கு.ப.ரா. சிறிது காலம் கஷ்டப்பட்டு நாற்பத்தியிரண்டாவது வயதில் இறந்துவிட்டார். இன்னொரு கும்பகோணத்துக்காரரான மௌனி (இயற்பெயர், கல்லூரிப் பெயர் எஸ். மணி) முந்திய இருவரும் செய்வதை நான் இவர்களையும் விட அதிகச் சிறப்புடன் செய்யமுடியும் என்று, அதைச் சவாலாக ஏற்றுக்கொண்டு எழுத ஆரம்பித்துப் பதினைந்து, இருபது சிறுகதைகள் மட்டும் எழுதிவிட்டு, மேலும் இலக்கிய உந்துதலோ பணம் தேடும் நோக்கமோ இல்லாததால் எழுதுவதை நிறுத்திவிட்டவர். மௌனியின் சூழ்நிலையிலும் ஏகப்பட்ட அதிருப்தி. அவரும் 'ஒன்றுக்கும் உதவாத' கோஷ்டியைச் சேர்ந்தவர்தான். ஒரு சகோதரர் 'ஐ.ஏ.ஏ.எஸ்' பரீட்சை கொடுத்து, தேறி, பெரிய

உத்தியோகத்துக்குப் போய்விட்டார். இவரும் பரீட்சைக்குப் போனார்; தேறவில்லை, பி.ஏ. ஹானர்ஸ் என்று போனவருக்கு பி.ஏ. டிகிரிக்குத்தான், கணக்கில், சிபாரிசு கிடைத்தது. பலவிதமான, பணக்கார மைனர் மற்றும் மேஜர் நடவடிக்கைகளினாலும் அவருடைய தகப்பனாரின் நிர்தாட்சண்யமான திட்டுகளுக்கும் விரோதத்துக்கும் பாத்திரமானவர். காஃப்காவின் தகப்பனார் 'கரப்பான்பூச்சி' என்று அவரை ஆத்திரமாகத் திட்டுவாராம். மௌனியின் தகப்பனாரின் வசவுகள் கிராமியமாக, துடைத்துவிடக்கூடாதவையாக இருக்கும். எனக்குச் சிதம்பரத்தில் மில் வைத்திருந்த மௌனியின் தகப்பனார் சாமாவையரைத் தெரியும்.

இந்தக் கோஷ்டியுடன் அவர்களின் பின்புலம் தெரிந்தோ, தெரியாமலோ - தெரியாமல் என்றுதான் சொல்லவேண்டும் - வந்து சேர்ந்துகொண்டவர் புதுமைப்பித்தன் என்கிற சொ. விருத்தாசலம். திருநெல்வேலிக்காரர். மற்றவர்களைப் போலவே இவரும் பி.ஏ. படித்தவர்தான். ஆனால், பி.ஏ. டிகிரியை அவர் வாங்கிக்கொண்டதாகத் தெரியவில்லை. பரீட்சை தேறிய பின் தகப்பனாருடன் சண்டையிட்டு வீட்டை விட்டு வெளியேறிவிட்டதால் தேவையான ரூபாயைக் கொடுத்து டிகிரியை அவரால் வாங்க முடியாமல் போய்விட்டது என்று எண்ணுகிறேன். வீட்டில் இளைய தாயார். புதுசாகக் கல்யாணமான புது மனைவி. சொ.வி.க்கும், அவர் மனைவிக்கும் உள்ள நியாயமான ஆசைகள்கூடத் தகப்பனாரின் கூரையின் கீழ்ப் பூர்த்தியாகச் சந்தர்ப்பம் ஏற்படாது என்ற நிலை வந்தவுடன் உத்தியோகம் தேடி முதலில் காரைக்குடிக்கும், பின்னர் சென்னைக்கும் அவர் மனைவி கமலாம்பாளுடன் வந்துவிட்டதாகத் தெரிகிறது. சற்றேறக்குறைய இருபதாண்டுகள் சென்னையில் வாழ்ந்தும் (வாழாமல் வாழ்ந்தும் என்று சொல்லலாமா?) திருநெல்வேலியின் பிடிப்பு அவரை விட்டு விலகிவிட்டதாகக் கடைசிவரையில் சொல்ல முடியாது. சிந்தனைகளிலும், பேச்சிலும், வார்த்தைகளிலும், செயல்களிலும் புதுமைப்பித்தன் கடைசிவரை திருநெல்வேலிக்காரராகவேதான் இருந்தார் என்பது என் நினைப்பு. இந்த விஷயத்தில் அவர் மற்ற

மூவரிலிருந்தும் சற்று வித்தியாசப்பட்டவர் என்று சொல்லலாமா? உதாரணமாக, கு. ப. ராஜகோபாலன் தன் கடைசிக்காலம் வரையில் கும்பகோணத்திலேயே இருந்தார் – சென்னை தற்காலிக வாசம் போக, மற்றக் காலமெல்லாம். என்றாலும் அவரிடம் கும்பகோணத்தின் பிடிப்பு சற்றுக் குறைவு என்றுதான் சொல்லவேண்டும். வீட்டில் தெலுங்கு பேசுபவர். எப்பொழுதோ வந்து தமிழ்நாட்டில் குடியேறிவிட்ட தெலுங்குப் பரம்பரையில் வந்தவர். அதனாலேயே அவருக்கு ஒரு 'காஸ்மாபாலிடன்', கும்பகோணத்துக்கு அப்பாற்பட்ட பார்வையும் இருந்தது என்று சொல்லலாமா? இதெல்லாம் ஆழ்ந்து யோசித்துப் பார்க்கவேண்டிய விஷயங்கள். தெரிந்துகொள்ள முடியுமானால் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள். இவையெல்லாம் பற்றி நமக்கு முன்னோடியான ஆராய்ச்சிப் புத்தகங்கள் கிடைப்பதில்லை.

பிச்சமூர்த்தியின் தகப்பனாரும் ஒரு நாடகக் கலைஞர். அதேபோல புதுமைப்பித்தனின் தகப்பனாரும் – அவரே சொல்லிக்கொண்டபடியும், சொ.வி.யே சில சமயம் கேலியாகச் சொன்னது போலவும் – ஒரு எழுத்தாளர்தான். தாசில்தாராக அவர் சர்க்கார் உத்தியோகம் பார்த்துக்கொண்டு குறும்பர், இருளர் என்கிற பின்தங்கிய மக்கள் பற்றி ஆராய்ந்து, அவர்கள் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் பற்றிப் பல தகவல்கள் சேர்த்து லண்டனில் 'லூஸாக்' கம்பெனி பிரசுரமாக மூன்று பாகங்களில் ஒரு நீளமான நூல் எழுதியிருக்கிறார். நன்றாகவே எழுதப்பட்ட நூல்; நான் அதைப் படித்துப் பார்த்திருக்கிறேன். எழுதுகிற போக்கும், அறிவும் 'சொ.வி.'க்கு அவருடைய தகப்பனாரிடமிருந்து பிதுரார்ஜிதமாக வந்ததுதான் என்று சொல்வதில் எதுவும் தவறிருக்க முடியாது. பிதுரார்ஜிதமாக, மற்றத் தன் சம்பாத்யமான சொத்துக்களைத் தன் இந்தப் பிள்ளைக்குத் தரமாட்டேன் என்று கடைசிவரை சொல்லி, தான் இறந்த பிறகு அவருக்கு உரிய பகுதி கிடைக்க ஏற்பாடு செய்திருந்தார் தகப்பனார் என்று கேள்வி. அந்தச் சொத்து முன்னாலேயே

கிடைத்திருந்தால், முன்னாலேயே செலவு செய்துவிட்டிருப்பார் சொ.வி. அவர் கடைசிக் காலத்தில், நாற்பது வயதில் சொத்து கிட்டியபோது அதைப் 'பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ்' என்கிற அவருடைய சினிமா கம்பெனிக்குச் செலவிட்டார் என்றும் கேள்வி. நான் அச்சமயம் சிதம்பரத்தில் இருந்தேன். சொ.வி. உடன் இருந்து அதைப் பார்க்கவில்லை. நான் மீண்டும் அவரைச் சந்திப்பதற்குள் கிடைத்த பொருள் கரைந்துவிட்டது என்று எண்ணுகிறேன்.

எழுதும் திறம் அவருக்குப் பிதுரார்ஜிதமாக வந்தது என்று சொன்னாலும், அவருடைய இலக்கிய அறிவும் மேதைமையும் எப்படி ஏற்பட்டன என்பதை நிர்ணயிக்கப் போதுமான அளவில் அவர் இளம்பருவத்துத் தகவல்கள் கிடைக்கவில்லை. என்னென்ன நூல்கள் படித்தார் என்பதோ, எந்த மாதிரியான நண்பர்களைத் தேடிக்கொண்டு அவர் போனார் என்பதோ போதுமான அளவில் தெரியவில்லை. அவர் காலேஜ் லெக்சரர் ஒருவரைப் பற்றி அவர் பின்னால் ஜோக் அடிப்பதைக் கேட்டிருக்கிறேன். "பொன்னுசாமிப் பிள்ளையும் முஸ்ஸலோனி மாதிரி ஒரு டிக்டேடர்தான். முஸ்ஸலோனி இத்தாலிக்கு டிக்டேடர். பொன்னுசாமிப் பிள்ளை ஈஸ் ஏ டிக்டேட்டர் ஆப் நோட்ஸ்" என்று சொல்லுவார். இந்தப் பொன்னுசாமிப் பிள்ளையை நான் 1957, 58இல், நாகர்கோயிலில் சந்தித்திருக்கிறேன். அவர் மூலமாகத் தெரிந்துகொண்ட சில சிறு தகவல்களைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல இயலாது.

1925 இலிருந்து 35 வரையில் தமிழ்நாட்டில் கல்லூரியில் ஆங்கிலம் படித்த மாணவர்களுக்கு ஆங்கில இலக்கியத்தில் ஷெல்லி, கீட்ஸ், டென்னிஸன், டிக்கன்ஸ், ஜேன் ஆஸ்டின், ஜார்ஜ் எலியட், ஸர் வால்டர் ஸ்காட், ஹாஸ்லிட், லாம்ப், ஜான்ஸன், அடிஸன், ஸ்டீல், தாமஸ் ஹார்டி, ஜார்ஜ் மெரிடித், ஆர். எல். ஸ்டீவென்ஸன் போன்ற ஆசிரியர்கள் தெரியும். மற்றும் எட்கர் ஆலன் போ, நெத்தேனியல் ஹாதார்ன், வாஷிங்க்டன் இர்வின், எமெர்ஸன் முதலியவர்களையும்

தெரியும். கல்லூரிக்கு அப்பால் படிப்பது ஜி. டபிள்யூ. எம். ரெய்னால்ட்ஸ், மிஸஸ். ஹென்றி வுட், மேரி கோர்ரலி போன்ற நாவலாசிரியர்கள். சொ.வி.யும் தன் கல்லூரி நாட்களில் இவைகளெல்லாம் படித்துத்தான் இருக்கவேண்டும். விக்டர் ஹியூகோவும், கை. டி. மாப்பஸானும், ஆண்டன் செக்கோவும், டாஸ்தாவ்ஸ்க்யும், டர்கனீவும் ஆங்கிலக் கல்லூரிப் படிப்பில் வராதவர்கள். ஆனால், இவர்களையும் படிப்பில் ஆர்வமிருந்த அந்தக்கால மாணவ மாணவியர் படித்திருக்கக்கூடும். சொ.வி.யினுடைய இளவயது நண்பர்கள் யாராவது அவர் என்னென்ன படித்தார், தங்களுடன் என்னென்ன விஷயங்களைப்பற்றி விவாதித்தார் என்று எங்காவது எழுதி வைத்திருந்தால் உபயோகமாக இருக்கும். அப்படி எதுவும் குறிப்புகள் எழுதி வைத்திருப்பதாகத் தெரியவில்லை. இனிமேல், இந்த மாதிரியான விஷயங்கள் பற்றித் தகவல் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

காரைக்குடியில் 'ஊழியன்' பத்திரிகையில் உழைத்து, பத்திரிகைத் தொழிலை சொ.வி, கற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. பத்திரிகைத் தொழிலில் சிரமங்கள் பல உண்டு என்றாலும் ஓரளவுக்கு உலக நடப்பைச் சரிவர அறிந்துகொள்ள அது உதவுகிறது என்றுதான் சொல்லவேண்டும். பலதரப்பட்ட விஷயங்களையும் பற்றி சுப்ரமண்ய பாரதியார் பரவலாக எழுதியதற்குக் காரணம் அவர் பத்திரிகையாளராக இருந்ததுதான். இதேமாதிரி ஆரம்பக் காலப் பத்திரிகைத் தொழில் அனுபவம் சொ.வி.க்கும் உதவியிருக்க வேண்டும். அந்தக் காலத்தில் பிரபலமாகிக்கொண்டிருந்த பொழுதுபோக்குப் பத்திரிகையான 'ஆனந்த விகட'னிலும் அவர் ஏதோ எழுதி வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. சிறுகதைகள் எழுதுவது என்பதும், அரசியல், நாட்டு நடப்பு விஷயங்கள் பற்றிக் குறிப்புகள் எழுதுவதுபோலப் பத்திரிகைகளில் இன்றியமையாத விஷயம். பல மோபாஸான் கதைகளைப் புதுமைப்பித்தன் தழுவி 'ஊழிய'னில் எழுதி வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தழுவல் பழக்கம் அவரைக் கடைசிவரை

விடவில்லை என்றும் சொல்லலாம். தழுவலை ஒரு இலக்கிய முறையாகவே, ஒரு வெற்றிகரமான பத்திரிகைக் கோஷ்டி அப்பொழுது கைக்கொண்டிருந்தது. (கல்கி, துமிலன், தேவன், நாலி). சொல்லியும், சொல்லாமலும், பல நல்ல கதைகளையும், மட்டமான கதைகளையும் தழுவல் செய்து தங்கள் பெயரில் போட்டுக்கொள்வது என்பது தமிழ்நாட்டில் ஒரு சாதாரணமான பழக்கமாக இருந்தது. ஒருசிலர் மூல ஆசிரியர்களின் பெயர்களைச் சொன்னார்கள். பலர் மூல ஆசிரியர்களின் பெயர்களைச் சொல்லாமலே, எல்லாம் தங்கள் சொந்தக் கற்பனையே போலப் பாசாங்கு பண்ணிப் புகழ் சம்பாதித்துக்கொண்டிருந்தார்கள். புதுமைப்பித்தன் பிற்காலத்தில் தழுவல்காரர்களையும், தழுவல் கட்சியையும் வன்மையாகக் கண்டித்தாலும்கூட அவசியம் நேர்ந்தபோது; தன் சொந்தக் கற்பனை ஓடாத சில சமயங்களில் சில கதைகளைப் பெயர் சொல்லாமலும்கூடத் தழுவி எழுதியதுண்டு. ஆனால், தழுவல்காரர்களின் கற்பனை வறட்சியைப் போலப் புதுமைப்பித்தனுக்குக் கற்பனை வறட்சி இல்லை என்பது நிதர்சனமாகத் தெரிகிற ஒரு காரியம். கதை சொல்லும் மேன்மையும், சொந்தக் கற்பனை ஆட்சியும் புதுமைப்பித்தனுக்குக் கைவந்திருப்பது போலத் தமிழில், இந்த ஒரு நூறாண்டில், வேறு ஒருவருக்கும் இருந்ததில்லை என்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுவிட்ட விஷயம். இந்தத் தொகுப்பில் உள்ள கதைகள் எல்லாமே அவர் கற்பனைத் திறனுக்கும், கதை சொல்லும் மேன்மைக்கும் சான்றுகள். ஆகையினால், அவர் செய்த சில தழுவல்களைச் சுட்டிக்காட்டி அவரும், தழுவல்களால் மட்டும் பெயர்பெற்ற மற்றவர்களும் ஒன்றுதான் என்று சொல்லுகிற ஒரு கூட்டம் சமீபகாலத்தில் ஏற்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இந்தக் கூச்சல், விமர்சனமல்ல. இதற்கு அர்த்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தழுவல் தவிர வேறு எந்தவிதமான எழுத்தும் இல்லாதவர்களையும், புதுமைப்பித்தனையும் சமமாகக் காட்டுவது ‘விஷமமான’ ஒரு முயற்சி.

ஆங்கில அறிவு தந்த இலக்கியப் பரிச்சயத்துடன் சொ. விருத்தாசலத்திற்குத் திருநெல்வேலிக்காரரர் என்பதனால் (தஞ்சாவூர் ஜில்லாக்காரர்களுக்கு, அதுவும் முக்கியமாகப் பிராம்மணர்களுக்கு, இல்லாத ஒரு தமிழ் மரபு அறிவு ஏற்பட்டிருந்தது என்பது தெரிகிறது. சொ.வி. விஷயத்தில் இது அதிகமாகச் சைவச் சார்பு பெற்றது என்பது வெளிப்படை. நான் அவரைச் சந்தித்த காலத்தில் அவர் சித்தர் பாடல்கள் – முக்கியமாகச் சிவவாக்கியர் – மற்றும் கம்பராமாயணம் – முக்கியமாக யுத்த காண்டம், – மற்றும் கலிங்கத்துப்பரணி, திருமந்திரம் என்று பேசிக்கொண்டிருப்பார். என்னைச் சில சமயங்களில் யுத்த காண்டத்திலுள்ள பாடல்களைப் படிக்கச் சொல்லுவார். எனக்கு அப்போதெல்லாம் தமிழில் அவ்வளவாகப் பரிச்சயம் கிடையாது. சந்தி பிரித்து யுத்த காண்டத்துப் பாடல்களைப் படிக்க நான் சிரமப்படுவது கண்டு என்னைக் கேலி செய்வார். ஆனால், ஒருபோதும் சந்தி பிரித்துச் சொல்லித்தரமாட்டார். அதற்கு அவருக்குப் பொறுமை கிடையாது. நானாகச் சந்திப் புதிரை விடுவிக்கவில்லை என்றால், “போதும் படித்தது. மூடிவிடு புஸ்தகத்தை” என்பார்.

தமிழில் இருந்தது போலவே அவருக்கு, பேச்சிலும் எழுத்திலும், சமஸ்கிருத வார்த்தைகள் பிரயோக விஷயத்திலும் ஒரு சாதுரியம் இருந்தது கண்டு நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். இதுவும் திருநெல்வேலிக்காரர்களின் தினசரி வாழ்க்கை மரபிலிருந்து வந்ததுதான் என்று எண்ணுகிறேன். தமிழில் எழுதுகிற வேகமோ, கல்வியறிவோ, போதுமானது இல்லாத காலத்தில் நான் ‘ஆட்சேபம்’ என்று எழுதுவதா, ‘ஆட்சேபனை’ என்று எழுதுவதா என்று சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கின்ற பொழுது, இந்த மாதிரியெல்லாம் சந்தேகம் இல்லாதவராக அவர் இருந்தது எனக்கு அதிசயமாகவே தோன்றிற்று. இதே மாதிரியான ஒரு லாவகத்தை அவர் ஆங்கிலத்திலிருந்து தமிழ்ப்படுத்துவதிலும் காட்டியதாக அவருடைய சக பத்திரிகையாளர்கள் (‘தினசரி’, ‘தினமணி’) எனக்குச்

சொன்னதுண்டு. சில சமயம் பெருமையாகவும் சொல்லுவார்கள். சில சமயம் சொ.வி.யைக் கேலி செய்கிற மாதிரியும் சொல்லுவார்கள்.

நான் அவரோடு பழகிய காலத்தில் அவர் படித்த நூல்கள் சில எனக்கு நினைவுக்கு வருகின்றன. நாவல், சிறுகதைகள் இவை பற்றி மட்டும் சொல்லுகிறேன். முதல் தடவை அவரை 'மணிக்கொடி' காரியாலயத்தில் சந்தித்தபோது என் கையிலிருந்த 'அப்ஸல்யூட் அட் லார்ஜ்' என்கிற காரல் சப்பக் நாவலைப் 'படித்துவிட்டுத் திருப்பித் தருகிறேன்' என்று வாங்கிப் போனார். அவரிடம் போன என் புஸ்தகங்கள் எதுவும் என்னிடம் திரும்பி வந்ததில்லை. அந்தக் காலத்தில் புஸ்தகங்களை, புதுசானாலும், பழசானாலும் அதிக விலை கொடுக்காமல் வாங்கமுடியும். என் தகப்பனார் தயவில் நான் ஒரே நூலை இரண்டு பிரதியாக வாங்குவதற்கும் சக்தி படைத்தவனாக இருந்தேன். கொடுத்த புஸ்தகங்களைத் திருப்பி வாங்கிக்கொள்ள வேண்டுமென்று அந்தக் காலத்தில் நான் அதிகமாகக் கவலைப்பட்டதில்லை. அதுவும் சொ.வி.க்குக் கொடுப்பதில் திருப்திதான்.

ஸ்டீபன் ஸ்வெய்க் (Stephen Zweig), அர்னால்ட் ஸ்வெய்க் (Arnold Zweig) இரண்டு ஜெர்மன் நாவல், சிறுகதை ஆசிரியர்களை எனக்கு அறிமுகம் செய்துவைத்தவர் புதுமைப்பித்தன்தான். அதேபோல வில்லியம் ஸராயனின் [William Saroyan] 'த டாரிங் எங் மேன் ஆன் த பிளையிங் டிரப்பீஸ்' [The Daring Young Man on the Flying Trapeze] என்கிற கதைத்தொகுப்பு வெளிவந்ததும் அதை வாங்கிப் படித்துவிட்டு, என்னையும் வாங்கிப் படி என்று அவர் உற்சாகமூட்டியது எனக்கு நினைவிருக்கிறது. டி. எஃப். போவிஸ் [T. F. Powys] என்பவர் எழுதிய 'பேபில்ஸ்' [Fables] என்கிற சிறுகதைத் தொகுப்பும், 'மிஸ்டர் வெஸ்டன்ஸ் குட் வைன்' [Mr. Weston's Good Wine] என்ற நாவலும் அவர் விரும்பிப் படித்த நூல்கள் என்று சொல்லலாம். 'மிஸ்டர் வெஸ்டன்ஸ் குட் வைன்' என்ற நாவலின்

தாக்கத்தில்தான் ‘கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்’ எழுதப்பட்டது. ஆனால், இரண்டிற்கும் அமைப்பிலும், நோக்கிலும், கருத்திலும் எவ்வளவு வித்தியாசம் என்று இரண்டையும் படித்துப் பார்த்திருப்பவர்களுக்குத் தெரியும். சிறுகதை, நாவல் என்கிற வித்தியாசத்துடன், புதுமைப்பித்தனின் மேதாவிலாசத்தினால் போவிஸின் கிறிஸ்துவக் கடவுள் தென்னாடுடைய சிவனே ஆகிவிடுகிறார்! ஒரு புதிய தத்துவ தரிசனமே உதயமாகிவிடுகிறது புதுமைப்பித்தனின் கதையில். புதுமைப்பித்தனின் மரபுசால் கைவண்ணத்தை இந்தக் கதையில் முழுமையாகக் காண்கிறோம் என்று எனக்குத் தோன்றுகிறது. மரபோடு ஒட்டியே சில புதுமை, புரட்சிகளையும் செய்துகாட்டுகிறார் சொ.வி.. போவிஸின் நாவலில் கிறிஸ்துவ மரபிற்கு அப்பாற்பட்ட விஷயம் எதுவும் இல்லை.

போவிஸ் சகோதரர்களில் இன்னொருவரான லெவலின் போவிஸ் [Llewelyn Powys] என்பவர் எழுதிய ‘எபனி அண்ட் ஐவரி’ [Ebony and Ivory] என்கிற சிறுகதைத் தொகுப்பையும் விரும்பிப் படித்தார் சொ.வி. என்று எனக்குத் தெரியும். புதுமைப்பித்தனுடையதைப் போலவே கசப்புக் கலந்த ஒரு சிரிப்பு லெவலின் போவிஸினுடையது. அந்தத் தொகுப்பில் ஒரு கதை எனக்கு நினைவுக்கு வருகிறது. அதைப் புதுமைப்பித்தனேகூட எழுதியிருக்கலாம் என்று எனக்குத் தோன்றும். புதுமைப்பித்தனின் ‘பாவ’த்தை தத்ரூபமாகக் காட்டுகிற கதை அது. ‘ஸ்பெரிக் லாஃப்டர்’ (Spheric Laughter) என்பது கதையின் தலைப்பு. ‘நக்ஷத்திரங்கள் சிரித்தன’ என்றும் மொழிபெயர்க்கலாம். புயலில் அகப்பட்டுக்கொண்டு, வீடு திரும்ப அவஸ்தைப்பட்ட ஒரு கிராமத்து அழகியை, தெருவோடு போகிற ஒரு வாலிபன் காப்பாற்றி ஜாக்கிரதையாக வீட்டில் கொண்டுபோய்ச் சேர்க்கிறான். முரட்டுக் கணவன் அந்தப் பெண்ணை, “அந்த வாலிபனுடன் ஏன் வந்தாய்?” என்று போட்டு அடிக்கிறான். இதை வெளியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த வாலிபன், ‘இவள் இப்படிக் காரணமில்லாமலே சந்தேகத்தில் அடிபடுவாள் என்று தெரிந்திருந்தால்

நான் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டிருந்திருக்கலாமே... நக்ஷத்திரங்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன' என்று மனம் வருந்துகிறான் என்று கதை. இதுபோலப் பல கதைகள், புதுமைப்பித்தனே எழுதியிருக்கக்கூடிய கதைகள் என்று சொல்லக்கூடியவை பல லெவனின் போவிஸின் 'எபனி அண்ட் ஐவரி' என்ற நூலில் காணக்கிடைக்கின்றன. இதுவும் பெங்குயின் நூலாக வந்த தொகுப்புதான். ஒரு ஆசை அபூர்த்தி, விரக்தி, ஒரு சினிகல் [Cynical] நிர்தாட்சண்யம், தர்மம் என்று சொல்லப்படுவதின் லேசான மறுப்பு – இவை புதுமைப்பித்தனுக்கும், லெவனின் போவிஸிக்கும் பொதுவான விஷயங்கள். லெவனின் போவிஸினால் புதுமைப்பித்தன் பாதிக்கப்பட்டார் என்றுகூடச் சொல்ல முடியாது. ஏனென்றால், சுபாவமாகவே புதுமைப்பித்தனுக்கு உள்ள பார்வையின் ஒரு பகுதியை இந்த ஆங்கில ஆசிரியரும் கொண்டிருந்தார் என்றுதான் சொல்லவேண்டும். இருவரும் வேறு வேறு உலகங்களைப்பற்றி எழுதினார்கள்.

அண்டன் செக்காவ் [Anton Chekhov], எட்கர் ஆலன் போ [Edgar Allan Poe], கை. டி. மாப்பஸான் [Guy de Maupassant] மூவரையுமே புதுமைப்பித்தன் நன்றாகப் படித்திருந்தார். அம்ப்ரோஸ் பெய்ர்ஸ் [Ambrose Bierce], பிரேங் ஆர் ஸ்டாக்டன் [Frank R. Stockton], பிரெட் ஹார்டே [Bret Harte] முதலியவர்களின் சிறுகதைகளைப் படித்து அவை பற்றிப் பல சந்தர்ப்பங்களில் நாங்கள் பேசியிருக்கிறோம். 'கிரேட் ஷார்ட் ஸ்டோரிஸ் ஆப் த வோர்ல்டு' [The Worlds Greatest Short Stories] என்கிற ஒரு நூலும் (இலண்டன்), அதேபோல, அமெரிக்கப் பதிப்பான 'த வோர்ல்டு புக் ஆப் ஷார்ட் ஸ்டோரிஸ்' [The World Book of Short Stories] என்பதில் இருபது பாகங்களில் ஒரு மூன்று பாகங்களும் எங்களுக்கு மூர் மார்க்கெட்டில் மலிவு விலையில் கிடைத்தன. அவற்றில் பல ஸ்பானிய, இத்தாலிய, ஜெர்மன், டர்க்கிஷ், அரபிக் கதைகளைப் படித்து விவாதித்ததும் நினைவிற்கு வருகிறது. இரண்டாவது நூலின் மற்றப் பாகங்களும்

கிடைக்குமோ என்று தேடித் துருவிப் பார்த்ததும் ஞாபகமிருக்கிறது. ஸ்லோகப் [Sologub], ஸ்செட்ரின் [Shchedrin] என்கிற ரஷ்ய ஆசிரியர்களின் உருவகக் கதைகள் பல இரண்டு தொகுதிகளாகக் கிடைத்தன. இந்த மாதிரி 'பேபில்ஸ்' [Fables] எழுதவேண்டுமென்று சொ.வி. ஆசைப்பட்டதும் நினைவிருக்கிறது. ஆனால், அவர் எழுதவில்லை.

சொ.வி.க்கு மிகவும் பிடித்தமான ஆசிரியர்களில் தாமஸ் மான் [Thomas Mann] என்கிற ஜெர்மன் ஆசிரியரும் ஒருவர். 'பட்டன்புரூக்ஸ்' [Buddenbrooks], 'மந்திர மலை' [Magic Mountain] முதலிய நாவல்களுடன், 'ஸ்டோரிஸ் ஆப் திரி டிகேட்ஸ்' [Stories of Three Decades] என்ற சிறுகதைகளையும் பற்றிப் பல நாட்கள் பேசியது நினைவிருக்கிறது. பஜாஸ்ஸோ என்ற ஒரு கோமாளியின் கதை அவருக்கும் எனக்கும் மிகவும் பிடித்ததாக இருந்தது. ஒரு பிரதர் சிஸ்டர் இன்செஸ்ட் கதையையும் ரசித்தது நினைவிற்கு வருகிறது. ஃபிரான்ஸ் காஃப்காவின் [Franz Kafka] கதைகள் ஒரு தொகுப்பு வெளிவந்து கண்ணில் பட்டதும், மூர் மார்க்கெட் வி. ஸி. வெங்கடேசனிடம் இரண்டு பிரதிகள் வாங்கி ஒரு பிரதியைப் புதுமைப்பித்தனிடம் கொடுத்ததும் நினைவில் இருக்கிறது. காஃப்காவின் கதைகளைப் படித்தவுடன் பாராட்டியவர்களில் புதுமைப்பித்தனும் ஒருவர். அந்தக் காலத்தில், 39, 40இல் காஃப்காவின் பெயரோ, மேதமையோ பரவலாகத் தெரிந்திருக்கவில்லை. ஜேம்ஸ் ஜாய்ஸின் [James Joyce] 'டப்ளினர்ஸ்' (Dubliners), 'ஏ போர்ட்ரெய்ட் ஆப் த ஆர்டிஸ்ட் அஸ் ஏ யங் மேன்' [A Portrait of the Artist as a Young Man] என்கிற இரண்டு நூல்களையும் இரண்டு மூன்று தடவைகளாவது படித்திருப்பார் புதுமைப்பித்தன் என்று எண்ணுகிறேன். ஜேம்ஸ் ஜாய்ஸின் 'உலிஸெஸ்' [Ulysses] அப்போதுதான் சென்னையில் கிடைக்க ஆரம்பித்திருந்தது. மாடர்ன் லைப்ரரி ஜைன்ட் பதிப்பில்

வாங்கிப் புதுமைப்பித்தன் படித்துக்கொண்டிருந்ததைப் பார்த்திருக்கிறேன்.

ஹான்ஸ் பாலெடா [Hans Fallada] என்பவர் எழுதிய 'லிட்டில் மேன் வாட் நௌ' [Little Man, What Now?] என்கிற நாவலைச் சொ.வி. பிரமாதமாகப் புகழ்ந்து கேட்டிருக்கிறேன். நானும் படித்து மகிழ்ந்த புஸ்தகம்தான் அது. அதேபோல அதே ஆசிரியரின் 'ஹூ ஒன்ஸ் ஈட்ஸ் அவுட் ஆப் த டின் பௌல்' [Who Once Eats Out of the Tin Bowl] என்கிற நாவலையும், பல சிறுகதைகளையும் பாராட்டி புதுமைப்பித்தன் கூறியதுண்டு. இந்த ஆசிரியர் ஜெர்மானியர். அடால்ப் ஹிட்லரின் நாஜிக் கட்சியை ஆதரித்தவர் என்பதற்காகக் கெட்ட பெயர் பெற்றவர். 1945க்குப் பிறகு இவர் பெயரை யாரும் சொல்லுவதில்லை. ஆனால் மிகவும் சக்தி வாய்ந்த கதாசிரியர். இவர் சிறுகதைகளில் ஒன்றைப் புதுமைப்பித்தன் தன் 'உலகத்துச் சிறுகதைகள்' தொகுப்பில் மொழிபெயர்த்திருக்கிறார். இதேபோல நட் ஹம்ஸன் [Knut Hamsun] என்கிற நார்வீஜிய நாவல், சிறுகதாசிரியரையும் படித்திருந்தார் புதுமைப்பித்தன். இவரும் நாஜி ஆதரவாளராக இருந்தவர்தான்.

ஆங்கில இலக்கியாசிரியர்களின் சிறுகதைகளைத் தாங்கி வந்த 'ஆர்கஸி' (Argosy) என்கிற மாதாந்திரப் பத்திரிகையில் பல ஆங்கில ஆசிரியர்களை மாதாமாதம் படிப்பது என்பது வழக்கம். இந்த 'ஆர்கஸி' இலக்கியத்தர நிர்ணய அளவில் மணிக்கொடிக்காரர்களுக்குப் பொதுவாக மிகவும் உபயோகப்பட்ட பத்திரிகை. அதிகமாக ஆங்கிலப் பழக்கம் இல்லாத ராமையாகூட 'ஆர்கஸி' பத்திரிகையைத்தான் தன் சிறுகதைப் பத்திரிகையான 'மணிக்கொடி'க்கு முன்மாதிரியாகச் சொல்லுவார். அடாஸ் ஹிக்ஸ்லே (Aldous Huxley), ஆர்னால்ட் பென்னட் (Arnold Bennett), ஹில்லைர் பெல்லாக் (Hilaire Belloc), ஈ.வி. லூகாஸ் (E. V. Lucas), ஏ. பி. ஹெர்பெர்ட் (A. P. Herbert), ஜேக்கப்ஸ் (W. W. Jacobs), ஏ. ஈ கப்பார்ட் (A. E.

Coppard) போன்ற பல ஆசிரியர்களின் கதைகளைத் தனிக்கதைகளாகவும், தொகுப்புகளாகவும் படித்திருக்கிறோம். சொ.வி.க்கு பி. ஜி. வுட்ஹவுஸ் [P. G. Wodehouse], ஸ்டீபன் லீகாக் [Stephen Leacock] இருவரையும் அதிகம் பிடிக்காது. சூப்பர்பீஸியல் [Superficial] என்று அவர்களைப் பற்றி அவர் சொல்லுவார். மாறாக எட்கர் வாலஸ் [Edgar Wallace] நாவல்கள் பலவற்றை விரும்பிப் படித்திருக்கிறார். ஜே. பி. பிரிஸ்ட்லே [J. B. Priestley] என்பவர் எழுதிய நாவல்கள், நாடகங்களையும், காலம் பற்றி அவர் கருத்துகளையும் எடுத்துச் சொல்லுவார். 1937-38இல் வெளிவந்த லயனல் பிரிட்டன் [Lionel Britton] என்பவர் எழுதிய 'லவ் அண்ட் ஹங்கர்' [Hunger and Love] என்கிற பெரிய நாவலின் தலைப்பை மாத்திரம் பார்த்துவிட்டு தன் கதை ஒன்றிற்கு அந்தத் தலைப்பை மாற்றி அழகாக அமைத்து உபயோகித்துக்கொண்டார் - 'கவந்தனும் காமமும்' என்பது அவர் கதையின் தலைப்பு. மேரி ஷெல்லியின் [Mary Shelley] 'பிராங்ஸ்டைன்' [Frankenstein] அவருக்கு மிகவும் பிடித்த நூல். அதைச் சுருக்கி தமிழில் 'பிரேத மனிதன்' என்று எழுதியிருக்கிறார். பிரேம் ஸ்டோக்கர் [Bram Stoker] என்கிற அதிக இலக்கியத்தரமில்லாத ஆசிரியர் எழுதிய 'ட்ராகுலா' [Dracula] என்கிற திகில் நாவலைப் பல தடவைகள் படித்திருக்கிறார் என்று எனக்குத் தெரியும். 'ரத்தக் காட்டேரி' என்கிற விஷயத்தைப்பற்றி புதுமைப்பித்தன் ஒரு நிபுணத்துவத்துடன் பேசுவார்! 'செவ்வாய் தோஷம்', 'காஞ்சனை' முதலிய கதைகளில் இந்த விஷயத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். 'ட்ராகுலா' முதல் தடவையாக சினிமாப் படமாக சென்னைக்கு வந்தபோது பல தடவைகள் சொ.வி. போய்ப் பார்த்திருக்கிறார். மினர்வா தியேட்டரில் அது நடந்தபோது அவரும், நானும், கி.ரா.வும் போய்ப் பார்த்தோம். எனக்குப் படம் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆனால், சொ.வி. உற்சாகமாக, அதை நாலாவது தடவை பார்ப்பதாகச் சொன்னது நினைவிருக்கிறது! இதேபோல செரிடன் லிபானு [Sheridan Le Fanu] என்பவருடைய திகில்

கதைகளையும், அவை அப்போது நூலாகச் சென்னையில் கிடைக்காததால் 'ஆர்கஸி' பத்திரிகைகளில் வந்ததைச் சேர்த்து வைத்திருந்தார். திகில் என்கிற அம்சமிருந்தாலும் பிரேம் ஸ்டோக்கரிலோ செரிடன் லிபானுவிலோ புதுமைப்பித்தனின் திகில் கதைகளில் கிடைக்கிற இலக்கிய அனுபவம் கிடைப்பதில்லை என்பதுதான் என் நினைப்பு. எட்கர் ஆலன் போவின் 'பிட் அண்ட் த பெண்டுலம்' [The Pit and the Pendulum], 'லிஜியா' [Ligeia], 'த ஃபால் ஆப் த ஹவுஸ் ஆப் உஷர்' [The Fall of the House of Usher], 'காஸ்க் ஆப் த அம்மாண்டிலேடோ' [The Cask of Amontillado] என்கிற கதைகளில் புதுமைப்பித்தனின் திகில் கதைகளில் கிடைக்கிற இலக்கிய அனுபவம் கிடைக்கிறது என்று சொல்லலாம். கடைசிக் கதையைப் புதுமைப்பித்தனே தனது 'உலகத்துச் சிறுகதைக'ளில் மொழிபெயர்த்துச் சேர்த்திருக்கிறார்.

இந்தப் பட்டியலில், எனக்குத் தெரிந்து, புதுமைப்பித்தன் அந்தக் காலத்தில் படித்த நூல்கள் எல்லாம் அடங்கிவிட்டதாகச் சொல்ல முடியாது. இன்னும் பல ஆசிரியர்கள், நூல்கள் சொல்லலாம். ஆனால், அவசியமில்லை என்று எண்ணுகிறேன். அவருடைய படிப்பு அதன் அளவில் விஸ்தாரமானது. படித்ததைச் சொந்தமாக்கிக்கொள்ளும் சக்தியும் அவருக்கு அதிகமாக இருந்தது என்று சொல்லலாம்.

தன்னோடு சமகாலத்தில் எழுதிய தமிழ் ஆசிரியர்கள் சிலரது சிறுகதைகள் பற்றியும் அவர் தனது கட்டுரைகளில் குறிப்பிட்டிருக்கிறார். முக்கியமாக 'குளத்தங்கரை அரசமரம்', 'நக்ஷத்திரக் குழந்தைகள்', 'சிவசைலம்', 'எங்கிருந்தோ வந்தான்' – இப்படிப் பலவற்றைச் சொல்லியிருக்கிறார். மௌனியைப் பற்றிக் கடைசிவரையில் திடமான நல்ல அபிப்பிராயம் இருந்தது என்பது பலருக்கும் தெரியும். அவர் அபிப்பிராயத்தை மதித்துத்தான் நானே மௌனியைத் தேடிப் பிடித்துப் படிக்க ஆரம்பித்தேன். பின்னர் எழுதத் தொடங்கியவர்களில் சிதம்பர ரகுநாதன், கு. அழகிரிசாமி இவர்கள் 'பிரசண்ட விகட'னில் எழுதி வெளியிட்ட கதைகளை என்னிடம் தந்து,

“படித்துப் பாரும் வேய்! – நம்ம பையன்கள்” என்று சொன்னார் என்பது நினைவில் இருக்கிறது. இது 1940–41இல் என்று எண்ணுகிறேன்.

என் சிறுகதைகளையும், அப்போது வெளிவந்திருந்த சில நாவல்களையும் பற்றியும், பொதுவாக என் எழுத்துக்களைப் பற்றியும் புதுமைப்பித்தன் என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தார் என்பது எனக்குத் தெரியாது. நான் கேட்டுக்கொண்டதில்லை. ‘முதற்சுடர்’, ‘ராகவன்’ என்கிற என் கதைகளைத் ‘தினமணி ஆண்டு மல’ரில் பிரசுரிக்கும்போது அவர் உற்சாகமாகப் பாராட்டினார் – அது வெறும் பதிப்பாசிரியர் தோரணையாகவும், மணிக்கொடி ‘முதல் அத்தியாய’ விவகாரமாகவும் இருக்கலாம். நான் எழுதிய சிறுகதைகளில் ‘வரவேற்பு’ என்பதும், ‘விதியும் மதிப்பும்’ என்பதும் தனக்குப் பிடித்திருந்ததாக என்னிடம் ஒருதரம் தானே சொன்னார். ‘தினமணி ஆண்டு மலர்’களில் நான் எழுதிய ‘இலக்கியச் சோலை’, ‘தமிழில் மறுமலர்ச்சி’ என்கிற ஆரம்ப விமர்சனக் கட்டுரைகளைப் பாராட்டியதுடன், “இதுமாதிரி நிறைய எழுதுங்களேன்” என்று சொன்னதும் ஞாபகம் இருக்கிறது. தாகூரைப்பற்றி நான் ஒரு நூல் எழுத ஒப்புக்கொண்டது பற்றி அவருக்குச் சம்மதமில்லை. அது வெளிவந்ததும் (Alliance) அதைத் தானே நேரடியாகக் கண்டனம் செய்யாமல் வேறு ஒரு பெயரில் மதிப்புரை எழுதினார். ‘ஆண்டாள்’ என்கிற பெயரில் ‘தினமணி ஆண்டு மல’ருக்கு எழுதிக் கொடுத்த கவிதையை மிகவும் பாராட்டியதாக நினைவிருக்கிறது. ‘அழகி’ என்கிற என் முதல் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்ததும் ஒரு பிரதியில் ‘குருவினிடமிருந்து சிஷ்யனுக்கா? சிஷ்யனிடமிருந்து குருவுக்கா?’ என்று எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தேன். அந்தப் பகுதியைக் கிழத்தெறிந்துவிட்டு, “குரு – சிஷ்யன் என்றால் இருவரும் முட்டாள்கள் என்று அர்த்தம்” என்று வியாக்யானம் சொன்னது ஞாபகமிருக்கிறது.

சொ. விருத்தாசலம் என்கிற புதுமைப்பித்தன் இறந்து சற்றேறக்குறைய 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவரோடு சமகாலத்தில் ஓரளவு ஒப்பிட்டுச் சொல்லக்கூடிய இன்னொரு சிறுகதாசிரியரான கு. ப. ராஜகோபாலன் இறந்து நாறப்பத்தி நாலு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த அரை நூற்றாண்டில் அவர்கள் தொடர்ந்து உயிர் வைத்துகொண்டு வாழ்ந்துகொண்டிருந்தால் என்ன செய்துகொண்டிருப்பார்கள் என்று யோசிக்கும்போது இலக்கியக் கர்த்தாக்கள், அதுவும், சொ.வி. போன்ற மேதைகள், கு.ப.ரா போன்ற இலக்கியத் திறன் உள்ளவர்கள் அதிக வயது இல்லாமல் இறந்துவிடுவதுதான் நல்லதோ என்று யோசிக்கத் தோன்றுகிறது. 'தெய்வத்துக்கு வேண்டியவர்கள் அல்பாயுசிலே போய்விடுவார்கள்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்கிறது. உலக நியாயம், 'நீண்ட ஆயுள் - அதிர்ஷ்டம்' என்று இருக்கலாம். ஆனால், 'உலக நியாயத்திற்கு அப்பால் தெய்வ நியாயம் என்று ஒன்று இருக்கிறதே' என்று யோசிக்கத்தான் வேண்டியிருக்கிறது. பாரதியார்கூட முப்பத்தியொன்பது வயதில் காலமானதை ஒரு தெய்வ நியாயமாகத்தான் சொல்லவேண்டும். அதற்கு முன் ராஜமய்யர் தனது இருபத்தியாறாவது வயதிலேயே காலமானவர். இலக்கியத்தில், திறமைக்கும், மேதைமைக்கும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும் சம்பந்தமே இல்லாமல்தான் இருக்கிறது. வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுகொடுக்க முடிவதில்லை என்பதுடன் தமிழ்நாட்டின் சூழ்நிலை இலக்கியம், கலை என்கிற நினைப்புகள் இல்லாத, பண்பாடற்ற சூழ்நிலையாக இருக்கிறது என்பதனால், இவர்கள் இருந்து இன்னும் கஷ்டப்படாமல் போனது நல்லதுதானே என்று கேட்கத் தோன்றுகிறது. இப்படி நானும் போய்விட முடியவில்லையே என்ற ஏக்கமும் எனக்கு உண்டு. இது ஒரு ஹார்ட்லெஸ் ஸ்டேட்மென்ட் என்று தோன்றினாலும்கூடத் தமிழர்கள் எந்த விதத்தில் புதுமைப்பித்தன் போன்ற மேதைகளைப் படைக்கத் தகுதியுள்ளவர்களாகத் தங்களைக் காட்டிக்கொண்டிருக்கிறார்களா என்று கேட்பது நியாயமான கேள்வி என்றுதான் சொல்லவேண்டும்.

புதுமைப்பித்தன்

(1957 திரைப்படம்)

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AF%81%E0%AE%A4%E0%AF%81%E0%AE%AE%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%A9%E0%AF%8D_(1957_%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%8D)

புதுமைப்பித்தன்



இயக்கம்	டி. ஆர். ராமண்ணா
தயாரிப்பு	கே.முனிரத்னம் சிவகாமி பிக்சர்ஸ்
கதை	கதை மு. கருணாநிதி
இசை	ஜி. ராமனாதன்
நடிப்பு	எம். ஜி. ஆர் பாலைய்யா சந்திரபாபு சகாதேவன் பாண்டியன் பி. எஸ். சரோஜா டி. ஆர். ராஜகுமாரி ஈ. வி. சரோஜா அங்கமுத்து
வெளியீடு	ஆகத்து 2, 1957

நீளம்	17833 அடி
நாடு	இந்தியா
மொழி	தமிழ்

புதுமைப்பித்தன் 1957 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். மு. கருணாநிதி கதை திரைக்கதை வசனம் எழுத. டி. ஆர். ராமண்ணா இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எம். ஜி. ஆர், சந்திரபாபு மற்றும் பலரும் நடித்திருந்தனர்.

புதுமைப்பித்தனின் பெண்கள்

https://www.jeyamohan.in/164022/



அன்புள்ள ஜெயமோகன்,

நலம்தானே? சிறிது காலமாக தொடர்ந்து புதுமைப்பித்தனை வாசித்துக் கொண்டிருக்கிறேன். அவருடைய படைப்புகளில் வெளிப்படும் ஒரு பொதுப் பண்பாக இருப்பது அவருடைய பெண்கள் சார்ந்த சித்தரிப்புகள். அவருடைய படைப்புகளில் வெளிப்படும் பெண்கள் பெரும்பாலும் அன்றைய சமூகத்தால்

வரையறுக்கப்பட்ட “குடும்பப் பாங்கான அடக்க ஒடுக்கமான பெண்கள்” எனும் வகை மாதிரியிலேயே சித்தரிக்கப்படுகிறார்கள் என்று நினைக்கிறேன் sir (செல்லம்மாள், கோபாலய்யங்காரின் மனைவி, கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், ஒரு நாள் கழிந்தது போன்ற கதைகள்). அவர்களுக்கு பெரும்பாலும் agency என்ற ஒன்று இருப்பதில்லை. அவர்கள் பேதைகளாக, குடும்பத்திற்கு அப்பால் வேறு ஒன்றும் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். அப்படி இல்லாத பெண்கள் சிறிது எதிர்மறையாகவே சித்தரிக்கப்படுகிறார்கள் (காஞ்சனை, மாய வலை, புதிய கூண்டு போன்ற கதைகள்). அகல்யை, சாப விமோசனம், பொன்னகரம் போன்ற கதைகளில் கற்பு, பெண்களுக்கான நீதி போன்றவை நேரடியாகவே கேள்விக்குள்ளாக்கப்பட்டாலும் சித்தரிப்புகள் என்ற வகையில் அக்கதைகளிலும் பெண்கள் காலத்தின், சூழ்நிலைகளின் கைப்பாவைகளாகவே இருக்கிறார்கள்.

இது புதுமைப்பித்தன் காலத்து பெண்களின் நிலையைப் பற்றிய கச்சிதமான சித்தரிப்பாகவே இருக்கிறது. ஆனால் புதுமைப்பித்தன் அன்றைய சமூகத்தின் பல்வேறு குறைகள் மீதான மிகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தவர். அவரிடம் இருந்த மேற்கத்திய தாக்கத்தாலும், அறச் சீற்றத்தாலும் அன்றைய சமூகத்தால் ஏற்கப்பட்ட பல பழமைகளை அவர் கடுமையாக கேள்விக்குள்ளாக்குகிறார். ஆனால் பெண்கள் சார்ந்த சித்தரிப்புகளை மட்டும் அப்படியே அவர் ஏற்றுக்கொள்வது மிகவும் ஆச்சரியமாகவே இருக்கிறது. இதற்கான காரணங்களை அவர் தனிவாழ்க்கையிலிருந்து பெறுவது சரியா என்று தெரியவில்லை sir. இத்தகைய கேள்விகளைக் கொண்டு ஒரு படைப்பாளியை அணுகுவது சரியா sir? இத்தகைய கேள்விகளுக்கான விடைகளை அறிவதற்கு சரியான அணுகுமுறை எது sir?

அன்புடன்
விக்னேஷ் ஹரிஹரன்

அன்புள்ள விக்னேஷ்

புதுமைப்பித்தனின் பெண்கள் பற்றி ஏறத்தாழ என் கோணத்திலேயே இந்த வினா அமைந்திருக்கிறது.

இந்திய மொழிச்சூழலில் நவீன இலக்கியம் எழுதப்பட்டபோது முதலில் நிகழ்ந்த கருத்தியல் முயற்சி என்பது பெண்ணை மறுவரைவு செய்வது தான். பாரதியின் புதுமைப்பெண் எனும் உருவகம் உதாரணம். ஏறத்தாழ இந்தியாவின் எல்லா மொழிகளிலுமே நவீன இலக்கிய முன்னோடிகள் ஒரு 'புதிய பெண்'ணுக்கான முன் வரைவை உருவாக்க முயன்றார்கள்.

குமாரனாசான் மலையாளத்தில் சிந்தாவிஷ்டாயாய சீதா எனும் கவிதையில் மொத்த ராமாயணத்தையே, அதன் அடிப்படை ஒழுக்கவியலையே எதிர்த்து கேள்வி கேட்கும் சீற்றம் மிகுந்த சீதையை உருவகிக்கிறார். பொறுமையின் வடிவமாக உருவாக்கப்பட்ட புவிமகள் சீதை அவருடைய கவிதையில் பொறுமையற்ற புதிய பெண்ணாகக் காட்டப்படுகிறார்.

அந்த மரபு இன்றும் நவீன இலக்கியத்தில் தொடர்கிறது. இதுவரை நவீன எழுத்துக்களில் சீதையும் திரௌபதியும் மற்றும் புராண பெண் கதாபாத்திரங்கள் எங்ஙனம் மறுபுனைவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது இந்தப் புதியபெண் எனும் உருவகம் எப்படி தொடர்ந்து வலுவான ஒரு கருத்துநிலையாக எழுந்து வந்திருக்கிறது என்பதை பார்க்கலாம்.

அன்று இருவகையான புனைவுமரபுகள் இருந்தன. மரபிலிருக்கும் பெண்ணை புதிய சூழலுக்கேற்ப மறுபுனைவாக்குவது ஒரு வகை. குமாரனாசான் சீதையை செய்தது போல. அதை புதுமைப்பித்தனும் செய்திருக்கிறார். சாபவிமோசனம் கதையில் வரும் அகலிகை புதியபெண் "அவன் சொன்னானா?" என்று கேட்கையில் அவளில் எழும் அந்த சீற்றத்தை வியாசன் உருவகித்திருக்க முடியாது.

அப்போக்கின் தொடர்ச்சியாகத்தான் எம்.வி.வெங்கட்ராமின் நித்ய கன்னி வருகிறது.

இன்னொன்று பழைய உலகிலிருந்து தன் அறிவால் நுண்ணுணர்வால் மீறி எழுந்து வரும் புதியபெண். முன்னுதாரணம் அற்றவள், அல்லது ஐரோப்பிய முன்னுதாரணம் கொண்டவள். பாலியல் நிபந்தனைகளுக்கு கட்டுப்படாமல் மீறுபவள். அல்லது தன்னுடைய அகம் கூறும் ஆன்மிகத்தை தேடுபவள் என அவர்களை இருவகைப்படுத்தலாம்.

தி.ஜானகிராமனின் பெண்கள் எவருக்கும் ஆன்மிகமான எந்த உசாவலும் இல்லை. தங்கள் ஆளுமையைப் பற்றிய தெளிவு கூட இல்லை. அறிவார்ந்த எந்த பயணமும் அவர்களுக்கில்லை. அவர்கள் அழகிகள், காதலிக்கப்படுபவர்கள், காதலிப்பவர்கள் மட்டுமே. அவர்கள் நாடுவது பாலியல் விடுதலையை. யமுனாவோ பாலியோ நாடுவது அவர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பழைய பாலியல் நெறிகளிலிருந்து எழுந்து பிறிதொன்றை சென்றடைவ்து மட்டுமே.

ஆனால் ஜெயகாந்தனின் கதாநாயகியர் அறிவார்ந்த ஒரு விடுதலையை நாடுகிறார்கள். சில நேரங்களில் சில மனிதர்களில் கங்கா, ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் கல்யாணி போன்றவர்கள் எளிய பாலியல் விடுதலையை அல்லது குடும்பத்திலிருந்து வெளியே செல்வதை மட்டும் எண்ணுபவர்கள் அல்ல. அவர்கள் தங்களுக்கான ஆளுமையைத் தேடுகிறார்கள். தங்களுக்கான அடையாளம், தங்களுக்கான அறிவார்ந்த தனித்தன்மை ஆகியவற்றை அடைய முயல்கிறார்கள். அடைகிறார்கள் அல்லது அதில் தோற்று, ஆனால் தோல்வியை ஏற்காமல் நிமிர்ந்து நிற்கிறார்கள்.

இவ்வண்ணம் நம் தமிழ் இலக்கியத்தில் எப்படியெல்லாம் பெண்கள் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்க்கையில் பல வண்ண அடுக்குகள் நமக்கு வருகின்றன. ஓர் எல்லையில் பாரதியின் புதுமைப்பெண் போல அதீத கற்பனை வீச்சுடன் புனையப்பட்ட

பெண். ராஜம் கிருஷ்ணனின் கதைகளில் அத்தகைய பெண்ணை பார்க்கலாம். பல முற்போக்கு நாவல்களில் அத்தகைய எரிந்தெழும் பெண்ணை நவயுகப் பெண்ணைப் பார்க்கலாம். அவள் ஆளுமை அல்ல, கதாபாத்திரம் கூட அல்ல. ஒரு மாதிரி வடிவம் மட்டுமே. அந்தப்போக்கின் உச்சம் என்பது வ.ரா எழுதிய கோதைத் தீவு எனும் நாவல்.

மறு எல்லையில் அனைத்து சமூக நெறிகளையும் கட்டிக்காத்து குடும்பம் மதம் சமூகம் என அனைத்திற்கும் தானே பொறுப்பேற்று கரை கடக்காது வாழும் மரபான லட்சியப்பெண்ணின் உருவகம். தமிழின் பிரபல ஊடகப்புனைகதைகள் அனைத்திலும் இந்த ஊடகமே முன்வைக்கப்பட்டது. லக்ஷ்மி எழுதிய நாவல்கள், கல்கியின் நாவல்கள் இந்த எல்லையைச் சார்ந்தவை. இவ்விரண்டுக்கும் இடையே பல நுண்ணிய வண்ண வேறுபாடுகள்

திராவிட இயக்க நாவல்களில் பெண்கள் சித்தரிக்கப்பட்டிருக்கும் விதம் பற்றி ஏற்கனவே எழுதியிருக்கிறேன்.ஆண்கள் எதிர்ப்பவர்களாக, மீறுபவர்களாக, அடங்காதவர்களாக அமைகையில் அந்த ஆண்களுக்கு அடங்கி அவர்களுக்கு கை கொடுத்து நின்றிருக்கும் கற்புள்ள மரபான பெண்ணாகவே சி.என்.அண்ணாத்துரை, எஸ்.எஸ்.தென்னரசு, மு.கருணாநிதி ஆகியோர் படைப்புகளில் பெண்கள் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திராவிட இயக்க எழுத்தாளர்களில் முதன்மையானவர் என்று நான் நினைக்கும் விந்தனின் படைப்புகளில் கூட பெண்கள் அப்படிப்பட்டவர்கள் தான். இன்னும் சொல்லப்போனால் திராவிட இயக்க எழுத்தாளர்கள் கண்ணகி- மாதவி என இருமையைக்கட்டமைப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். நாகரீகப்பெண்ணை மாதவியாகவும் தமிழர் பண்பாட்டை பேணும் மரபார்ந்த பெண்ணை கண்ணகியாகவும் முன் நிறுத்தினார்கள். திராவிட இயக்கம் தன் முழு இலக்கிய இயக்கத்திலும் முன் வைத்த

பெண் கண்ணகியின் இன்னொரு வடிவம் தான். கண்ணகி சீதையின் இன்னொரு வடிவம்.

இந்த அடுக்கில் புதுமைப்பித்தன் எங்கிருக்கிறார்? புதுமைப்பித்தன் புரிந்துகொண்ட இந்த வினாவை நாம் வகுக்க முடியும். புதுமைப்பித்தன் முழுக்கவே கற்பனாவாதத்திற்கு எதிரானவர். யதார்த்தத்தை முன்வைப்பவர். தமிழிலக்கியத்தில் அவருடைய பங்களிப்பென்பதே யதார்த்தம் தான். இங்கே யதார்த்தவாத அழகியலை நான் சொல்லவில்லை. வாழ்க்கைப்பாதையிலுள்ள நடைமுறை யதார்த்தத்தை நான் சொல்கிறேன். ஆகவே கனவுகள், லட்சியங்கள், அறவிழுமியங்கள், ஆன்மிகப் பெருநிலைகள் அனைத்தையுமே ஐயப்படக்கூடிய, எள்ளி நகையாடக்கூடிய ஆசிரியனாகத்தான் புதுமைப்பித்தன் நிலைகொள்கிறார்.

லட்சியவாதம் உச்சத்தில் ஓங்கி நின்ற ஒரு காலத்தில் எழுதிய எழுத்தாளன் இவ்வண்ணம் அமைந்ததென்பது ஒரு ஆர்வமூட்டும் விஷயம்தான். அவருடைய காசநோய் அதற்குக்காரணம் என்று ஒருவர் சொன்னால் அதை முழுமையாக மறுத்துவிடமுடியாது. கசப்பும் ஐயமும் கொண்டவராகவே புதுமைப்பித்தன் கதைகளில் வெளிப்படுகிறார்.

சுதந்திரப்போராட்டத்தை அவர் எப்படிப் பார்க்கிறார்?. கேலியும் கிண்டலுமாகத்தான் அதை எழுதியிருக்கிறார். அது ஒருவகையான மிகைலட்சியவாதம் அல்லது ஒரு பாவனை என்று மட்டுமே அவரால் சித்தரிக்க முடிகிறது.

சமூக சீர்திருத்தம் அவர் பார்வையில் நாசகாரகும்பலின் காலடியில் விழுந்து நொறுங்கும் எளிய கிளர்ச்சியாகவே தென்படுகிறது, அல்லது கோபால அய்யங்காரின் மனைவி போல கேலிக்கூத்தாக முடிகிறது. பிரம்ம சமாஜத்தில் கோபால அய்யங்காருக்கு ஒரு லட்சிய திருமணத்தை பாரதி நடத்தி வைக்க அதை அபத்தத்தின் உச்சத்திற்கு

புதுமைப்பித்தன் திருப்பிக்கொண்டு போவதை சுந்தர ராமசாமி சுட்டிக்காட்டியிருக்கிறார். இரு எல்லைகள் அவை.

ஆகவே அன்றைய ஒட்டு மொத்த சமூகமும் முன்வைத்த கற்பனாவாதப் பெண் புதுமைப்பித்தனுக்கு எவ்வகையிலும் ஏற்புடையவளாக இருக்கமாட்டாள். கு.ப.ராஜகோபாலன் புனைந்து முன்வைத்த மெல்லுணர்வுகள் கொண்ட ,உயர் பண்புகள் கொண்ட, ஆணின் காமத்தால் எழுதப்பட்ட அழகிய பெண்ணை கு.ப.ராவின் பகற்கனவென்றே எண்ணியிருப்பார். வசீகர மர்மம் கொண்ட மௌனியின் பெண்ணோ, அம்பாள் கருவறையில் கொலு வீற்றிருப்பது போல் இல்லத்தில் வீற்றிருக்கும் லா.ச.ராவின் பெண்ணோ புதுமைப்பித்தனுக்கு கேலிச்சித்திரங்களாகத்தான் தோன்றியிருக்கும்.

எவ்வகையிலும் பெண்ணை புனைந்துரைக்க முயலாத ஒரு எழுத்தாளராக அவரை நாம் பார்க்கலாம்.அவரிடம் நாம் காண்பது அவர் கண்டறிந்த பெண்களை .யதார்த்தமான பெண்களை. சர்வசாதாரணமாக நெல்லை ஆச்சிகள்தான் கதையில் வந்து செல்கிறார்கள்.

அவர்கள் அன்று பழமையை பற்றிக்கொண்டிருந்தார்கள். நெறிகளுக்குள் நிற்பதே உயர்வென நினைத்திருந்தார்கள். எவ்வகையான மீறல்களுக்கும் அவர்கள் சித்தமாக இருக்கவில்லை. பாலியல் மீறலை விரும்பினாலும் சமூக மீறலை விரும்பவில்லை (கல்யாணி) அறிவார்ந்த தேடலோ ,ஆன்மிகமான உசாவல்களோ அவர்களிடம் இருக்கவில்லை. குடும்பத்துக்குள் நின்று குடும்பத்துக்கு அப்பால் இருக்கும் எதையும் அறிந்துகொள்ளாமல் வாழ்ந்து முடிந்தனர்.

புதுமைப்பித்தன் அவர்களை உன்னதப்படுத்தவில்லை. ஏனெனில் அவர் எதையுமே உன்னதப்படுத்தவில்லை. அவர்களை

சித்தரிக்கிறார். அது அவர்களை முன்வைக்கவில்லை. அவர்கள் அவர் கதையில் வருகிறார்கள். ஏனெனில் அன்று அவர்கள் அவ்வண்ணம் இருக்கிறார்கள்.

அவர் காட்டுவது அவருடைய உருவகத்தை அல்ல, அன்றிருந்த மெய்மையை. ஆனால் அவர் பெண்ணை உருவகப்படுத்தி கதை சொல்லும்போது அந்தப்பெண் புதுமைப்பெண்ணாகவே இருக்கிறாள். சாபவிமோசனத்தின் அகலிகை போல. அதாவது சீற்றம் கொண்டவளாக, அடிப்படை வினாக்களை உசாவுபவளாக, தனக்கான அறத்தை முன் வைப்பவளாக இருக்கிறாள்.

அதே போல அவருடைய புனைகதைகளில் யதார்த்தத்துக்குள் ஆழுள்ளம் எழுதப்படும்போது பெண்ணின் அடங்காத விடுதலை வேட்கையும் சீற்றமும் வெளிப்படுகிறது. செல்லம்மாள் ஒரு உதாரணம். செல்லம்மாள் விழிப்பு நிலையில் தன் கணவனைப் புரிந்துகொண்டவளாக, இல்லத்திற்குள் அடங்கியவளாக, ஒரு எளிய ஆச்சியாக மட்டுமே இருக்கிறாள். ஆனால் சாவின் நுனியில் தன்னிலை மயங்கும்போது அவள் உளறும் சொற்களின் வழியாக வெளிப்படும் செல்லம்மாள் பிறிதொருத்தியாக இருக்கிறாள். அடங்கி வைக்கப்பட்ட ஒன்று அங்கே எரிந்தெழுந்து திமிறுவதைப் பார்க்க முடிகிறது.

உளமயக்குகளை எழுதாமல் உள்ளதை எழுதியதனால் புதுமைப்பித்தன் கலைஞன். உள்ளவற்றுக்கு அடியில் இருக்கும் அறிய முடியாமைகள் அவனை மீறி கலையில் நிகழ்ந்தமையால் அவன் மாபெரும் கலைஞன்.

புதுமைப்பித்தன்

https://write2maanee.blogspot.com/2018/08/blog-post_16.html

புதுமைப்பித்தன் என்ற புனைப்பெயர் கொண்ட சொ. விருத்தாசலம் (ஏப்ரல் 25,
1906 ஜூன் 30,1948), மிகச்சிறந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு முன்னோடியாக இவர் கருதப்படுகிறார்.[2]கூரிய சமூக விமர்சனமும் நையாண்டியும், முற்போக்குச் சிந்தனையும், இலக்கியச் சுவையும் கொண்ட இவருடைய படைப்புகள், இவரின் தனித்தன்மையினை நிறுவுகின்றன. இவரது படைப்புகள் தமிழ் இலக்கியத்தில் மிகவும் அதிகமாக விவாதிக்கப்பட்டுள்ளன.
2002ல் தமிழக அரசு இவரது படைப்புகளை நாட்டுடமை ஆக்கியது.


புதுமைப்பித்தன்
பிறப்பு சொ. விருத்தாசலம்
ஏப்ரல் 25, 1906
திருப்பாதிரிப்புலியூர்
இறப்பு சூன் 30, 1948 (அகவை 42)[1]
திருவனந்தபுரம்
நாட்டுரிமை இந்தியா
கல்வி கலைத்துறை இளமாணிப் பட்டம்
கல்வி நிலையம் நெல்லை இந்துக் கல்லூரி
எழுதிய காலம் 1933-1948
இலக்கிய வகை சிறுகதை
இயக்கம் மணிக்கொடி இயக்கம், நவீன தமிழ் இலக்கியம்
துணைவர்(கள்) கமலா
பிள்ளைகள் தினகரி

பொருளடக்கம்

கனலி கலை
இலக்கியச் சூழலியல்
இணையதளம்

புதுமைப்பித்தனின் படைப்புலகம்

https://kanali.in/puthumaipithanin-padaipulagam/



புதுமைப்பித்தனின் படைப்புலகம்

சங்குக்குள் அடங்கிவிடாத புதுவெள்ளம்

புதுமைப்பித்தனின் கதைத் தொகுப்பு நூலை எடுத்துப் புரட்டும் போதெல்லாம் ஒரே ஆண்டில் 45 கதைகளை எழுதி வீசிவிட்ட

அவரின் அசுரத்தனமான வேகத்தின் பட்டியலை ஒவ்வொருமுறையும் பார்ப்பேன். அதைப் பார்க்கும் போதெல்லாம் – ச்சே, எடுத்த எடுப்பிலேயே என்ன வேகம்! என்ற மனவெழுச்சி ஏற்படுகிறது. இதில் 1935-ல் முதல் மாதத்தில் எழுதிய இரு கதைகளையும் 1934- ன் இறுதியில் எழுதியதாகச் சொல்வேன். அவர் இறுதி ஆண்டுகளில் எத்தனை கதைகள் எழுதியிருக்கிறார் என்று பார்ப்பேன். 1947-க்கு ஒரு கதை, 1948-க்கு ஒரு கதை என்ற பட்டியலைப் பார்க்கும்போது என்னுள் சொல்லமுடியாத துக்கம் ஒன்று எழும்பும். எனக்கு அது படைப்பாளியாக பல விசயங்களைச் சொல்வதுண்டு. ஆனால் இந்த வாழ்க்கைச் சக்கரத்தில் நசுங்குவதிலிருந்து விடுபட்டு வர முடிவதில்லை. இளம் வயதில் அகால மரணமடைந்த புதுமைப்பித்தன் 55 வயது வரையேனும் இருந்திருந்தால் புனைகதையுலகில் என்னவெல்லாம் சாதித்து இருப்பார் என குழந்தைத்தனமாக நினைத்திருக்கிறேன்.

புதுமைப்பித்தன் மரணமடைந்து எத்தனையோ பத்தாண்டுகள் போய்விட்டன. இன்னும் பத்தாண்டுகள் மட்டும் வாழ்ந்திருந்தால் எப்படியெல்லாம் தனது ஆக்கங்களைத் தந்திருப்பார் என்று அபத்தமான எண்ணம் இப்போதும் தோன்றுகிறது. புதுமைப்பித்தனை நினைக்கும்போதெல்லாம் இந்த மனநிலையை, கனவை தடுக்க முடிவதில்லை. கம்பனுக்கு வாய்த்த சடையப்ப வள்ளல் புதுமைப்பித்தனுக்கு இல்லாமல் போன துக்கம் தோன்றுவதுண்டு. போகட்டும், புதுமைப்பித்தனைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் படிக்க நேர்ந்தும் குறிப்புகளாகவேனும் ஏதும் எழுதவில்லை. என் மனம் போன போக்கில் இப்போதேனும் எழுதிவிட வேண்டும் என்று தோன்றியதால் இதை எழுதுகிறேன்.

புதுமைப்பித்தனின் கதைகள் வாசிக்கின்ற போது, புனைவு மொழியைச் சர்வ சுதந்திரத்துடன் கையாளும் ஆற்றலும் பொய்மைகளைப் போட்டுடைக்கின்ற பார்வையின் தீவிரமும்

உடனடியாக வசீகரிக்கச் செய்கின்றன. தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தனுக்கு முன்னோடியென்று யாரும் இல்லை. தடமும் இல்லை. தன் இஷ்டப்படி புகுந்து சென்ற துணிச்சல் மிக்க கலைஞன் அவர். அப்படி முன்னோடிகளோ தடங்களோ இல்லாதது பல்வேறு அனுகூலங்களை அவருக்குத் தந்திருக்கின்றன. இந்த வடிவத்தில் தான் எழுதவேண்டும் இந்த வடிவத்தில் எழுதினால் சரி வராது என்ற எடுத்துரைப்பியல் முறை அவர் முன் இல்லை. மனதில் தோன்றிய வடிவங்களில் எந்த தயக்கமும் இல்லாமல் எழுதினார். அதை அனாயசமாக கைப்பற்றிக் கொண்ட கலைஞன். பிரச்சினைகளை, பிரச்சினைகள் குறித்து தன்னுள் தோன்றும் எண்ணங்களை கொட்டுகிறார். சாட்டையால் சொடுக்குகிறார். மிச்சம் மீதி வைக்காமல் வைக்காமல் சொல்லி விடுகிற பேராசைக்காரர் அவர். பெரும்பாலும் குறிப்பால் உணர்த்தும் பண்பை ஏகதேசமாக தூக்கிப் போட்டுவிடுகிறார். இந்த முற்போக்குத் தன்மை பின்வந்த முற்போக்குவாதிகளின் எழுத்துலகிருந்து முற்றிலும் வேறொன்றானதாக இருக்கிறது. அவர்களால் கைப்பற்ற முடியாத மனப்போக்கு ஒன்று புதுமைப்பித்தனிடம் பொங்கியபடி இருக்கிறது. நாம் எதிர்பாராத உவமைகள்; நாம் அனுமானித்திராத விவரணைகள்; நமக்குள்ளிருந்து கேலியுடன் பாய்ந்துவராத பழந்தமிழ் இலக்கிய வரிகள்; நமக்குத் தோன்றாத பார்வைகள் எல்லாம் அவருக்குள் அவருக்கே உரித்தான எக்காளத்தில் தெறித்தன. எந்த கொள்கைக்கும் விசுவாசம் காட்டாத மாற்றுப்பார்வை அவரிடம் தீவிரத்துடன் இயங்கியிருக்கிறது. கடவுளர்களை, பழம் மரபுகளை, நம்பிக்கைகளை, சாதிகளை, மதங்களைத் தூக்கிப்போட்டுப் பந்தாடுகிற புதுமைப்பித்தன். அவற்றிலிருந்து அந்நியப்பட்டுப் பேசுவதில்லை. அந்தச் சூழலுக்குள் நின்றபடி பேசுகிறார். வெளியிலிருந்து கொள்கைகளைக் கொண்டுவந்து

அளப்பதில்லை. தன் அனுபவ சாரத்திலிருந்து தனது பார்வைகளை, மதிப்பீடுகளை வெளிப்படுத்துகிறார்.

எல்லாவற்றையும் தன்னுடைய கோணத்தில் எக்களிப்புடன் சொல்லிவிடுகிற எள்ளல் மொழி பெரும் வசீகரத்தைக் கொண்டிருக்கிறது. அது பிரச்சார தொனிபோன்று ஒலித்தாலும் பிரச்சாரம் இல்லை.

நாம் உருவாக்கி வைத்திருக்கும் கெட்டுதட்டிப்போன- பெண்களை வஞ்சிக்கிற கருத்தியல்களை உடைத்து தகர்க்கிறதாக இருக்கின்றன. அவை நம் வாழ்க்கையை விமர்சனம் செய்வதாக அமைகின்றன. ஒருவகையில் உள்நின்று ஒலிக்கிற குரலாக அமைகிறது. கயமை செய்தவர்களைச் சில கதைகளில் முச்சந்தியில் போட்டு கிழித்தாலும், சில கதைகளில் கயமை செய்ய நேர்கிற மனிதர்களை அனுதாபத்தோடு பார்க்கிறார். சாதி வெறியின் அவலத்தைச் சொல்கிற புதுமைப்பித்தன் மனிதனுள் சாதிய நம்பிக்கை ஆழப் புதைந்து அவனை தத்தளிக்க விடும் கோலத்தைச் சொல்கிறார். விளிம்புநிலை அல்லது தாழ்த்தப்பட்ட பெண்களின் வறுமை அவர்களது கற்பைப் பிடுங்கித் தின்னும் காட்சிகளை ஆவேசத்தோடு சொல்லும் புதுமைப்பித்தன், இல்லத்தரசிகளின் எளிய கனவுகளை மிக்க மதிப்போடு கொண்டாடவும் செய்கிறார். இளம்பெண்களின் பாலியலை ஒடுக்கும் நடுத்தர வர்க்க குடும்பத்து வழக்கங்களை நொறுக்கவும் செய்கிறார். மீறல்களைப் பண்பாட்டு கேடாக பார்ப்பதில்லை. அது இயற்கையின் மகத்தான பண்பு என்று போற்றுகிறார். சில பிராமண எழுத்தாளர்கள் விதவைகளின் துயரத்தை பால்ய விவாகத்தை விமர்சனம் செய்வது போல ஒரு சாந்த-சமாதானச் சூழலுக்குள் நிறுத்துகிற போது புதுமைப்பித்தன் அந்த அவலத்தை வெயில் உரைக்க நெடுஞ்சாலையில் கொண்டு வந்து நிறுத்துகிறார்.;

விதவைகளின் துயரத்தை ரத்தமாக அள்ளி எடுத்து கடவுளின் முகத்தில் பூசவும் செய்கிறார்.

அறிவார்ந்த பார்வையைப் போற்றும் புதுமைப்பித்தன் எளியவர்களின் உணர்ச்சிகளையும் பேதமைகளையும் மதிக்கிறார். எளிய பெண்களின் உணர்ச்சிகளையும் குழந்தைகளின் பேதைமை மிக்க வெளிப்பாடுகளையும் மனம் தோய்ந்து வெளிப்படுத்துகிறார். கடவுளர்களை விரட்டியும் அடிப்பார். தேடி வந்தால் அச்சத்துடன் கைகுலுக்கி அனுதாபத்துடன் அழைத்தும் செல்வார். பைகள் இல்லை என்பார். சில கதைகளில் அவைகளின் கூத்துகளை பயத்தோடு காட்டுவார். நொறுங்கி குவியலான பழந்தமிழர் பெருமைகளைக் காட்டியவாறே கடலுக்குள் கபாடபுரத்துத் தமிழர்களின் பெருமையைக் காட்ட அழைத்துச்செல்வார். ஞானமார்க்கம் என்பது போலிமார்க்கமாக புதைந்துகிடப்பத்தைச் சொல்லும் அதே புதுமைப்பித்தன், அதிலே நாம் அறிந்திராத ஞானம் இருக்கக்கூடும் என்பதாக இமயமலை பனிச்சிகரத்துக்கு அழைத்துச் சென்றும் காட்டுவார்.

புதுமைப்பித்தனின் இலக்கிய அழகியலை `மாற்றுப்பார்வை' என்பதாக வரையறுக்கலாம். சமூகச்சீர்திருத்தக்காரரர்கள் ஒன்றைச் சொன்னால் அது ஆயிரமாண்டுக்காலம் மனிதர்களுள் உளவியல் பிரச்சனையாக மாறிக்கிடப்பதை புதுமைப்பித்தன் சொல்வார். ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைத் திருப்பிக்காட்டு என்று போதிக்கிற பாதிரிமார்களின் வேறுவிதமான அடிகளைத் திரை விலக்கிக் காட்டுவார். கற்பு, கற்பு என்று குதிப்போர்களைப் பார்த்து பசி, பசி என்று குதிப்பார். காமத்தைச் சமூக கட்டுக்குள் வைத்து ஒடுக்கும் போதெல்லாம் அது உயிர்களின் இயல்பு என்கிறார். பணக்காரர்களின் கீழ்மையை வெறுக்கிற புதுமைப்பித்தன் எளியவர்களிடம் தோன்றும் மாண்புகளைப் போற்றவும் செய்கிறார். இப்படி எல்லாவற்றிற்கும் மாற்று உலகம் ஒன்று இருப்பதைத்

துணிச்சலாகக் காட்டியவர் புதுமைப்பித்தன். எப்படி நோக்கினாலும், அவர் எளியவர்களின் பக்கம் நின்று பேசுவதைக் காணலாம்.

பணம், மனிதர்களை வெவ்வேறாக உருட்டியெடுக்கும் எத்தனையோ காட்சிகளைக் காட்டியிருக்கிறார். உழைக்கும் வறியவர்களிடம் கணப் பொழுது எழுந்துவரும் எளிய அன்பை ஆராதிக்கிறார். எளியவர்களின் எல்லா அழுக்குகளையும் ஏற்றுக்கொள்கிற பக்குவம் அவருக்கு உண்டு. சொந்த சாதி பிள்ளைமார்களின் திருகுதாளங்களைத் துணிச்சலோடு `நாசகார கும்பல்' என்று அவரால் சொல்ல முடிகிறது. அதே அளவு கிறிஸ்துவ போதகர்களின் மதமாற்றத்துக்குப் பின் உள்ள சாதிய உணர்வுகளைப் `புதிய கூண்டில்' ஏற்றிவிடக் கூடிய எக்களிப்பும் அவரிடம் உண்டு. ஏகபத்தினி விரதனான ராமன் தரும் விமோச்சனத்தை அது விமோச்சனமல்ல சாபம் என்று காட்டுகிற அறச்சீற்றமும் உண்டு. புதுமைப்பித்தன் மனிதர்களின் உள்ளங்களை ஒரு சட்டகத்திற்குள் கொண்டுவந்து நிறுத்துபவர் அல்ல. சட்டகத்தை மறுப்பவர். மனிதர்களின் எண்ணற்ற தனித்துவ குணங்களாகப் பார்க்கிறார் என்றாலும் படைப்பின் அறப் பார்வையில் இருந்து விலகாமல் அவற்றை வாசகர்கள் முன் வைக்கிற ஞானம் அவருக்கு இயல்பிலேயே வாய்த்த ஒன்று.

இன்று முடிவுகள் கூறாத, மையத்திற்குள் இழுக்காத, விளிம்பைப் பேசுகிற, அர்த்தத்தைத் திணிக்காத, கொண்டாட்டத்தை போஷிக்கிற, மாயத்தை விரும்புகிற ,விஞ்ஞான உலகத்தின் இரும்புவிதியை மறுதலிக்கிற, தலித்திய பெண்ணிய விடுதலைக்குரலைப் போற்றுகிற, புதிய சொல்முறைகளை ஆராதிக்கிற கதைகளைப் பின் நவீனத்துவக் கதைகளாக முன் வைக்கின்றனர். இவை அனைத்தையும் அவ்விதமான கொள்கை கோட்பாடுகளின்றியே எழுதிக் குவித்தவர் புதுமைப்பித்தன் `புரட்சி மனப்பான்மை', `ஞானக் குகை', `பிரம்ம ராக்ஷஸ்' `செவ்வாய் தோஷம்' `ஆற்றங்கரைப் பிள்ளையார்' `எப்போதும் முடிவிலே இன்பம்', கட்டிலைவிட்டு இறங்காத கதை',

`அகல்யை', `அபிநவஸ்நாப்' `கனவுப்பெண்' `திருக்குறள் செய்த திருக்கூத்து' `உபதேசம்' , என இந்தவகையில் சொல்லத்தக்கக் கதைகள் பல உள்ளன.

விளிம்பு மனிதர்களின் வாழ்க்கையைப் பரிதாபகரப் பார்வையில் வெளிப்படுத்தாமல், உள்ளது உள்ளதுபடி வெளிப்படுத்தியவர் புதுமைப்பித்தன். `பொன்னகரம்' `கவந்தனும் காமனும்' `குப்பனின் கனவு' `தெருவிளக்கு' `மகாமாசனம்' , `இது மிஷின் யுகம்' தனி ஒருவனுக்கு' `நியாயம்' `அவதாரம்' `துன்பக்கேணி' போன்ற கதைகள் இதற்குச்சான்று.

வைதீக கருத்தியலில் நசுக்கப்பட்ட பெண்களின் குரலை `வழி' `ஆண்மை' `வாடாமல்லிகை"சாபவிமோசனம்' `கலியாணி' போன்ற கதைகளின் உக்கிரமாக வெளிப்படுத்தியுள்ளார். இப்படி இன்றைய பல்வேறு கோட்பாடுகளுக்கு உதாரணங்கள் சொல்லும்படி பல கதைகளை அன்றே எழுதியிருக்கிறார்.

இலக்கிய அரசியல் ஓங்கி நிற்கும் இன்றைய காலகட்டத்தில் புதுமைப்பித்தனின் இம்மாதிரி கதைகளை வகைமாதிரிகளாக முன் வைக்கவேண்டிய சூழல் ஆகிவிட்டது. அனால் இந்த காபந்துகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் படைப்பெழுச்சியின் தனித்துவ ஆளுமையாக நிற்பவர் புதுமைப்பித்தன். பித்தன் மீது வீசப்படும் வசைகளுக்கு, அவரின் கதைகளுக்குள்ளிலிருந்தே சரியான பதில்கள் உண்டு. முன் முடிவு தடிகளோடு சாத்த முயன்ற திருவாளர்களுக்கும் இது தெரியும். ஆனால் புதுமைப்பித்தனின் பதில்களை வசதியாக ஒளித்துவைத்துவிட்டு ஆடும் நர்த்தனத்தை வாசகன் படித்து கண்டடையும்போது அவர்களின் சாயம் வெளுத்தபடியே தான் இருக்கிறது. கோட்பாட்டுத் தடியைக் கொண்டு வீழ்த்தப் பார்த்தவர்களின் நோக்கம் புதுமைப்பித்தன் பிள்ளை சாதியில் பிறந்து விட்டதும், வைதீகம்போல கிறித்துவ பெருமத பாதிரிமார்களின் ஆட்டத்தை போட்டுடைத்ததும் காரணம். மேலாதிக்க பிள்ளை

சமூகம் தலித்துகளுக்கு எதிரானது; துரோகம் இழைத்தது என்ற சமூகவியல் அடிப்படையில் பிள்ளைமார் சாதியில் பிறந்த புதுமைபித்தனைத் தூற்றினர். அவர் பிள்ளைமார்களின் அடாவடித்தனங்களை துணிச்சலோடு எள்ளி நகையாடிய இலக்கியப் பேராளுமை என்பது உலகறிந்த விசயம். பெருமாள்முருகன் 'மாதொருபாகன்' நாவலில் அரைப்பக்கம் -அதுவும் குறிப்பாக எழுதியதற்கே எழுதமுடியாமல் முடக்கப்பட்ட இந்நாளில் புதுமைப்பித்தன் போகிறபோக்கில் பல கதைகளில் பிள்ளைமார்களைக் கடிந்து கொண்டிருக்கிறார்; என்பதை மட்டும் புரிந்து கொண்டால் போதுமானது. இன்று புதுமைப்பித்தன் இருந்தால் இப்படி எழுதமுடியுமா என்பதும் சந்தேகம்தான்.

தனது ஆரம்பகால படைப்புகளில் புதுமைப்பித்தன் பாத்திரங்களின் பின்னிருந்து கதையை நிகழ்த்துவதில்லை. ஒரு சிக்கலை, வாழ்வின் முரணை, புதிய கற்பனை படிமத்தை சொல்ல தனது விரிந்த விவரணைக்குள் பாத்திரங்களைக் கொண்டு வந்து ஊன்றுகிறார். அதனால் அவரின் மொழி ஜொலிப்பதுபோல பாத்திரங்கள் ஜொலிப்பதில்லை. முழுக்க புதுமைப்பித்தனின் புதிய கருத்தியல் ஆளுமையைக் காட்டுவதாகவே அமைகிறது. பாத்திரங்களின் குரலாக நமக்குள் எதிரொலிப்பதில்லை. பல நல்ல கதைகள் படிக்கும் போது ஏற்படுத்திய பாதிப்பை நினைவுகளிலிருந்து ஏற்படுத்துவதில்லை. அதற்கு காரணம் மாந்த உருவாக்கத்தின் மீது அக்கறை அற்று பிரச்சினைகளின் உக்கிரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துத் தனது எண்ண வெளிப்பாட்டை தீவிரமான மொழியில் வெளிப்படுத்தியது தான். கதாமாந்தர்களின் வழி பிரச்சினையின் தீவிரம் வெளிப்படும் போது அவை சிறந்த, மிகச் சிறந்த கதைகளாக கலையின் ஆற்றலோடு வெளிப்பட்டிருக்கின்றன. இரண்டாண்டு காலத்திலேயே இவ்விடத்திற்கு வந்துவிடுகிறார். சிறுகதை என்பது ஒருவித நிதானத்தில் உருவாவது என்பதை படைப்பாளியாக அவர் உணர்ந்ததும் நல்ல கதைகள் கிடைக்க

தொடங்குகின்றன. `வாடாமல்லிகை' `வழி' இரண்டும் விதவைகளின் பாலியல் ஒடுக்குமுறையைச் சொல்கிற கதைகள்தாம். தம்பியின் திருமணம்; பக்கத்து வீட்டு புதுமணத் தம்பதிகளின் சல்லாபம் என்கிற பின்புலத்தில் இப்பெண்களின் ஒடுக்கப்பட்ட இச்சையை சட்டென சொல்லிவிட்ட கதைகள். அவர்களின் பாலியல் தவிப்பும் இருக்கவே செய்கிறது. ஆனால் வாழ்வை முழுமையாக நெருங்கி அப்பெண்களின் தவிப்புகளாகப் புதுமைப்பித்தன் காணவில்லை. ஒரு பொதுப் புத்தியில் அறிந்ததை ஓங்கி அடிக்கிறார். பொய்யான காருண்யத்தின் மீதும் சமூகக் கருத்தியல் மீதும் ஏறிச்சாடுகிற இடத்திற்குப் பறந்து விடுகிறார். ` வாடாமல்லிகை' கதையில் வரும் சரசு, தன்னை திருமணம் செய்துகொள்கிறேன் என்று வருபவனை மறுதலிக்கிறாள். திருமணம் இல்லாமலே உறவு இருந்தால் போதும் என்கிறாள். அதற்கு அவன் `நீ ஒரு பரத்தை' என்கிறான். அதற்கு ` உமது தியாகத்திற்க்கு நான் பலியாக மாட்டேன். அதில் எப்பொழுதும் உமக்கு இந்தக் காலத்து நன்மதிப்பு ஏற்படும். தைரியசாலி என்பார்கள். அதை எதிர்பார்க்கிறீர். நான் பரத்தை அல்ல- நான் ஒரு பெண். இயற்கையின் தேவையை நாடுகிறேன்' என்கிறாள்.

`வழி' கதையில் வரும் இளம் விதவையான அலமி, வசதியான பெண். எதிர்வீட்டு விசாலத்தின் சந்தோசம் சூசகமாகத் தெரிய வருகிறது. அலமிக்கு கணவனோடு இருந்த பழைய நினைவுகள் வருகின்றன. தகப்பனிடம் தன் தத்தளிப்பை சொல்ல முடியாது. அவரும் இதனை புரிந்து கொண்டு நல்ல வழி எடுக்கப் போவதில்லை. விதவையாகவே கிடந்து அழிய வேண்டியதுதான். துக்கத்தோடு கட்டிலில் பொத்தென விழுபவளின் நெஞ்சில் கொத்துச்சாவியின் முள்வாங்கி விர்ரென பாய்கிறது. ரத்தம் குபுகுபுவென வெளியேறுகிறது. மகளின் அறையில் இன்னும்

விளக்கெரிவதைப் பார்த்து தந்தை உள்ளே நுழைகிறார். மகளின் மார்பிலிருந்து ரத்தம் வழிவதைக் கண்ட தகப்பன் பதறுகிறார். ` நெஞ்சின் பாரம் போவதற்குச் சின்னவாசல் என்கிறாள். மயக்கத்தில் ரத்தத்தை அடைக்க முயல்கிறார். ` மூச்சுவிடும் வழியை அடைக்க வேண்டாம்' என்று தடுக்கிறாள். `பைத்தியமா? உனக்கு ரத்தம் வருகிறதேடி' என்று கதறுகிறார். ` இந்த ரத்தத்தை அந்த பிரம்மாவின் மூஞ்சியில் பூசிடுங்கோ' என்கிறாள்.

இந்த இரு கதைகளிலும் வரும் விதவைகள் இருவரும் மரணத்தைத் தேர்வு செய்கின்றனர். புதுமைப்பித்தன் விதவைகளின் பக்கமிருந்து நமது பழங்கருத்தியல்கள் மீது ஓங்கி அடித்து நொறுக்குகிறார். பிராமண எழுத்தாளர்கள் இவ்விதமான கதைகளில் ஒருவித மென்மைப் போக்கைக் கையாண்டபோது புதுமைப்பித்தன் அக்கருத்துக்கள் மீது வெடிகுண்டுகளை வீசி சிதறடிக்கிறார். இரண்டும் முக்கியமான கதைகள்தான். விதவைகளின் பாடுகள் வலி அடர்த்தி கூடி வந்திருக்குமானால் `சாப விமோசனம்' போல மகத்தான கதைகளாக வாய்த்திருக்கும். பல நல்ல கதைகள் சுருக்கமாகச் சொல்லப்பட்டதாலே அவைகள் அடைந்திருக்க வேண்டிய உச்சத்தை அடையாமல் போய்விட்டன. மொழியின் வழி வெளிப்படும் கிண்டலும் உக்கிரமும் பாதிக்கச் செய்கின்றன. ` வாடாமல்லிகை' கதையில் `அவள் பெயர் ஸரஸு; ஒரு பிராமணப்பெண். பெயருக்குப் தகுந்ததுபோல் இருக்க வேண்டும் என்று நினைத்தோ என்னவோ 17 வயதுக்குள்ளேயே சமூகம் அவளுக்கு வெள்ளைக்கலையை மனமுவந்து அளித்தது. அவள் கணவனுக்குக் காலனுடன் தோழமை ஏற்பட்டுவிட்டால் அதற்குச் சமூகம் என்ன செய்ய முடியும்? என்று பண்பாட்டுக்கூறுகளை எள்ளலுக்கு உள்ளாக்கி, ` புருஷன் வாழ்க்கையின் இன்பத்தைச் சற்று காண்பித்துவிட்டு விடாய் தீருமுன் தண்ணீரைத் தட்டி பறித்த மாதிரி, எங்கோ மறைந்துவிட்டான். என்று ஏக்கத்தைச் சொல்லி,

`கொள்கைக்காக நீர் தியாகம் செய்து கொள்ள முயலுகிறீர், அது வேண்டாம். மிஞ்சினால் நான் உமக்குப் போகக் கருவியாகத்தான் உமது தியாகத்தின் பலிபீடமாகத்தான் நீர் கருதுவீர். அது எனக்கு வேண்டாம். நான் காதலைக் கேட்கவில்லை. தியாகத்தைக் கேட்கவில்லை. நான் தேடுவது பாசம்...' என்று பேசவும் வைக்கிறார். வாடாமல்லிகை கதை நிகழும் காலம் சமூக சீர்திருத்தம் பரபரப்புடன் வளர்ந்து வந்த காலம் (1934) என்பதையும் இவ்விடத்தில் நினைவு படுத்திக் கொள்ளலாம்.

`வழி கதையில் புதுமைப்பித்தன் தம் மொழிவழி உருவாக்கும் பார்வையை இவ்விதம் தருகிறார். ` ஒரு வருஷம் சென்றது தெரியாதபடி வாழ்க்கை இன்பத்தின் முன்னொளி போல துரிதமாகச் சென்றது. பிறகு அந்த நான்கு வருஷங்களும் பிணிவாய்ப்பட்ட கணவனின் சிக்ருஷை என்ற தியாகத்தில் வாழ்க்கையின் முன்னொளி செவ்வானமாக மாறி, வைதவ்யம் என்ற வாழ்க்கை அந்தகாரத்தைக் கொண்டு வந்தது. ` மரண தண்டனையனுபவிக்கும் ஒருவன், சார்லிசாப்ளின் சினிமா படத்தை அனுபவிக்க முடியுமா? வைதவ்ய விலங்குகளைப் பூட்டிவிட்டு சுவாரஸ்யமான பிரசங்கத்தை கேள் என்றால் அர்த்தமற்ற வார்த்தையல்லவா அது? இப்படி சொல்லி வருகிற புதுமைப்பித்தன்,

` இந்த வெள்ளைக்காரன் ஒரு முட்டாள் `சதி'யை நிறுத்தி விட்டதாகப் பெருமையடித்துக் கொள்கிறான். அதை இந்த முட்டாள் ஜனங்கள் படித்துவிட்டுப் போகிறார்கள். முதலில் கொஞ்சம் துடிக்க வேண்டியிருக்கும். பிறகு... ஆனால் வெள்ளைக்காரன் புண்ணியத்தால் வாழ்க்கை முழுதும் சதியை, நெருப்பின் தகிப்பை அனுபவிக்க வேண்டியிருக்கிறதே! வைதவ்யம் என்றால் என்ன என்று

அவனுக்குத் தெரியுமா? ஒவ்வொரு நிமிஷமும் நெருப்பாகத் தகிக்கும் சதியல்லவா வைதவ்யம்? என்று வெள்ளைக்காரன் சட்டத்தின் ஓட்டை மீதும் ஒரு சொடுக்கு சொடுக்குகிறார். (உரைநடையில் விசயம் சார்ந்து தெறிக்கும் சிந்தனைகளைப் புனைகதை மொழிக்குள் மிக லாவகமாக கையாண்டவர் புதுமைப்பித்தன்) இந்த வகையில் வாழ்வின் நெருக்கடிகளைச் சற்று விரிவாக எழுதியிருந்தால் `தனி ஒருவனுக்கு' `மோட்சம்' `தியாகமூர்த்தி' `பாட்டியின் தீபாவளி' `நியாயந்தான்' போன்ற கதைகள் கூடுதல் பரிமாணம் பெற்றிருக்கும்.

ஒரு பக்கத்தில் சொல்லி முடித்து விடுகிற கதைகளிலும் பிரச்சினையின் மையத்தை ஒட்டி வேறு என்னென்ன சொல்லத் தோன்றுகிறதோ அதையெல்லாம் சொல்லி வந்து மையத்தைத் தொடுகிறார். இதில் அவர் எடுத்துக்கொள்ளும் சுதந்திர உணர்வு சிறுகதையின் ஒருமைக்கு வெளியே சென்றாலும் அதுபற்றி அவர் கவலைப்படுவதில்லை. புதுமைப்பித்தனின் முத்திரையே அம்மாதிரி இடங்களில்தான் துள்ளிவிழுகிறது. மற்றொன்று, சிறுகதையின் வடிவ ஒருமை குறித்து தீவிரமாக விவாதிக்கப்படாத காலம். வடிவத்தை லேசாக நெகிழ்த்துக்கொண்டு எண்ணத்தின் வீச்சிகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கிறார்.

ஒரு இடத்தைப் பற்றி சொல்லும்போது அவருக்கே உரிய கிண்டல் தொனி மேலோங்கச் சொல்கிறார். ஒருமைப் பண்பாட்டு இழைகளால் பின்னப்பட்டிருப்பதாலே தமிழ் வாசகர்களை வசீகரிக்கச் செய்கின்றது. பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப்போல் அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்கிறார்களே அந்தத் தத்துவத்தைக் கொண்டு நியாயம் என்று சமாதானப் பட வேண்டிய விதிதான். ஒரு சில `மகாராஜாகளுக்காக' இம்மையின் பயனைத் தேடிகொடுக்கக்

கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது. என்று பொன்னகரத்தை அறிமுகப்படுத்திவிட்டு பொன் நகரத்து மக்கள் வாழும் பூர்வ புண்ணியத்தெருவை அடுத்துக் காட்டுகிறார்.

` இந்த திவ்விய பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால்... சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும்பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும், வழி நெடுகச் சேற்றுகுழம்புகள். சாலையோரமாக `முனிசிபல் கங்கை' அல்ல. யமுனைதானே கறுப்பாக இருக்கும்? அதுதான். பிறகு ஓர் இரும்புவேலி. அதற்குச்சற்று உயரத்தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம்.

மறுபக்கம் வரிசையாக மனிதக்கூடுகள்- ஆமாம், வசிப்பதற்குத் தான்! என்று விவரித்துச் செல்கிறார். பொன்னகரத்து அம்மாளு வறுமையால் கற்பு பிறழ்வதை சொல்லவந்த புதுமைப்பித்தன் ஊரின் வறுமையை, தெருவின் அலங்கோலத்தை, அங்கு வாழும் மனிதர்களின் பசியைச் சொல்லி அம்மாளு அடிபட்டுகிடக்கும் கணவனுக்குப் பால்கஞ்சி வாங்க ஆடவன் அழைத்த இருண்ட சந்துக்குள் ஒதுங்கி காசைப் பெற்று வருவதைச் சொல்கிறார். அதை மட்டும் தொட்டு நிறுத்தாமல் ஒரு குதி குதிக்கிறார். திருவிளையாடல்களை நிகழ்த்த கைலாயத்திலிருந்து அடிக்கடி மதுரை நோக்கி இறங்கிவந்த சிவனின் காலடிபட்ட இடம் தான் இந்த பொன்னகரம் என்பதையும் கற்புகனலியால் எரியூட்டப்பட்ட மதுரை என்பதையும் நினைவிற்குள் கொண்டு வந்து `என்னமோ கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்' என்று ஒரு போடும் போடுகிறார்.

பிரச்சினைக்குரிய மனிதரைப் பற்றி அறிமுகம் செய்யும்போது மொழியில் எகத்தாளம் தெறிக்கிறது. `தேவ இறக்கம் நாடார் அவருக்கு வல்லின இடையினங்களைப் பற்றி அபேதவாதக் கொள்கையோ, தனது பெயரை அழுத்தமாகச் சொல்ல வேண்டும் என்ற ஆசையோ எதுவானாலும் அவர் எப்பொழுதாவது ஒரு தடவை இந்த `டமிலில்' எழுதுவது போல எழுதிவிடுவோம்- நல்ல கிறித்தவர். புரோட்டஸ்டாண்ட் சர்ச்சில் சேர்மனாக இருந்து, மிஷனில் உபகாரச் சம்பளம் பெற்று வருபவர். இந்த உலகத்திலே கர்த்தருடைய நீதி வழங்கப் பெறுவதற்காகப் பாடுபட்டதனால் ஏற்படப்போக இருக்கும், இந்த உலகத்தின் பென்ஷனை எதிர்பார்க்கிறார்.(நியாயம்)

இரவு நேர சென்னை நகரத்தைப் பற்றி `கண்ணைப் பறிக்கும் விளக்குகள், உள்ளத்தைப் பறிக்கும் நாகரிகம்! மனிதனின் உயர்வையும் உடைவையும் ஒரே காட்சியில் காண்பிக்கும் நாகரிகச் சின்னங்கள்'

` இது கலியுகமல்ல, விளம்பரயுகம் என்பதற்குப் பொருள் தெரிய வேண்டுமானால் இந்த நகரத்தின் இரவைக் காண வேண்டும். இந்தக் கூட்டங்கள்! – ஏன் இவ்வளவு அவசரம்? இதுதான் நாகரிகத்தின் அடிப்படையான தத்துவம் – போட்டி வேகம்? இந்தப் பக்கங்களுக்கு அதற்குமேல் வரவேண்டுமென்றால் `ஆசாமியாக இருக்க வேண்டும்; அல்லது குருடனாக இருக்க வேண்டும். அல்லது கண்கள் எல்லாம் எல்லாவற்றையும் பார்ப்பதற்குத்தான் என்ற இரும்புத் தத்துவம் கொண்ட மனிதனாக இருக்க வேண்டும். என்று மூன்று நகர்வுகளாகக் காட்டிவிட்டு திடுக்கென ஒரு காட்சியை காட்டுகிறார்.

`அதோ மூலையில் சுவரின் அருகில் பார்த்தீர்களா? சிருஷ்டித் தொழில் நடக்கிறது. மனிதர்களா? மிருகங்களா? நீங்கள் போட்டிருக்கிறீர்களே பாப்லின் ஷர்ட்டு உங்கள் ஷெல் பிரேம் கண்ணாடி! எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்கவேண்டியதைத் திருடியது தான். ரொம்ப ஜம்பமாக, நாஸுக்காகக் கண்ணை மூடவேண்டாம். எல்லாம் அந்த வயிற்றுக்காகத்தான' எந்த இடத்தில் எப்படிச் சொல்வார் என்று அனுமானிக்க முடியாத எழுத்து அவருடையது. ஆனால் மிகப் பொருத்தமானது. விழிப்புணர்வு மிக்கது. புதுமைப்பித்தனிடம் கிளம்பும் கூர்மையான- தற்செயலான விமர்சன மொழி படைப்பிற்குள் பேரெழிலோடு ஜொலிக்கிறது.

புதுமைப்பித்தனின் மரபிலக்கிய வாசிப்பு புனைகதைகளுக்குக் கூடுதல் பரிமாணத்தைத் தரும் மொழியாக மாறி செயலாற்றுகிறது. பசியால் வாடி வதங்கும் பரம ஏழையான அம்மாசிச் சாம்பானைப் பற்றி `இவனுடைய வளர்ச்சிப் படலத்தைப் பற்றிய பிள்ளைத்தமிழ் பற்றி யாரும் எழுதி வைக்காமல் போய்விட்டதால் 20 வயது வருமட்டுமுள்ள சரித்திரக் குறிப்புகள் கிடைக்கவில்லை' என்று படிக்காத பாமரரின் ஒன்றுமற்ற தடங்களை எழுதுவார். அதேபோல விவரணையில் வந்துவிழும் ஆங்கிலச் சொவிகளுக்கும் ஒரு கவர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. ` புரட்சி மனப்பான்மை' கதையில் `மலையாளத்து ரிசர்வு போலீஸ்காரர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் தங்கள் சொந்த பாங்கில் இருக்கும் கரண்ட் டெப்பாஸிட்டாகக் கருதி அதில் அத்துமீறித் தலையிடுகிறவர்களை சொந்த கோபாவேசத்துக்கு ஆளாக்குகின்றனர்' என்று எழுதுவார்.



ராமசாமி பத்தர், அப்பாவின் குலத்தொழிலை வெறுத்து நகரத்தில் `ஒர்க் ஷாப்' வைத்து தொழில் செய்கிறார். அத்தொழில் ஏற்றம் இறக்கம் காண்கிறது. பல பெண்களோடு அவருக்கு உறவு ஏற்படுகிறது. தொழில் முடங்குகிறது. ஆட்ட பாட்டம் ஒடுங்கி நாற்பது வயதில் வேறு வேலை தேடுகிற பத்தரைப்பற்றி `பழைய சல்லாப காலங்களில் சேகரித்த `முதல்' வீணாகப் போகவில்லை. மருந்து என்ற சிறிய தடையுத்தரவிற்குப் பயந்து இத்தனை நாட்கள் பதுங்கியிருந்த வியாதிகள் மீண்டும் உறவாட ஆரம்பித்தன.' இப்படி எள்ளலோடு எழுதுகிறார்.

புதுமைப்பித்தன் சமூகமனநிலையைப் போகிற போக்கில் தொட்டுக்காட்டிச் செல்லும் போது கதையின் உண்மைதன்மைக்குக் கூடுதல் அழுத்தம் ஏற்படுகிறது. இதே ராமசாமிபக்தர் (தியாக மூர்த்தி) ராமானுஜலு நாயுடு மோட்டார் மெக்கானிக்கில் சேர்ந்து உழைக்கிறார். முதலாளி பற்றி `ராமானுஜலு நாயுடு குணமுள்ளவர் தாம். சில சமயங்களில் ஐந்து பத்து முன்பின் யோசிக்காமல் கொடுத்து உதவுகிறவர் தாம். ஆனால் பணம் சேர்ப்பதற்கு தான் அவர் சென்னையிலிருந்து திருநெல்வேலிக்கு வந்தாரே ஒழிய, தொழிலாளர்களுக்குத் தர்மம் செய்து புண்ணியம்

சம்பாதிக்க வரவில்லை.' என்று மனிதனின் யதார்த்த உளவியலுக்குள் இழுத்து விடுகிறார்.

வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் புதுமைப்பித்தன் தன் எண்ணத்தை, தனது மதிப்பீட்டை, தனது பார்வையைத் தனது அனுபவச்சாரத்திலிருந்து பெற்ற தெளிவைச் சொல்லாமல் விட்டது இல்லை. ' எப்போதும் முடிவிலே இன்பம்' என்ற கதையில் ஒரு கலெக்டர் பங்களாவில் முயல் பதுங்கி வாழ்கிறது. அதைப் பிடிக்க நாய் வரவழைக்கப்படுகிறது. நாய், முயலுடன் நட்புக்கொள்ள விரும்புவதாகப் பேசுகிறது. முயல் பதில் அளிக்கிறது.

'' நீரோ மாமிசத்தை விட முடியாது என்கிறீர். என்னைத் தின்ன மாட்டேன் என்றாவது சத்தியம் செய்து கொடுப்பீரா?''

''இந்த லோகத்திலே யாராவது குருவைத் தின்பார்களா? உமக்கு ஏன் இந்த சந்தேகம்'' என்றது நாய்.

''லோகத்திலேதான் சில பேர், தம் வயிற்றுக்குள்ளே குரு போய் விட்டால் தாமே குருவாகிவிட்டதாக நினைத்துக் கொள்கிறார்கள். அது நமக்கு தெரியாது போல இருக்கிறது'' என்று சொல்லியது முயல்.

'?' என்றொரு கதை. அதில் குருவும் சிஷ்யனும் இமயமலைப்பயணம் செல்கின்றனர். குரு சொல்கிறார்:

'' அதோ தெரிகிறதே பார்த்தாயா கைலயங்கிரி, உயர்ந்து கம்பீரமாக வானைக் கிழித்துக் கொண்டு! சித்திரத்திலகம் போல அதன் உச்சியில் வான் தகட்டில் தெரிகிறதே ஒரு நட்சத்திரம்- பிரகாசமாக- அதைப்போலத்தான் இலட்சியம், தெய்வம்!.

'' பிரபோ! நிமிர்ந்து நின்று என்ன பயன்? உயிரற்றுக்கிடக்கிறதே! பிரகாசமாக இருந்தால் மட்டும் போதுமா? ஒருவன் எட்டிப்

பிடிப்பதற்காக அது இருந்தென்ன அல்லது கண்ணுக்குத் தெரியாமல் போய் என்ன?'' என்கிறான் சிஷ்யன்! இப்படி புதுமைப்பித்தனின் மேதமை வெளிப்படும் இடங்கள் பல உண்டு. பொதுவாக, சொர்க்கம், கைலாசம், வைகுந்தம், எமலோகம், விஷ்ணு, திருமால், பிள்ளையார்- கடவுள் என வாழ்க்கைக்கு எட்டாத விசயங்கள் சமூகத்திற்க்கு, தனிமனிதனுக்கு பயனில்லை என்பதுதான் புதுமைப்பித்தன் கருத்து. அல்லது இவ்விசயங்கள் புழுதியில் புரளும் மக்களை காருண்யத்தோடு அனைத்து கொள்ளாதபோது இருந்தும் பயனில்லை என்பது புதுமைப்பித்தனின் கருத்து. (காலனும் கிழவியும், மனக்குகை ஓவியங்கள்,'?', சாமியாரும் குழந்தையும் சீடையும், அன்று இரவு)

நிச்சயத்திருந்த பெண்ணின் திருமணம் பெற்றோர்களால் தடைபடுகிறது கற்பை பறிகொடுத்து விடுகிறாள். புத்திபேதலித்து கணவனைத் தேடியலைகிறாள். (ஆண்மை) ` நடைமுறை உலகத்திலே, இந்த மகத்தான கலியுகத்திலே, திருமணம் என்றால் குலப்பெருமை கிளைத்தும் கலகாரம்பம் என்பது எனக்கு தெரியும்' என்று திருமணம் குறித்த தனது விமர்சனத்தை முன் வைக்கிறார்.

இரண்டாம் உலகப்போர்ச் சூழலில் மனிதர்களிடம் ஏற்பட்ட பயத்தையும் பதைபதைப்பையும் மௌன ஓலத்தையும் சொல்கிறது ` படபடப்பு' கதை. அதிலே `உலகிலே- மனிதனுக்கு உலகம் என்பது என்ன? பூகோள புஸ்தகத்தில் படிப்பதா? அல்லவே அல்ல. அனுபவ கிரந்தத்தில் படிப்பதேயாகும். அது இரண்டரைச் சதுரமைல் விஸ்தீரணமுள்ள ஒட்டப்போட்டியாக இருக்கலாம். அல்லது நியூயார்க் மாதிரி ஒரு சின்ன பிரபஞ்சமாக இருக்கலாம். அல்லது நாலு முழத் தொட்டிலாக இருக்கலாம். பக்குவத்துக்கு ஏற்றபடி அதுதான் உலகம். அந்த உலகத்தைத்தான் ஆதிசேஷன் தாங்குகிறான். சூரிய

மண்டலத்தை சுற்றி வரும் உருண்டையான கிரஹ கோலத்தையல்ல...' என்று அனுபவ உலகைப் பெரும் போர் நிகழ்ந்த சூழலிலும் வேறொன்றாக மேலதிகமான சிந்தனையோட்டங்களைச் சர்வசாதாரணமாக வெளிப்படுத்தி `வழி' கதையில் இளம் பெண் விதவையான கோலத்தை,' ஒரு வருஷம் சென்றது தெரியாதபடி வாழ்க்கை, இன்பத்தின் முன் ஒளிபோல துரிதமாக சென்றது பிறகு முன்னொளி போல துரிதமாகச் சென்றது. பிறகு அந்த நான்கு வருஷங்களும் பிணிவாய்ப்பட்ட கணவனின் சிக்ருஷை என்ற தியாகத்தில் வாழ்க்கையின் முன்னொளி செவ்வானமாக மாறி, வைதவ்யம் என்ற வாழ்க்கை அந்தகாரத்தைக் கொண்டு வந்தது. `என்று எழுதியது விதவையான பெண்கள் அத்தனை பேருக்குமான ஒரு துயரப்படிமமாக அமைந்து பொருள் தருகிறது. அப்படி காணுகின்ற ஆற்றலைத்தான் மேதமை என்று குறிப்பிடுகிறோம்.

` பிரம்மராட்சஸ்' ஒரு சிக்கலான மாய எதார்த்தக்கதை மனிதனுக்குள் ஓடும் தேடல் என்ற அதிதீவிரம் உந்த மர்மத்தின் உள்முகங்களைக் காணப்புறப்பட்டு குகைக்கு உள்ளே கரிக்கட்டையான நன்னயபட்டனின் கதை இது. நித்தியத்துவத்திற்கு ஆசைப்பட்டு அதன் ரசவாதங்களைச் செய்து பார்த்து தவறான செய்கையால் இழந்த நன்னயபட்டனின் மன உலகைக் கவித்துவ வரிகளால் எழுதுகிறார்.

` அவன் பொன்னை விரும்பவில்லை. பொருளை விரும்பவில்லை. போகத்தை விரும்பவில்லை. மனக்கோடியில் உருவம் பெறாது வைகறை போல் ஆசை எண்ணங்களைத் துருவியறியவே ஆசைப்பட்டான். மரணத்தால் முற்றுப்புள்ளி பெறாது ஆராய்ச்சியின் நுனிக்கொழுந்து வளர வேண்டுமென்ற நினைப்பில் அவன் ஏற்றுக்கொண்ட சிலுவை அது'- இக்கதை முழுக்க எக்களிப்புடன் தீவிரமான படைப்புமொழி பொங்கிவழிவதை வாசகர்கள் படித்து அனுபவிக்க வேண்டியது. அதில் ஓரிடம். ` காற்று அசைவில்லாது

நிற்கும் மரங்களிடையே ஒரு துயரம் பொதிந்த பெருமூச்சு எழுந்தது. என்ற வரி இக்கதையின் ஒட்டுமொத்தமான குரலாக மாறும் விந்தையையும் காணலாம்.

சு. வேணுகோபால் (பிறப்பு: மே 20 1967) என்பவர் ஒரு மூத்த தமிழ் எழுத்தாளர்.கோயம்புத்தூரில் உள்ள குமரகுரு பன்முக கலை, அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரிந்து வருகிறார்.இவர் எழுதிய "வெண்ணிலை" எனும் நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் 2006 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் சிறுகதை எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது. இலக்கிய விமர்சனக் கட்டுரைகளையும் சிறுகதைகளையும் தொடர்ந்து எழுதி வருகிறார்.

https://web.archive.org/web/20100312202647/http://www.kalachuvadu.com/issue-92/page56.asp

மதிப்புரை

புதுமைப்பித்தன் மொழிபெயர்ப்புகள்
ஓர் உதாரணச் செம்பதிப்பு
ஜி. குப்புசாமி

புதுமைப்பித்தன் மொழிபெயர்ப்புகள்

பதிப்பாசிரியர்: ஆ. இரா. வேங்கடாசலபதி

வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம்,

669, கே.பி. சாலை, நாகர்கோவில் 629 001

முதல் பதிப்பு: டிசம்பர் 2006

பக் 840, விலை ரூ. 450

தமிழில் இலக்கிய மொழிபெயர்ப்பு என்பதைப் பற்றித் தீர்க்மான பார்வையின்றி, குழப்பமான மேம்போக்கான கருத்தாக்கங்களே நிலவிவந்த ஒரு காலகட்டத்தில் மொழிபெயர்ப்பைப் பற்றித் தெளிவான இலக்கியப் பிரக்ஞைகொண்ட பார்வையை

முன்வைத்தவர் புதுமைப்பித்தன். தழுவலா மொழிபெயர்ப்பா என்பது பற்றி கல்கி, க.நா.சு. ஆகியோருடன் புதுமைப்பித்தன் நடத்திய விவாதங்கள் ஆ. இரா. வேங்கடாசலபதி பதிப்பித்த 'அன்னை இட்ட தீ' தொகுப்பில் விரிவாகவே இடம்பெற்றிருக்கின்றன. தாம் மொழிபெயர்த்த நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளும் மொழிபெயர்த்த கதைகளுக்குப் புதுமைப்பித்தன் எழுதிய அறிமுகக்குறிப்புகளும் இப்போது வேங்கடா சலபதி பதிப்பித்திருக்கும் 'புதுமைப்பித்தன் மொழிபெயர்ப்புகள்' தொகுப்பில் முழுமையாகக் கிடைக்கின்றன. மொழி பெயர்ப்பு அதன் நவீன அர்த்தத்தில் வேர்விடத் தொடங்கியிருந்த அந்தக் காலகட்டத்திலேயே புதுமைப்பித்தனுக்கு மொழிபெயர்ப்பு குறித்த மிக ஆழமான புரிதல் இருந்திருப்பது இத்தொகுப்பின் மூலமாகத் தெளிவாகிறது. இது அவரது மேதமைக்கு மற்றொரு சான்று.

நவீனத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடியாகக் கருதப்படும் புதுமைப்பித்தன் அவரது சிறுகதைகளுக்காகவும் கட்டுரைகள் மற்றும் இலக்கிய விமரிசனங்கள், விவாதங்களுக்காகவும் அறியப்பட்டிருக்குமளவிற்கு மொழி பெயர்ப்புகளுக்காகக் கவனம் பெறாதிருப்பதற்கான காரணம் அவரது மொழிபெயர்ப்புகள் முழுமையான தொகுதியாக வெளிவந்திராததும் அவற்றைப் பற்றி எந்த விவாதமும் தமிழ்ச் சூழலில் நடைபெறாததுமேயாகும். இந்த இடை வெளி சலபதியின் பேருழைப்பாலும் அர்ப்பணிப்பாலும் சாத்தியமாகியுள்ள இத்தொகுப்பின் மூலம் நிரப்பப்படும் என்று நம்பலாம். பக்க அளவில் எடுத்துக்கொண்டால் தன் சொந்தக் கதைகளைவிடச் சற்றுக் கூடுதலாகவே புதுமைப்பித்தன் மொழிபெயர்ப்புகளும் செய்திருப்பது தீவிர வாசகர்கள் பலருக்கும்கூட இத்தொகுப்பு வெளிவந்திருப்பதற்கு முன் தெரிந்திருக்காது.

மேதாவிலாசமும் அந்தரங்கசுத்தியும் சுதந்திரமும் கொண்ட அசலான கலைஞனாக இருந்தபோதிலும் தனது படைப்புகளில் உருவ அமைதியைக் கொண்டுவருவதில் போதிய சிரத்தை எடுத்துக்கொள்ளாதவர் என்று புதுமைப்பித்தன் மீது ஒரு விமரிசனம் இருந்துவருகிறது. 'கதையைக் கடைசிவரை நடத்திக்கொண்டு

செல்வதில் பொறுமையில்லாதவராகவும் மிகுந்த ஈடுபாட்டுடன் ஆரம்பித்த பல கதைகளில் களத்தை விஸ் தாரமாக அமைத்து, பாத்திரங்களை ஒருவர் பின் ஒருவராக எழுப்பிப் பெரும்போக்காக நகர்த்தும் சிரத்தை பின்பகுதியில் சலிப்படைந்து அதுவரையிலும் கவனமாக இழைத்துக்கொண்டுவந்த இழைகளையெல்லாம் அவசரஅவசரமாக இழைநுனிகளில் பட்பட்டென்று முடிச்சுப்போட்டு முற்றுப்புள்ளி குத்திவிடுவதையும்' புதுமைப்பித்தனின் பீறிட்டுப் பிரவாகிக்கும் மேதமை நிகழ்த்திவிடுகிற அமைதிக்குலைவுகளாக சுந்தர ராமசாமி வருணிக்கிறார். இத்தகைய விமரிசனங்களும் விரக்திக்கும் மனக் கசப்பிற்கும் ஆளான கலைஞர் எனும் பெயரை அவர் பெற்றிருந்ததும் புதுமைப்பித்தன் தனது மொழிபெயர்ப்புகளிலும் அத்தகைய அவசரமும் அசிரத்தையுமான கையாளலைத்தான் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று எவ்விதமான ஆய்வோ ஒப்பு நோக்கலோ இன்றி உண்டாகியிருந்த ஓர் அபிப் பிராயமும் அவரது மொழிபெயர்ப்புகள்மீது போதிய கவனக்குவிப்பு இல்லாததற்குக் காரணியாக இருக்கலாம். ஆனால், சலபதி பதிப்பித்திருக்கும் இம்முழுமையான தொகுப்பை மறு வாசிப்பு செய்கையில் நவீனத் தமிழ் இலக்கியத்துக்கு மட்டுமல்ல, நவீனத் தமிழ் மொழிபெயர்ப்பியலுக்கும் புதுமைப்பித்தன்தான் முன்னோடி என்பது தெளிவாகிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை பிறமொழி ஆசிரியர்களின் கருவை, கருத்தை, கதையை, கதை மாந்தரை உள்வாங்கிக்கொண்டு மூல ஆசிரியர் பெயர் சுட்டியோ சுட்டாமலோதான் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுவந்திருக்கிறது. 1930களில் மொழிபெயர்ப்புப் பற்றிய நவீனப் பார்வையும் அணுகு முறையும் தமிழ் இலக்கிய உலகில் காலூன்றத் தொடங்கின. இந்தத் தருணத்தில்தான் அதுவரையிலான மொழி பெயர்ப்புகள் தழுவல் என்றும் மூலத்திற்குத் துரோகம் செய்வன எனவும் இனங்காணப்பட்டன. நவீன இலக்கிய மொழிபெயர்ப்பு என்பதற்கு அதன் இன்றைய பொருளில் முன்னோடிகள் எனப் பாரதி, வ.வே.சு. ஐயர், மகேசகுமார சர்மா, புதுமைப்பித்தன் ஆகியோரைத்தான் கூறமுடியும். (-ஆ. இரா. வேங்கடாசலபதி தனது பதிப்புரையில்.)

புதுமைப்பித்தன் மொழிபெயர்த்த கதைகளில் அவரது வாழ்நாளில் நூலாக்கம் பெற்ற தொகுப்புகள் உலகத்துச் சிறுகதைகள், பிரேத மனிதன், உயிர் ஆசை, (அமெரிக்கக் கதைகள்), மணியோசை (ஜப்பானிய கதைகள்), மற்றும் உலக அரங்கு என்ற நாடகக் கதைகள் ஆகியவையாகும். அவரது மறைவிற்குப் பின் பளிங்குச் சிலை (ருஷ்யக் கதைகள்), தெய்வம் கொடுத்த வரம், முதலும் முடிவும், பலிபீடம் போன்றவை வெளி வருகின்றன.

'அமைப்பு லாவண்யங்களிலும் கையாளப்படும் அசாதாரண, வார்த்தைக்கு மீறிய அதீத விஷயங்களிலும் சிகரங்கள் என்று சொல்லப்படும் கதைகளையும் தமிழ்நாட்டு வாசகர்களின் விருப்பு வெறுப்புகளை மதித்துக் கூடுமானவரை ஓரளவு கதைச்சத்து இருக்கக் கூடிய, ஆனால் அமைப்பு விசேஷங்களுடன் பொருந்திய கதைகளையும் தேர்ந்தெடுத்துத் தருவதே என் நோக்கம்' என்று 'உலகத்துச் சிறுகதைகள்' தொகுப்பின் முன்னுரையில் கூறும் பு.பி. தேர்ந்தெடுத்த கதைகளைப் பார்க்கும்போது அவரது பரந்த வாசிப்பும் அவர் வரித்துக்கொண்டிருந்த புனைபெயருக்குத் தகுந்தாற்போல் புதுவிதமான கதைகளை அறிமுகப்படுத்தும் ஆர்வமும் வெளிப்படுகின்றன. அத்தகைய புதுவிதமான கதைகளிலும் அன்றைய நவீன இலக்கிய உலகை உதாரணப்படுத்தும் நுட்பமான கலையம்சங்கள் கொண்ட கதைகளைத்தான் அவர் பொறுக்கியெடுத்திருக்கிறார்.

'உலகத்துச் சிறுகதைகள்' தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஷெஹர் ஜாதி - கதைசொல்லி, அராபிய இரவுகளின் பின்னீட்சியாக ஹென்றி டிரெக்னியரால் புனையப்பட்ட கதை. தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள கர்ணாமிர்தமாகக் கதைகள் பொழிந்து வந்தவளுக்கு மரணபயம் நீங்கி, கணவனும் இறந்த பிறபாடு, அவளுடைய சிருஷ்டி மனத்தில் கவிகிற வெறுமையை, விரக்தியை, காதலுக்கு ஏங்கும் தவிப்பை மிக அற்புதமாகச் சித்தரிக்கும் இக்கதையைப் புதுமைப்பித்தன் மொழிபெயர்க்கப் பயன்படுத்தியிருக்கும் நடை கவனிக்கத்தக்கது. மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாளனுக்குப் பலவிதமான நடைகளையும்

பல்வேறுவிதமான தொனி வேறுபாடுகளையும் படம்பிடித்துக் காட்டும் திறமை இருக்க வேண்டுமென்பதற்கு உதாரணமாக இக்கதையில் பயன்படுத்தப்பட்டுள்ள நடையும் கதையின் அடிநாதக்குரலும் அவரது 'சிற்பியின் நரகம்' சிறுகதைக்கு மிகவும் நெருக்கமாக இருப்பதை உணரலாம். இதில் சுவாரசியமூட்டும் தகவல் என்னவென்றால் 'சிற்பியின் நரகம்' வெளி வந்தது ஆகஸ்ட் 1935இல். 'ஷெஹர்ஜாதி' வெளிவந்தது நவம்பர் 1935இல். இரண்டு கதைகளிலும் இருவேறு கலைஞர்கள். ஒரு கலைப் படைப்பு நிறைவடைந்ததும் சூழ்கிற வெறுமை. கலையின் பூரணத்துவம் சூனியத்திலா முடிகிறது? இரண்டு கதைகளிலும் ஒரே விதமான கேள்விகள். படைப்பு மனம் உருவாக்கும் கதைகளின் உணர்வுத்தளம் மட்டுமல்ல, அது தேர்ந்தெடுத்து வாசிப்பதும் தன் மொழியில் பெயர்த்துக்கொள்வதும்கூட அதே அலைவரிசையில் இயங்கும் படைப்புகளாகத்தான் இருக்கின்றன.

தற்போது மறுவாசிப்புக் கோருகிற மற்றோர் அற்புதமான சிறுகதை எலியா எஹ்ரன்பர்கின் 'ஓம் சாந்தி! சாந்தி!' (பு.பி. மொழிபெயர்த்த கதைகளின் தலைப்புகளிலும் வசனங்களிலும் சிற்சிலமுறை இவ்வாறான இந்திய, தமிழக, வட்டாரக் கலாச்சாரப் பாதிப்புகள் மயங்கிக் காணப்படுகின்றன.) பாழ்வெளியான ஒரு பிரதேசத்தைக் கைப்பற்ற நடக்கும் ஒரு வியர்த்தமான யுத்தத்தின் மத்தியில் எதிரிகள் இருவர் ஒருவருக்கொருவர் நேருக்குநேர் சந்தித்துக்கொள்கின்றனர். களைப்பில் ஸ்தம்பித்து ஒருவரையொருவர் தாக்கவும் திராணியின்றி வெறித்துக்கொண்டு நிற்கின்றனர். பின் ஒருவர் தன்னிடமிருந்த புகைக்குழலை எதிரிக்குத் தருகிறான். இருவரும் மாறிமாறிப் புகைத்து, ஆசுவாசப்படுத்திக்கொண்டு, பின் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு மடிந்துபோகின்றனர். அவர்கள் மடிந்து, மக்கி, பலகாலம் கழித்து மனித சூன்யப் பிரதேசமாக வெறிச்சோடிப்போயிருக்கும் அப்பகுதியில் ஒன்றோடொன்று கலந்து பிணைந்திருக்கும் எலும்புக் கூடுகளுக்கும் அருகே விழுந்து கிடக்கும் புகைக்குழலுக்கும் மத்தியில் கதை தொடர்ந்து செல்கிறது. வெகு

நுணுக்கமான இக்கதையை இவ்வளவு துல்லியமாக மொழிபெயர்க்க ஒரு மகத்தான கலைஞனால்தான் இயலும்.

புதுமைப்பித்தனின் மொழியாளுமையும் நடையின் பலமும் அலெக்ஸாண்டர் குப்ரினின் 'பலிபீட'த்தை (Yama, the Pit) வாசிக்கையில் தெள்ளெனத் தெரிகிறது. இந்நாவலின் முதல் ஒன்பது இயல்களை மட்டுமே புதுமைப்பித்தன் மொழிபெயர்க்க, அவர் மறைவிற்குப் பின் இந்நாவலின் முதல் பாகத்தின் எஞ்சிய நான்கு இயல்களைக் க.நா.சு. மொழிபெயர்த்து நிறைவு செய்திருக்கிறார். முதல் ஒன்பது இயல்களிலிருக்கும் காத்திரமும் ஆழமும் புதுமைப்பித்தனைவிட மொழிபெயர்ப்புகளைப் பற்றி அதிகம் பேசியவரும் அதிகம் மொழி பெயர்த்த வருமான க.நா.சு. நிறைவுசெய்த பகுதிகளில் நீர்த்துப் போயிருப்பது புதுமைப்பித்தனின் மேதமைக்குச் சான்று.

புதுமைப்பித்தனை முன்வைத்து நடத்தப்பட்ட மற்றொரு பெரிய விவாதம் தழுவல்கள் குறித்தது. 'மொப்பஸான் கதையின் தழுவு' என்ற விளக்கக் குறிப்பைத் துணைத்தலைப்பாகச் சேர்த்துத் 'தமிழ் படித்த பெண்டாட்டி' என்னும் கதையை புதுமைப்பித்தன் வெளியிட்டுள்ளார். இந்த ஒரு கதையைத் தவிர வேறெந்தத் தழுவல் கதையையும் புதுமைப்பித்தன் என்னும் பெயரில் அவர் எழுதி வெளியிடவில்லை. மேலும், அவரது வாழ் நாளில் அவர் செய்திருந்த தழுவல் கதைகள் எதுவும் நூலாக்கம் பெறவுமில்லை. அவர் எழுத்துலகில் நுழைந்த முதல் இரண்டாண்டுகளில் மட்டுமே இத்தகைய தழுவல் கதைகள் சிலவற்றை எழுதியிருப்பதைத் தழுவல்கள் பிரதானமாக நிகழ்ந்து வந்த காலகட்டத்தில் பொதுத் தன்மைக்கு ஆளாகிச் செய்த காரியமாகத்தான் கருத இடமிருக்கிறது என்று குறிப்பிடும் சலபதி, தழுவலா மொழிபெயர்ப்பா என்ற விவாதத்தை 1937இல் தொடங்கிவைத்துத் தழுவி எழுதுதலை மிகத்தீர்க்கமாக எதிர்த்த அவர் 'புதுமைப்பித்தன்' என்ற பெயரில் இல்லாமல் வேறு பெயர்களில் இக்கதைகளை வெளியிட்டதை வைத்துப் பார்க்கையில், தன் படைப்பியக்கத்தில் கதையைக் கையாளும் வெவ்வேறு உத்திகளுக்கான பயிற்சியாகவே இத்தகு

தழுவல்களை முயன்று பார்த்திருக்க வேண்டும் என்று சரியாகவே அனுமானிக்கிறார்.

சாதாரண மனிதனுக்குப் பிறநாட்டு நாகரிக சம்பிரதாயங்கள்மீதுள்ள சந்தேகத்துடனும் பயத்துடனும் கலந்த வெறுப்பைப் போக்கி மற்றவர்கள் இலக்கியங்களை அனுதாபத்துடன் அளாவளாவவைக்கும் நோக்கத்தில் மட்டுமே மொழி பெயர்ப்பதாகக் கூறும் புதுமைப்பித்தன், அயல்மொழி ஆள் பெயர்கள், புறச் சின்னங்கள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அப்படியே மொழிபெயர்ப்பிலும் கொண்டுவருகிறார். பலசமயங்களில் வாக்கியத்தின் போக்கிலோ அடைப்புக்குள்ளோ அடிக்குறிப்புகளிலோ விளக்கியும் செல்கிறார். மொழிபெயர்க்கப்படும் கதையின் கலாச்சாரத்திற்கு மொழிபெயர்ப்பு விசுவாசமாக இருக்க வேண்டிய அதே நேரத்தில் வாசிப்பவனுக்கும் விலகலைக் கொண்டுவந்துவிடக் கூடாதென்ற கவனத்தில் இவ்விருநிலைகளுக்கிடையே சிலவேளைகளில் அவர் சமன்செய்ய நேர்ந்திருக்கிறது.

இருந்தும், இத்தகைய சிற்சிறு சறுக்கல்களை அதனதற்குரிய விமரிசன மதிப்பில் நிறுத்திவிட்டு அவர் மொழிபெயர்த்த சுமார் எழுபது கதைகளில் உருவ அமைதி கூடிப்பெற்ற, நுட்பமான கலையம்சங்கள் நிறைந்த, அழுத்தமான கதைகளாக 'இஷ்ட சித்தி', 'ஓம் சாந்தி! சாந்தி!', 'நாடகக்காரி', 'ரோஜர் மால்வினின் ஈமச் சடங்கு', 'சிரித்த முகக்காரன்', 'ஷெஹர்ஜாதி', 'முதலும் முடிவும்', 'மிளிஸ்', 'உயிர் ஆசை' போன்ற கதைகளைக் கூறமுடிகிறது. புதுமைப்பித்தன் என்று நாமெல்லோரும் அறிந்திருக்கும் கலைஞனின் ஆன்மா சிறிதளவேனும் பிரதிபலிக்கக்கூடிய கதைகளையே தெரிவுசெய்து வந்திருக்கிறார் என்பது 'சிரித்தமுகக்காரன்', 'இஷ்டசித்தி' போன்ற கதைகளை வாசிக்கும்போது புலப்படுகிறது. 'சிரித்த முகக்காரன்' கதையில் காணப்படும் இந்தப் பத்தியைத் தனியாக வாசித்தால் அது ஏதோவொரு புதுமைப்பித்தனின் சிறுகதையில் இடம்பெற்றிருக்கக்கூடிய வரிகளாகவே தோன்றுகிறது:

'ஒவ்வொரு சிறு பேச்சும், ஒவ்வொரு சிறுவம்பும், சிரிப்பைத் தூண்டும் விஷயமும் உலகத்தின் சோகத்திலேதான் பிறக்கிறது. அதுதான் உண்மை. மனிதர்கள் பரஸ்பரம் சந்தித்துக்கொள்வது குதூகலமோ, துக்கமோ எதுவானாலும் உலகத்தின் சோகத்திலும் சத்தியத்திலும் பிறக்கிறது.'

இத்தகைய செம்பதிப்புக்குப் பின்னால் இருந்திருக்கக்கூடிய வேங்கடாசலபதியின் பேருழைப்பு பிரமிப் பூட்டுகிறது. இதுவரை வெளிவந்த புதுமைப்பித்தனின் நூல்களை வரிசையாகத் தொகுத்து மறுபதிப்பு செய்கிற மேம்போக்கான வழியை முற்றிலுமாகத் தவிர்த்து, இக்கதைகள் முதலில் பிரசுரமான சஞ்சிகைகளில் இடம் பெற்றிருந்த அறிமுகக் குறிப்புகள், அடிக்குறிப்புகளையும் கவனமாகத் தேர்ந்தெடுத்து (பிற்பாடு வெளிவந்த தொகுப்புகள் பலவற்றில் இத்தகைய குறிப்புகள் சௌகரியமாக விடுபட்டுப் போயுள்ளன!) ஏற்கெனவே மொழிபெயர்ப்புக் கதையாகச் சேர்த்து வைத்திருந்த தவறான கதைகளைக் களைந்து, மூல பாடத்திலுள்ள அச்சுப்பிழை மட்டும் திருத்தம் செய்து பெரும் பொறுப்புணர்வோடு இத்தொகுப்பைப் பதித்திருக்கிறார் சலபதி. 'பிரேத மனிதன்' குறுநாவலின் இரண்டாம் பதிப்பில் (புதுமைப்பித்தன் காலத்திலேயே வெளிவந்தது) சேர்க்கப்பட்டிருந்த ஒரு முழு இயலையும் மாற்றம் செய்யப்பட்டிருந்த பத்திகளையும் கவனமாக இத்தொகுப்பில் சேர்த்திருக்கிறார். புதுமைப்பித்தன் மறைவுக்குப் பின் வெளிவந்த பதிப்புகளில் பதிப்பாளர்கள் செய்திருந்த மாற்றங்கள், பொறுப்பற்ற விடுதல்கள் களையப்பட்டிருக்கின்றன. பின்னிணைப்புகளில் புதுமைப்பித்தன் எழுதிய குறிப்புகள், முதல் வெளியீட்டு விவரங்கள், புனைபெயர், வெளிவந்த இதழ், முதல் பதிப்பு விவரங்கள் ஆகியவை தரப்பட்டு ஒரு முழுமையான செம்பதிப்புக்கு உதாரணமாக இருக்கின்றன. புதுமைப்பித்தன் ஆய்வாளர்களும் இன்றைய தலைமுறை வாசகர்களும் சலபதிக்கும் காலச்சுவடு பதிப்பகத்துக்கும் நன்றிக்கடன் பட்டுள்ளனர்.

காணொளிகள்

01] **ஆண்மை - புதுமைப் பித்தன் சிறுகதை**

https://www.youtube.com/watch?app=desktop&v=4jx0XqHw2kU [15:59]

02] **Pudhumai Pithan story/Tamil short story/Tamil audio stories/*பயம் சிறுகதை/***
https://www.youtube.com/watch?v=XJYMWRKQVvk [16:17]
03] **செல்லம்மாள் - புதுமைப்பித்தன் சிறுகதை**
https://www.youtube.com/watch?v=RQ1Q3j7a51I [32:02]
04] கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் சிறுகதை
https://www.youtube.com/watch?v=fpvAtzIa4eA [34:02]


05] **ஆற்றங்கரைப் பிள்ளையார் - புதுமைப் பித்தன் சிறுகதை**
https://www.youtube.com/watch?v=4LEPzJUBrDI [10:05]
06] REDEMPTION (Akalikai & sabavimochanam) by puthumai pithan தமிழ் summary
https://www.youtube.com/watch?v=3h39q0iNow8 [21:56]
07] **காலனும் கிழவியும் - புதுமைப் பித்தன் சிறுகதை**
https://www.youtube.com/watch?v=RPBLDT3sy6A [10:31]
08] **புதுமைப்பித்தனின் காஞ்சனை**
https://www.youtube.com/watch?v=R8ewk4O8wOw [18:36]
09] **புதுமைப்பித்தன் சிறுகதை ஞானக்குகை**
https://www.youtube.com/watch?v=1Zb8yr0X_Xk [17:19]
10] **புதுமை பித்தனின் வேதாளம் சொன்ன கதை**
https://www.youtube.com/watch?v=fEu5OaOCXAg [13:18]

(😊)(😊) **புதுமைப்பித்தன்** (😊)(😊)

புதுமையும் பித்தமும்

சிறுகதை
மன்னன்







கம்பனுக்கு உறை !


ஒரு தடவை பி.ஸ்ரீ.ஆசார்யா சித்திர இராமாயணம் எழுதுவதற்காக கம்பனுக்கு பலபேர் எழுதிய உரைகளை ஆராய்ந்து கொண்டிருந்தார்; தாம் சொல்லவேண்டிய பாடலுக்கு சரியான அர்த்தம் அந்த உரைகளில் புலப்படவில்லை. அந்த வேளையில் புதுமைப்பித்தன் வந்து சேர்ந்தார்.

பி.ஸ்ரீ., புதுமைப்பித்தனைப் பார்த்து, “ என்ன சொ.வி., இந்தப் பாட்டுக்கு என்ன பொருள்? இந்த உரையாசிரியர்கள் எவருமே சரியாகச் சொல்லவில்லை” என்றார்.

புதுமைப்பித்தன், “ ஆமா. இவனுக எல்லாம் கம்பனுக்கு உறை தானே போட்டிருக்கானுக” என்று அழுத்திச் சொன்னார்.







தொகுப்பு

தமிழ்த்துறை

டாக்டர். எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை-600 095.

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.

கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

(An ISO Certified Institution)

மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை - 600 095.

தமிழ்த்துறை வெளியீடு எண்: 1

புதுமையும் பித்தமும்

(தமிழ்த்துறை நடாத்திய முதல் தேசியக் கருத்தரங்கில் இடம்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு)

புதுமையும் பித்தமும்


(தமிழ்த்துறை நடத்திய முதல் தேசியக் கருத்தரங்கில் இடம்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு)

'இலக்கியத்தில் சுவையம்சம் என்பது ஜீவத்துடிப்பில்தான் இருக்கிறது.'

நூல் தொகுப்பு

பதிப்பாசிரியர் குழு





"வார்த்தைகளை வைத்துக்கொண்டு ஜனங்களை பயங்காட்டுவது ரொம்ப லேசு."

தமிழ்த்துறை
டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(An ISO Certified Institution)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை - 600 095.

புதுமையும் பித்தமும்

முதல் பதிப்பு – பிப்ரவரி 2019

பதிப்புரிமை:
தமிழ்த்துறை
டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை - 600 095.

நிதியுதவி:
ந சுப்புரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை
அண்ணா நகர், சென்னை - 600 040

ISBN 978-93-88565-02-8

Book design: Mr M Ganesh Babu

Assisted by: Ms S Eswari

Printed at: DJ Pirnters, Chennai–600 095



உயர்திரு A.C. சண்முகம் FRCPS
நிறுவன வேந்தர்
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை – 600 095.

வாழ்த்துரை

டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் பல்கலைக்கழகம் தன்னுடைய கல்விச் சேவையில் முப்பத்தி மூன்றாமாண்டு தொடும் சூழலில் உள்ளது. “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என்றான் மகாகவி. இது பொய்யுரையன்று; மெய்யுரையே. வலியவர் மெலியவரை அடக்கி ஆண்ட கற்கால வாழ்வின் தொடக்கத்திலேயே “பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே” எனச் சமத்துவம் பேசியது தமிழ். “உண்பது நாழி உடுப்பவை இரண்டே” எனப் பொதுவுடைமை போதித்த மொழி தமிழ். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனச் சகோதரத்துவம் சொன்ன மொழி தமிழ். இப்படித் தமிழின் பெருமையை அடுக்கிக் கொண்டே போகலாம். இம்மொழியில் எழுந்த இலக்கியச் செல்வங்கள் தாம் எத்துணை! எத்துணை!

உலக இலக்கியங்கள் பலவும் மனித இனத்தின் மேன்மையை வளர்த்தெடுக்க முயன்றனவாயினும் அப்பணியை கால இடையறவு இல்லாது தொடர்ந்து செய்து வரும் மொழி நம் தாய்மொழியாம் தமிழ்மொழியே என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும். நம் இலக்கியங்களை கூர்ந்து நோக்கி அவை போதித்துள்ள வாழ்வின் விழுமியங்களை இன்றைய தேவைக்கு ஏற்ப எடுத்துரைக்க வேண்டியது காலத்தேவை ஆகும். அத்தேவையை திறம்படச் செய்து கொண்டிருப்பது எம் பல்கலைக்கழக தமிழ்த்துறை. அத்துறை, ஆய்வுப்பணியில் அரிய சாதனைகளை நிகழ்த்தி வருகின்ற துறையாகத் திகழ்கிறது எனக் கூறுவதில் உண்மையிலே மனம் மகிழ்கின்றேன். தமிழ்த்துறையின் ஆய்வுப்பணிக்குச் சான்றாக ***“புதுமையும் பித்தமும்”*** என்ற இந்த தேசியக் கருத்தரங்கு அமைந்துள்ளது மிகவும் பெருமைப்படத்தக்கது. இத்தருணத்தில் தமிழ்த்துறை பற்பல பணிகள் செய்து மேலும் வளர அன்புடன் வாழ்த்துகிறேன்.



A.C.S. அருண்குமார்
தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை – 600 095

வாழ்த்துரை

உலகமொழிகளில் தொன்மைச் சிறப்பும் தன்மைச் சிறப்பும் கொண்டு இன்றுவரை மரபு இழையோட்டத்தோடு திகழ்வது சிலமொழிகளே. அந்தச் சில மொழிகளுள் பழமைக்கும் பழமையாய் புதுமைக்கும் புதுமையாய் உயர்தனி மொழியாய் விளங்குவது தமிழ்மொழி. அத்தமிழ் மொழிக்கு இனிமை சேர்க்கும் விதமாக டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் பல்கலைக்கழகம் தன்னுடைய கல்விச் சேவையில் முப்பத்தி மூன்றாம் ஆண்டை தொடங்கும் சூழலில் உள்ளது. தமிழ்ச் சிறுகதை உலகின் முடிசூடா மன்னன் புதுமைப்பித்தனின் சிறுகதைகளை ஆய்வுச் செய்து கட்டுரை மலராக்கி தேசியக் கருத்தரங்கை நடத்துவது எனக்கு மனமகிழ்வைத் தருகிறது.

தமிழர்களின் வாழ்வில் மொழியாய், மாமனிதனாய், புரட்சியாளராய் திகழ்பவர் புதுமைப்பித்தன். இவர் சமுதாயத்தின் புரையோடிப்போன இழிவுகளைத் தோலுரித்துக்காட்டல், சமுதாயச்சாடல்கள், மற்றும் முற்போக்குச் சிந்தனை என பல கோணங்களில் சிறுகதைகளை யாத்தவர். தமிழ்த்துறையின் சார்பாக வெளிவரும் ***“புதுமையும் பித்தமும்”*** எனும் இவ்வாய்வுக் கோவை மிகச் சிறப்பாக அமைந்தமைக்கு, தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும், ஆய்வுக்கட்டுரையை வழங்கிய பேராசிரியர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும் வாழ்த்துரை வழங்குவதில் பெருமகழ்வு கொள்கிறேன்.



டாக்டர் கே. மீர் முஸ்தபா உசேன்
துணை வேந்தர்
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை – 600 095

வாழ்த்துரை

தரணி புகழும் டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தமிழ்துறை, ***"புதுமையும் பித்தமும்"*** என்ற தலைப்பில் தேசிய அளவில் நடத்தும் கருத்தரங்கம். அதன் தலைப்பே தலைநிமிர்ந்து நிற்க செய்கிறது. "தொட்டனைத் தூறும் மணற்கேணி" என்பான் வள்ளுவப் பேராசான். மண்ணைத் தோண்டத் தோண்ட ஊற்றுப் பெருக்கெடுத்து உண்ணுநீர் நமக்கெல்லாம் அளித்துக் கொண்டே இருக்கும். அது போன்றது தான் ஆய்வு ஊற்றும். அந்த வகையிலே காலமெல்லாம் தமிழ் அறிஞர்கள், தமிழ்ப் புலவர்கள், தமிழ் ஆய்வாளர்கள் தங்களுக்குப் புலப்படாததைப் புலப்படும் வண்ணம் தோண்டி எடுத்து நமக்கெல்லாம் கொடுத்த புதையல்தான் நாம் இன்றைக்குப் பெற்று மகிழ்ந்திருக்கிற தமிழ்க் கருவூலம். ஆய்வுப் பணியில் அரிய சாதனைகளை நிகழ்த்தி வருகிற பல்கலைக்கழகமாக திகழ்கிறது எனக் கூறுவதில் உண்மையிலேயே மனம் மகிழ்கின்றேன். இக்கருத்தரங்கிற்கு ஆய்வுக்கட்டுரைகள் வழங்கிய பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் மற்றும் கருத்தரங்க இயக்குநர், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள், தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரையும் மனதார வாழ்த்துகிறேன்.



டாக்டர் சி. பா. பழனிவேலு
பதிவாளர்
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை – 600 095

வாழ்த்துரை

தமிழ் இனிமையான செம்மையான மொழி. அம்மொழி இப்புவியில் என்றும் தழைத்தோங்க அதில் மணிமகுடமாக விளங்கும் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனின் சிந்தனை ஊற்றைத் தரணி எல்லாம் பரப்பவும், ***“புதுமையும் பித்தமும்”*** என்ற இத்தேசிய கருத்தரங்கிற்கு பல ஆய்வுக்கோவைகளும், கருத்தரங்க ஆய்வுக்கோவையும் வெளிவந்ததில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 2013-ல் தொடங்கப்பெற்ற நம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதல் **“தேசியக் கருத்தரங்கம்”** நடத்துவதை மனநிறைவோடு பாராட்டி மகிழ்கிறேன்.



டாக்டர் மணிவண்ணன்
புலத்தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

வாழ்த்துரை

'கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்னும் பொன்மொழிக்கேற்ப அனைவரையும் அரவணைத்து வழிநடத்தும் நமது நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை சீரும் சிறப்போடு திகழ்ந்து வருகிறது. இத்துறையின் வளர்ச்சியாகப் புதுமைப்பித்தனின் சிறுகதைகளை ஆய்வுக்களமாகக் கொண்டு முதல் தேசியக் கருத்தரங்கைச் செவ்வனே நடத்தும் வகையில் மிகப்பெரிய பங்களிப்பை அளித்துள்ளது. தமிழ்த்துறை மேன்மேலும் உயரவும் ஆய்வுக்கோவை சிறப்புற அமையவும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் ப. விமலா அண்ணாதுரை
தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர்
செல்லம்மாள் மகளிர் கல்லூரி
பச்சையப்பன் அறக்கட்டளை
கிண்டி.சென்னை - 32
94442 31514.7200079398
vimalaannadurai@gmail.com

வாழ்த்துரை

டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மாணவர்களுக்கு ஆக்கப்பூர்வமான கல்வி மற்றும் மிகச் சிறந்த எதிர்காலத் தலைமுறையினரை உருவாக்கும் பணியைச் செய்து வருகின்ற ஒரு கல்வி நிறுவனம். கல்வி,கலைகள் மட்டுமல்லாது இந்நிறுவனத்தின் தமிழ்த்துறை தமிழ் இலக்கிய ஆராய்ச்சியினை மேலும் வளப்படுத்த ***“புதுமையும் பித்தமும்”*** என்றத் தலைப்பிலான தேசியக் கருத்தரங்கினை நடத்துவதில் மிக்க மகிழ்ச்சி. தேசிய கருத்தரங்கினில் பேராசிரியர்கள், தமிழ்ச்சான்றோர் மற்றும் ஆய்வாளர்கள் தங்கள் கட்டுரைகளை புதுமைப்பித்தனின் சிறுகதைகளை நுண்மாண் நுழைபுலம் ஆய்ந்து அளித்துள்ளமை பெருமைக்குரியது.

எழுத்துலகில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டு அரை நூற்றாண்டுக்கும் மேலாக அந்த இடத்தினைத் தக்க வைத்துக் கொண்டவர் புதுமைபித்தன்.மனங்களை விட்டு மறையாத மணிக்கொடி எழுத்தாளர். புதுமைப்பித்தன் தமிழ்ச்சிறுகதை உலகம் கண்ட தலைசிறந்த சிறுகதை ஆசிரியர். தமக்கே உரித்தான புதிய தடத்தை உருவாக்கியவர்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் கவிதைக்கு புதுமையும் புத்துயிர் கொடுத்தவர் பாரதி. தமிழ் வசனத்துக்கு புதுமையும் புத்துயிர் கொடுத்தவர் புதுமைப்பித்தன். பாரதிக்கு முன் தமிழில் மிகச் சிறந்த கவி செல்வங்கள் இருந்தன. ஆனால் புதுமைப்பித்தனுக்கு முன் மிகச் சிறந்த வசன செல்வங்கள் இருந்தன என்று சொல்ல முடியாது.

‘‘குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியில் மனித மனம் படும்பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறைமையைக் குறிப்பதே சிறுகதை’’ என்பர் திறனாய்வாளர். இச்சிறுகதை வடிவத்தைக் கொண்டு தனது கதைகளைவிட கதைக்கு ஆதாரமான வேர்களும் வித்துக்களும் ஆன கதை மாந்தர்களைப் பற்றியும் அவர்களின் வாழ்க்கைச் சிக்கல்களைப் பற்றியும் படைப்புக்களாக்கியவர் பதுமைப்பித்தன் அவர்கள்.

”புதுமைப்பித்தனின் இலக்கியம் தமிழ்நாட்டு வசன இலக்கியத்தின் சொத்து அவர் வசன இலக்கிய மன்னர்.” என்று புதுமைப்பித்தனுக்குப் பிறகு சிறுகதைகளில் குறிப்பிடத்தகுந்த சாதனைகள் புரிந்துள்ள படைப்பாளிகளில் ஒருவரான கு அழகிரிசாமி எழுதியிருக்கிறார்.

படைப்பாளியும் இலக்கிய விமர்சகருமான தொ.மு.சி.ரகுநாதன் அவர்கள், *‘‘புதுமைப்பித்தன் தமிழ் சிறுகதை இலக்கிய வளர்ச்சியிலும் வரலாற்றிலும் ஒரு மயில் கல். ஒரு திருப்புமுனை. ஒரு சகாப்தம். அதில் சந்தேகமில்லை. எவ்வாறு பாரதி தமிழ் கவிதை உலகில் உரைநடை வடிவம் உள்ளடக்கம் முதலியவற்றில் புதிய இருபதாம் நூற்றாண்டின் தமிழ் கவிதைக்கு தலைமகனாக விளங்கினாரோ அதேபோல் தமிழ் சிறுகதை இலக்கியத்திற்கு சிறப்புமிக்க தலைமகனாக விளங்கியவர் புதுமைப்பித்தன்”* எனக் குறிப்பிடுகிறார்.

புதுமைப்பித்தன் சிறுகதை, குறுநாவல், இலக்கியக் கட்டுரைகள், விமர்சனம், ஓரங்க நாடகம், கவிதை என்று பல இலக்கிய வகைகளிலும் படைப்புகளை ஆக்கியுள்ளார். உலகத்துச் சிறுகதைகள் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். என்றாலும் சிறுகதையில் தான் அவர் ஆர்வம், அக்கறை, படைப்பு, உற்சாகம், சோதனை, வேகம் முதலியவற்றை மிகுதியாக வெளிப்படுத்தினார் எனலாம்.புதுமைப்பித்தனின் எழுத்துக்கள் அவர் வாழ்நாளில் போதிய கவனிப்பையும் உரிய வரவேற்பையும் போற்றுதலையும் பெற்றது இல்லை. எனினும் அவற்றின் சிறப்புத் தன்மையை உணர்ந்து ரசிகர்களும் இல்லாமல் போகவில்லை. அந்நாட்களில் எழுத்துலகில் வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்திருந்த நிறைய எழுத்தாளர்கள் புதுமைப்பித்தனின் எழுத்துக்களால் அவற்றின் பாதிப்புக்கு ஆளானார்கள்.

புதுமைப்பித்தன் வாழ்ந்தது குறைந்த காலமேயாகும் 1906 இல் பிறந்து 1948இல் மறைந்துவிட்ட அவர் எழுத்துத் துறையில் ஈடுபட்டு இருந்ததோ மிகவும் குறுகிய காலம்தான். 1933 முதல் அவர் கதைகள் எழுதலானார். 1946-ஆண்டிற்கு பிறகு அவர் சிறுகதை எதுவும் எழுதவில்லை. சுமார் பன்னிரெண்டு வருடங்கள் தான். இக்குறுகிய காலகட்டத்தில் அவர் புரிந்துள்ள சாதனைகள் அவருடைய மேதைமையை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. அவரது அபாரமானத் தன்னம்பிக்கை, உணர்ச்சித்தீவிரம், போராடுவதற்கு தயங்காத போர்க்குணம், புதுமைகள் செய்ய வேண்டும் என்ற வேகம், தனது எழுத்தின் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுதல் போன்றவை இச்சாதனைகளுக்கு அவருக்கு துணை நின்றன என்று சொல்லவேண்டும்.

காலவோட்டத்தில் புதுமைப்பித்தனின் எழுத்துக்கள் கவனிப்பிற்கு உள்ளாகின. பல்கலைக்கழகங்களில் அவரது கதைகள் பற்றிய ஆய்வு நூல்களும், விரிவான விமர்சன கட்டுரைகளும் வெளிவரலாயின. புதுமைப்பித்தன் கதைகள் இப்போதும் சிரத்தையோடு பல்வேறு அறிஞர்களால் விமர்சிக்கவும் ஆய்வுக்கும் உட்படுத்தப்படுகின்றன. தற்காலத்தில் சமுதாய எதார்த்தங்களை கதைக்கு உரிய பொருளாக கொண்டு இலக்கியம் படைக்க விரும்புகிற எழுத்தாளர்களுக்கு புதுமைப்பித்தன் சிறுகதைகள் முன்னுதாரணங்களாக விளங்குகின்றன. இனி வருங்காலத்திலும் அனேக எழுத்தாளர்களுக்கு புதுமைப்பித்தன் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்குவார் என்று உறுதியாகக் கூறலாம்.

இங்ஙனம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட புதுமைப்பித்தனின் படைப்புகளைக் குறிப்பாக சிறுகதைகளை இளம் தலைமுறையினரிடம் கொண்டு செல்லும் மிகப்பெரிய பணியினை டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தமிழ்த்துறை மேற்கொண்டுள்ளது பாராட்டுதலுக்குரியது. ஆய்வாளரை ஊக்குவிக்கும் விதமாக சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுகளையும் அறிவித்துள்ளனர்.

சிறந்ததொரு ஆய்வுப்பணியை மேற்கொள்ள கருத்தரங்க புரவலராகத் துணைநிற்கும் பல்கலைக்கழகத்தின் நிறுவன வேந்தர் டாக்டர் ஏ. சி. சண்முகம் FRCPS ஐயா அவர்களுக்கும் பல்கலைக் கழகத் தலைவர் திரு ஏ. சி. எஸ். அருண்குமார் அவர்களுக்கும், கருத்தரங்கினை வழி நடத்தி வரும் புலத் தலைவர் டாக்டர் சா மணிவண்ணன் வளாகம் -II அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் இராசு மைனர் அவர்களுக்கும்,தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் உரித்தாக்குகிறேன்.

நதி வருமுன் மணல் தருமுன் நலம்வளர்த்த தமிழணங்கிற்கு வரும் காலங்களில் இதுபோன்று பல கருத்தரங்கங்களை நடத்தி தமிழ் ஆய்வுலக வளர்ச்சிக்குப் பங்காற்றிட வேண்டுமாய் இறைவனை வணங்கி விழைகிறேன்.

வாழ்த்துக்கள்!!! நன்றி.

பதிப்புரை

இன்றைய உலகில் சிறுகதைக்குத் தனியிடம் உள்ளது. அதிக நேரம் இல்லாததால் தற்போது படிப்பதற்கு வசதியாக அமைந்ததுவே சிறுகதை. துண்டு கிடக்கும் மனதை தூக்கி நிறுத்தும் வல்லமை சிறுகதைக்கு உண்டு. சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் சமூகத்தின் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றிப் புனைப்பெயரில் பல சிறுகதைகள் பத்திரிக்கையில் எழுதி வந்தார். எழுத்தையே தன் வாழ்க்கையாகக் கொண்டார். அவரது கதைகளைப் படித்தவர்கள் புதுமையில் பித்தம் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். சமூ கத்தில் ஒளிந்து இருக்கும் பிரச்சனைகளைக் கதைகள் மூலம் வெளிப்படுத்திக் காட்டினார். உணர்ச்சியுடன் சொற்களைப் பயன்படுத்தி மக்கள் மனதில் இடம்பிடித்தார். அவரது படைப்புகளுக்கு மரணம் இல்லை. இருப்பினும் படைப்புகள் பற்றிப் பாராட்டுகளும் விமர்சனங்களும் இருந்தன. சிறுகதையின் மூலம் அவர் வாழ்ந்த காலத்தின் நெறிமுறைகள் பிரதிபலிப்பாக இருந்தன. கேலியும் கிண்டலும் கலந்த நகைச்சுவை நடையைக் கையாண்டார். அவரது சிறுகதைகளில் மக்களின் ஏற்றத்தாழ்வுகள், மூடநம்பிக்கைகள், சமூகக் கட்டுப்பாடுகள், தீண்டாமைக் கொடுமை மற்றும் சென்னை, திருநெல்வேலி வட்டார வழக்கு சொற்கள் ஆகியவற்றை மையமாக கொண்டு சிறுகதைகளை எழுதினார்.

இரண்டு தலைமுறைகளின் மக்களது பெரும்மதிப்பும் பாராட்டும் பெற்ற புதுமைப்பித்தன் படைப்புகளைப் பொறுத்தவரை ஒரு விமர்சனனாக விளங்கினார். அவரது கதைகள் ஏதாவதொரு ஆளுமையை உணர்த்துகிறது. கருத்துகள் முற்றுப்பெற்றாலும் மக்களிடையே தீர்வுகாண வழிமுறைகளை வகுத்துள்ளார். சமுதாய மாற்றத்துடன் நிகழும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு மக்களை நீதிபதியாக முன்னிறுத்தி முடிவுகளை அவர்களையே கூறவைப்பதில் அவருக்கு ஈடு இணை அவரேதான். ஒவ்வொரு கதையிலும் அவர் எழுப்பிய வினாக்களுக்கு விடையைச் சொல்லுவதற்குச் சமுதாயம் கடமைப்பட்டுள்ளது. ஏழை எளியவர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு புத்தம் புதிய வடிவங்களையும் உத்திகளையும் கையாண்டு எழுதப்பட்டதை அவரது கதைகளில் காணமுடிகிறது. சமுதாயத்தில் நடந்த குறைகளை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டியிருப்பது பாராட்டுதற்குரியது.

மொழிபெயர்ப்புக் கதைகள், வரலாற்றுக் கட்டுரைகள் மற்றும் திரைப்படங்கள் இயற்றியுள்ளார். புதுமைப்பித்தன் என்னும் கலைஞன் படைத்துள்ள சிறுகதைகள் காலத்துக்கு ஏற்றாற்போல சூழ்நிலைக்கு ஏற்பப் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. அவை மீண்டும் மீண்டும் உரையாடிச் சிந்தனைகளைத் தூண்டும் வகையில் ஆக்கம் பெற்றுள்ளன.

அவரது சிறுகதைகளில் மக்கள் அனுபவித்த கொடுமைகளை எடுத்துக்காட்டி அதற்குக் காரணம் இந்த சமுதாயமே எனத் தீர்ப்பு வழங்கியுள்ளார். காலத்தை வென்று தமிழர்களின் மனதில் நீங்கா இடம் பெற்ற புதுமைப்பித்தனின் சிறுகதையின் தொகுப்புகள் எக்காலத்தும் நிலைத்து நின்று புகழைப் பரப்பும்.

தோன்றின் புகழோடு தோன்றுக என்ற குறளுக்கேற்ப நமது பல்கலைக்கழக நிறுவனர் மற்றும் வேந்தர் திரு A.C. சண்முகம் அவர்கள் பல சாதனைகள் புரிந்து சிறந்த சாதனையாளர் விருது பெற்றுள்ளார். அவர்களுக்கும் பல்கலைக்கழகத்தின் சிறப்பிற்காகவும் நன்மைக்காகவும் கருத்தரங்கை நடத்த அனுமதியளித்து பேராசிரியர்களின் நலனுக்காகவும் பாடுகின்ற நமது தலைவர் பொறியாளர் திரு A.C.S. அருண்குமார் அவர்களுக்கும் தமிழ்த்துறையின் சார்பாக இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது பல்கலைக்கழகத்தின் இரும்புத் தூணாக விளங்கும் துணைவேந்தர், பதிவாளர், புலத்தலைவர் ஆகியோர்களுக்கும் என் மனமகிழ்வான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ந. சுப்புரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை தேர்ந்தெடுத்த கருத்தரங்கக் கட்டுரைகளுக்குப் பரிசுத்தொகை வழங்கியமைக்கும் தேசியக் கருத்தரங்கிற்கு ஆய்வுக்கட்டுரைகள் வழங்கிய மாணவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும், பேராளர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆராய்ச்சி கட்டுரைகளின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், சில கட்டுரைகளின் தலைப்புகளில் சிறு மாற்றம் செய்யப்பெற்றுள்ளது.

பேராசிரியர் இராசுமைனர்
தமிழ்த்துறைத்தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

அன்புப்படையல்

செம்மொழி செய்த செம்மல்



19 Feb 1855 – 28 Apl 1942

மகாமகோபாத்யாய

உ.வே.சாமிநாத ஐயர்

His research work increased several times after retirement!

பணி ஓய்விற்குப்பின், அவரது ஆராய்ச்சிப்பணி பன்மடங்கானது.

Mahamahopadhiyaya

Dr UV Swaminatha Iyer

Known as Tamil Thatha, 'Grandfather of Tamil', Swaminatha Iyer was a scholar and researcher who was instrumental in bringing many long-forgotten works of classical Tamil literature to light. His singular effort over five decades brought to light major literary works in Tamil and contributed vastly to the enrichment of its literary heritage. The contribution he made to classical Tamil literature and music is immeasurable. Swaminatha Iyer was born into a poor family in a small village. His father was a musician and encouraged him to pursue a similar trade, but Swaminatha Iyer decided to concentrate on the study of Tamil. In 1880, at the age of 25, he was appointed a Tamil teacher at the Government Arts College of Kumbakonam following a rigorous selection process. In 1903, he joined Presidency College, Chennai as Tamil teacher. Swaminatha Iyer retired from active teaching in 1919. From 1924 to 1927, Iyer was the Principal of the Meenakshi Tamil College in Annamalai University, Chidambaram. On health grounds, he resigned the post, came to Madras and continued his research.

His research work increased several times after retirement. Swaminatha Iyer took it upon himself to try and recover the hidden treasures of Tamil literature by searching for missing palm leaf manuscripts. Alongside his teaching, Swaminatha Iyer conducted long and arduous journeys across Tamil Nadu and beyond, visiting every hamlet and knocking on every door. He travelled from place to place in search of palm leaf manuscripts so as to edit and publish them. It was a formidable search that lasted until his death – but it was extremely fruitful. Swaminatha Iyer collected 3,067 original ancient manuscripts, published almost 100 books on Tamil literature, and unearthed a rich and beautiful tradition of poetry, devotional works and Puranas (Hindu, Buddhist and Jain religious texts detailing history, philosophy, genealogy and cosmology).

Swaminatha Iyer's publications were not merely transcriptions of the manuscripts he discovered. He edited them, adding extensive footnotes, indices and commentaries, as well as biographical information about the authors. Swaminatha Iyer's contribution to Tamil culture also extended to the discovery of Tamil music sources from previous eras. Until these discoveries were made, very little had been known about Tamil music history. Swaminatha Iyer's publications paved the way for extensive research into the presence of Tamil music in the earlier centuries.

The honorary doctoral degree (D.Litt.) was conferred on Iyer by the University of Madras in 1906. In recognition of his outstanding literary accomplishments and contributions, he was also honoured with the title, *Mahamahopadhiyaya*, literally: "Greatest of great teachers". In the same year, when the Prince and Princess of Wales visited Madras, a function was arranged where Swaminatha Iyer was honoured. Iyer was awarded the title of *Dakshina Kalanidhi* in 1925. In 1932, the University of Madras awarded an honorary PhD to him in recognition of his services in the cause of Tamil. Indian Postal department issued a commemorative postage stamp on 18 February 2006. His house in Uthamadhanapuram has been converted as a Memorial.

தமிழ்த்துறை

டாக்டர். எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை-600 095.

புதுமையும் பித்தமும்

(தமிழ்த்துறை நடாத்திய முதல் தேசியக் கருத்தரங்கில் பரிசுபெற்ற முதல் மூன்று ஆய்வுக்கட்டுரைகள்)



முதல் பரிசு
தங்கப்பதக்கம்
பரிசுத்தொகை: ரூ 2500. 00



செல்வி சு தேஜஸ்வினி,
2ம் ஆண்டு ஆங்கில இலக்கியம்,
இளங்கலை,
ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி,
கதீட்ரல் சாலை,
சென்னை – 600 086

இரண்டாம் பரிசு
வெள்ளிப்பதக்கம்
பரிசுத்தொகை: ரூ 1500. 00



முனைவர் சி பாலமுருகன்,
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
மஹிந்திரா கலை அறிவியற்
கல்லூரி(த),
காளிப்பட்டி – 637 501

மூன்றாம் பரிசு
வெண்கலப்பதக்கம்
பரிசுத்தொகை: ரூ 1000. 00



திருமதி ம சுகிர்தா,
முனைவர் பட்ட ஆய்வாளர்
(பகுதிநேரம்),
தமிழ்த்துறை, நிர்மலா மகளிர்
கல்லூரி, கோயமுத்தூர் – 641 018.

பாராட்டுதல்கள் !

பரிசு வழங்கியோர்:
ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை, சென்னை




புதுமையும் பித்தும்

ஓர் அலசல்

பதிப்பாசிரியர் குழு

<table>
<tr><td>பதிப்பாசிரியர்</td><td>பேராசிரியர் இராசுமைனர்</td></tr>
<tr><td colspan="2">உறுப்பினர்கள்</td></tr>
<tr><td colspan="2">முனைவர் மு. சட்டநாதன்
திரு. வெ. பாலாஜி
திருமதி இரா. கவிதா
திருமதி மு. புவனேஸ்வரி
திருமதி மோ. விஜயலட்சுமி
திருமதி மா. அமுதா
திருமதி பா. விஜிபிரபா
திரு கு. இராமராஜன்
திருமதி இரா. ஷர்மிளா
செல்வி சு. ஈஸ்வரி</td></tr>
</table>





www
@
pudhumaipithan



ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

World Wide Wisdom

@

புதுமைப்பித்தன்

Compiled by:

DEPARTMENT OF TAMIL, SRI VENKATESWARA UNIVERSITY
&
DEPARTMENT OF TAMIL, DRAVIDIAN UNIVERSITY



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

WWW@புதுமைப்பித்தன்

First Edition: Feb 2020

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-943850-7-3

9 788194 385073

Wrapper design: **Centenary Committee**

Printed at: DJ Prints, Chennai – 600 095

DEDICATION

Dedicated to:

புதுமையின் பித்தர்களுக்கு

[Fans of Pudumaipithan]




ப தி ப் பு ரை

புதுமைப்பித்தனின் கதைகளை புதுமையான நோக்கில்
அணுகியிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது. அவரை அறியாதோர்
(இக்கால சந்ததியினர்), அறிந்தோர், வாசித்தோர்,
வாசிக்காதோர், புரிந்தோர், புரியாதோர்
மற்றும் பிறர் ஆகியோர் அனைவரும் ரசித்து படிக்கும்
வண்ணம் அமைந்திருக்கிறது இந்நூல்.

புதுமைப்பித்தன் கதைகளை வாசிக்க விளையும் அனைவரும்
கீழ்க்கண்ட இணையதளத்துடன் தம்மை
இணைத்துக்கொள்வார்களாக.


https://tamil-desiyam.com/pudhumai-pithan-novels-free-download/




உள்ளடக்கம்



"WRITING IS THE PAINTING OF THE VOICE!"
VOLTAIRE



THE WORST THING YOU WRITE IS BETTER THAN THE BEST THING YOU DID NOT WRITE.



The only reason for being a
PROFESSIONAL WRITER
is that you can't help it.

பின்னிணைப்பு - 1

என் கதைகளும் நானும்

புதுமைப்பித்தன்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~

"தன்பலம் தனக்குத் தெரியாது" என்பது வெகுஜன வாக்கு. அதே மாதிரி தன் பலவீனமும் விசத்திரபேதங்களும் பிறர் கண்ணுக்குத் தெரிவதுபோல தனக்குத் தெரியாதென்பதையும் வெகுஜனவாக்காகக் கொள்ள வேண்டும். ஏனென்றால், முந்திய வசனத்தின் உட்கிடை பிந்திய வியாக்கியானம். நல்லதும் சோடையுமாகச் சுமார் இருநூறு கதைகள் எழுதிவிட்டு, அப்புறம் அவற்றின் தராதரத்தைப்பற்றிக் கவனிப்பது எழுதினவருக்கு ஒரு ரசமான பொழுதுபோக்கு. என்னுடைய கதைகளைப் பொறுத்தவரை அமிர்தமான பாராட்டும் பரவசமும் ஒரு சார். மற்றொரு புறம் பலத்த மனப்பூர்வமான கண்டனம். இந்த இரண்டும் என்னுடைய கதைகள் பெற்றுள்ள கவர்ச்சிகள். ஒரு பரம ரசிகர் என்னுடைய கதைப் புஸ்தகத்தைக் கண்டவுடன் "இந்த மனிதன் எப்பொழுது கதை எழுதுகிறதை நிறுத்திக்கொள்வான்" என்று ஆவலுடன் கேட்டார். அந்தப் பரம ரசிகருக்குத் தான் என்னுடைய அடுத்த புஸ்தகத்தை அவருடைய கொய்னா மாத்திரையை சமர்ப்பிக்கப் போகிறேன். மற்றொரு கலை நுணுக்கவாதி, "இவர் என்ன சூனாமானவரா?"என்று கேட்டார். என் கட்சி பேச ஆசைப்பட்ட ஒருவர் "அவரும் நம்மைப்போல் ஒரு மனிதர் தான்" என்று தெளிவுபடுத்திக் கொடுத்தார். இதே மாதிரிதான் பரவசமும் பாராட்டுதலும். அவையும் தன்னை மறந்த "சாமியாட்ட"மாக இருக்கிறது.

என் கதையில் உள்ள கவர்ச்சிக்கு ஓரளவு காரணம் நான் புனைந்து கொண்ட புனைபெயராகும். அது அமெரிக்க விளம்பரத்தன்மை வாய்ந்திருக்கிறது என்பதை இப்போது அறிகிறேன். பிறகு நான் எடுத்தாளும் விவகாரங்கள். பலர் வெறுப்பது. சிலர் விரும்புவது, நிற்கட்டும்.

என்னுடைய கதைகளை நான் எப்படி எழுதுகிறேன்? மற்ற எல்லோரையும் போலத்தான் பேனாவும் பென்சிலும் உபயோகித்து எழுதுகிறேன். வாரத்துக்கு ஐந்து ஆறு கதைகளிலிருந்து வருஷத்துக்கு ஒன்று என்ற திருமூலர் அந்தஸ்தை எட்டியிருக்கிறேன். பரிணாம நியதிப்படி வளர்ச்சிதான். இனிமேலும் இந்த நியதிப்படியே பிறக்க ஆரம்பித்தால் பொருளாதார வகையில் எனக்கு நஷ்டக் கணக்குதான்.

என் கதைகளில் எது நல்ல கதை? எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொன்றும் நல்ல கதையாகத்தான் இருக்கிறது. இப்பொழுது படித்துப் பார்க்கும் போதும் எனக்குப்படிக்க பரம
~~~~~~~~~~~~~~~~~~~~~~~

சுகமாக இருக்கிறது. எல்லோரும் "சில்பியின் நரகம்" நல்ல கதை என்கிறார்கள். அது "மணிக்கொடி" நடக்கும்போது அந்தக்காரியாலயத்தில் சாயங்காலம் சிக்கிக்கொண்டு விளாசிக் கிறுக்கி விட்டு, வீட்டுக்குத் தப்பி வந்த கதை. "நினைவுப் பாதை" நல்ல கதை என்று சொன்னார்கள். தினமணிவருஷ மலரில்தான் அந்தக்கதை முதன் முதலில் வெளியாயிற்று. அப்போது வருஷ மலரைப் பதிப்பிக்கும் பொறுப்பு என்வசம் அளிக்கப்பட்டிருந்தது. ஒருநாள் ராத்திரி எட்டுப் பக்கங்களுக்கு என்று விஷயங்களை எழுதிக் கொடுத்துவிட்டு, "புரூப்" வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ராத்திரி பதினொரு மணியிருக்கும் அப்பொழுது அச்சு இலாகா "போர்மன்" என்னிடம் வந்து, "ஸார், இரண்டு பக்கங்களுக்கு விஷயம் தேவை" என்றார். படம் செய்து கொடுப்பவர் குறித்த காலத்தில் "பிளாக்"குகளை அனுப்பாததனால் அந்தச் சங்கடம். அந்தப் பக்கங்களில் வரவேண்டிய கட்டுரைகளை மாற்றிவிட்டு, வேறு கட்டுரைகளைக் கொடுத்தேன். அது இரண்டு பக்கங்களில் வந்து உதைத்துக் கொண்டது. வேறு ஏதோ கதை ஒன்று எழுதி அதற்காகச் செய்து வைத்த பிளாக்குகளை உபயோகித்து, இரண்டு பக்கங்களுக்கு என்று ஒரு கதை எழுதி, பக்கத்தை நிரப்பினேன் என்று சொல்வது பிசகு, "ரொப்பினேன்"என்று கிராம்யமாகச் சொன்னால்தான் பொருந்தும்.

நான் தினசரி பத்திரிகையில் போய் உதவி ஆசிரியனாக அமர்ந்திருந்தேன். இந்த ஆசிரியர் வீணாகப் பொருள் விரயம் செய்பவரல்ல. ஒருநாள் என்னிடம் வந்து ஒரு பிளாக்கைக் கொடுத்து, "இந்தப் படத்துக்காக வைத்திருந்த கதை கைதவறி விட்டது. நீங்கள் இதற்குப் பொருந்துவது போல் ஒரு கதை எழுதுங்கள்" என்றார். உருவப்படத்தை எழுதி வைத்துக் கொண்டு, அதை முகஜாடை உள்ளவர் ஒருவரைத் தேடி அவரிடம் அதை விற்பது போல, நானும் ஒரு கதை எழுதிக் கொடுத்தேன். அதுதான் கோபாலபுரம். இன்னும் அதை வாசிக்கும்போது எனக்கு நன்றாக இருப்பது போலத்தான் தெரிகிறது.

இந்தக்கதை எழுதுகிறதிலேயே வேடிக்கையான அனுபவம் எனக்குத் தான் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். கதை தருவதாக வாக்குக் கொடுத்து சொல்ல வேண்டும். கதை தருவதாக வாக்குக் கொடுத்து விட்டு, கடைசி நிமிஷம் வரை போக்குக் காட்டி, சாத்தியமானால், அந்தக் குறிப்பிட்ட இதழுக்குத் தப்பி விடுவதில் நான் கைதேர்ந்த நிபுணன். இது என்னுடைய நண்பர்களான பத்திரிகை நிர்வாகிகளுக்கு நன்றாகத் தெரியும். ஸ்டே-இன்-ஸ்ட்ரைக் போல, பக்கத்தில் ஆளை உட்கார்த்தி வாங்கிக்கொண்டு போய்விடுவார்கள். இது வழக்கப்படி அவர்கள் அனுஷ்டிக்கும் முறை. ஒருமுறை, "அடுத்த இதழுக்கு என்ன கதை?" என்று கேட்டார்கள். "சரி தருகிறேன்" என்றேன். ஒருநாள் திடீரென்று வந்து, "அடுத்த இதழுக்கு முன் விளம்பரம் கொடுக்கப் போகிறேன். கதையைக் கொடுங்கள்" என்று கெடுபிடி செய்துவிட்டார்கள். "ரொம்ப நீளமான கதை. பாதிதான்

எழுதியிருக்கிறேன், பூர்த்தி செய்து கொடுக்கிறேன்'' என்று சொன்னேன். அப்பொழுது, ''கதையின் பெயரையாவது சொல்லுங்கள்'' என்றார்கள்.

அப்பொழுது மத்திய அசெம்பிளித் தேர்தல் போலிருக்கிறது. காங்கிரஸ் போட்டியிடும் காலம். ஸ்ரீசங்கு சுப்பிரமணியன் ''தினமணியில்'' எங்களுடன் சக ஆசிரியராக, தந்தி மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். அவர் தேர்தல் பாட்டு ஒன்று எழுதி அன்றைத் தினமணியில் பிரசுரமாகி இருந்தது. ''நாட்டினுட நலம் கெடுக்கும் நாசகாரக் கும்பல்'' என்பது அந்தப் பாட்டில் ஒருவரி. ''நாசகாரக் கும்பல்'' என்ற வார்த்தைச் சேர்க்கை எனக்குப் பிடித்திருந்தது. அடிக்கடி என் வாய் அதை அலப்பிக் கொண்டிருந்தது. கதையின் பெயர் கேட்ட நண்பர்களிடம், ''நாசக்காரர் கும்பல்'' என்று சொல்லிவிட்டேன். நான் சொல்லப்போகும் அந்த நாகச்கார கும்பல் யார் என்று எனக்குத் தெரியாது. முப்பத்து முக்கோடி தேவர்களா அல்லது அதற்கும் சிறிது எண்ணிக்கை குறைவான தேவதைகளா, அல்லது 1935ஆம் வருஷ இந்திய சர்க்கார் சட்டப்படிநடக்கும் பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்டவர்களா என்பது எனக்குத் தெரியாது. ஏதோ சொல்லிவிட்டேன். பிறகு என் வழக்கப்படி விவகாரத்தை அடியோடு மறந்துவிட்டேன். பத்திரிகைக்கு கதை கொடுக்க வேண்டிய நாள் நெருங்க, நெருங்கமனசு ''கெதக், கெதக்''என்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. வாக்குறுதியை நிறைவேற்றாத கடைசிக் கெடுவும் வந்தது. நண்பர்கள் வந்து உட்கார்ந்து விட்டார்கள். நானும் பேனாவைக் எடுத்துக் கொண்டு ஓட்டினேன். எழுத்து பக்கம் பக்கமாகக் குவிந்து கொண்டு செல்கிறது. வசமான பிடிப்பு கைக்குள் சிக்கவில்லை. அவர்களும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு, ''மீதியை நாளைக்கு முடித்து அனுப்புங்கள்'' என்று கைவசமிருந்த கடுதாசிகளையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அந்தச் சமயம் தப்பித்துக் கொண்டோம் என்ற பிரக்ஞை சற்றும் இல்லை. மறுநாள் எப்படியோ அதை முடித்துக் கொடுத்தேன். கதையும் வெளி வந்தது.

அச்சுப்பிழை பார்க்கிறவர்களை ஒதுக்கிவிட்டால் என் கதையின் முதல் வாசகன் நான்தான். அவ்வளவு ரசித்துப் படிப்பேன். வேகமாக எழுதிக்கொண்டு போவதால், எழுதியதில் அங்கொன்றும் இங்கொன்றும் தான் என் ஞாபகத்தில் இருக்கும். கோவையாக எழுத்து ரூபத்தில் என் கதைகளை நான் அச்சில்தான் பார்த்து வருகிறேன். அந்தப்படி படித்து வரும்போது முதலில், ''இலங்கையிலிருந்து திரும்பிய மருத்துவனாருக்கு மனைவி காலமாகிவிட்டார்'' என்று இரண்டாம் பக்கத்தில் எழுதிவிட்டு, முடிப்பதற்கு முன் பக்கத்தில் ''மருத்துவனார் தன் மனைவியின் கைத்தாங்கலில் தள்ளாடி வந்த"தாக எழுதியிருந்தேன். இந்த மாதிரி மாண்டவர் மீண்ட விந்தை, துப்பறியும் திறமை காட்டாத இந்தக் கதையில் வந்திருப்பதைப் பத்திரிகை ஆசிரியருக்காக அறிவித்தேன். நான் எடுத்துக்காட்டிய பிறகு இனிமேல் செத்தவர்களை இந்த ரீதியில் உயிர்ப்பிப்பதில்லை என்று நானும் அந்த ஆசிரியரும்

சேர்ந்து வாசகர்களுக்கு உத்தரவாதம் அளித்தோம் என்று வையுங்கள். அந்தக் கதையை சமீபத்தில் ஒருமுறை படிக்க நேர்ந்தது. நன்றாகத்தான் இருக்கிறது.

நான் கதை எழுதுகிற சீர்சிறப்பு எல்லாம் இந்தமாதிரி தான் என்று வைத்துக் கொள்ள வேண்டாம். அதாவது நான் எழுத வேண்டியதுதான் பாக்கி. அது நேராகப் பத்திரிகையின் பக்கங்களில் போய் உட்கார்ந்து கொள்வது நிச்சயம் என்று கருத வேண்டாம். அப்படி ஒன்றும் இல்லை. ஒரு காலத்தில் என் கதைகளைப் போல பத்திரிகையில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டவை வேறு இருக்க முடியாது. நான் இப்பொழுது பிரசுரித்துள்ளவற்றின் அளவுக்கு ஏறக்குறைய சமமான எண்ணிக்கையுள்ள கதைகள், அவை எழுதப்பட்ட காலத்திலிருந்த பத்திரிக்கைக் காரியாலயங்கள் எல்லாவற்றையும் சேஷத்திர தரிசனம் செய்துவிட்டுத் திரும்பியவையாகும். பிரசுரிக்கும் நோக்கமே இல்லாமல் நான் எழுதிக் கிழித்துப்போட்ட கதைகள் எத்தனையோ? எழுத்துக்குக் கைப்பழக்கம் மிகவும் அவசியம். முடுக்கிவிட்ட யந்திரம் மாதிரி தானே ஓர் இடத்தில் வந்து நிற்கும். இது என் அனுபவம். இதுவரை நான் கையாண்டு வரும் இந்த முறை பிசகியதே இல்லை. என் கதைகளிலே ஏற்றத்தாழ்வு உண்டு. அவற்றிற்குக் காரணம் வார்ப்புப் பிசகு அல்ல. கதை எழுதத் தூண்டிய மன அவசத்தின் உத்வேகத்தைப் பொறுத்தது. கதையின் கவர்ச்சியில் காணும் ஏற்றத்தாழ்வு.

நான் கதை எழுதுவதற்காக நிஷ்டையில் உட்கார்ந்து யோசித்து எழுதும் வழக்கம் இல்லை. இதை நான் ஸ்பஷ்டமாகச் சொல்ல வேண்டியதில்லை. நான் முன் விவரித்த உதாரணங்களே போதும். என் கதைகளில் நூற்றுக்குத் தொண்ணூறு எடுத்த எடுப்பில் எழுதியும் வெற்றி காணுவதற்குக் காரணம் என் நெஞ்சில் எழுதாக் கதைகளாகப் பல எப்பொழுதும் கிடந்துகொண்டே இருக்கும். அந்தக் கிடங்கிலிருந்து நான் எப்பொழுதும் எடுத்துக்கொள்வேன். கதை எழுதும் சிலர் இவற்றை விவரப் பட்டியல் எழுதி ஒரு மூலையில் போட்டு வைப்பார்கள். நான் அப்படியல்ல. ஞாபக மறதிக்கு அரிய வசதி அளிப்பேன். அதையும் தப்பி வந்தவைதாம் "புதுமைப்பித்தன் கதைகள்" என்ற கோவையும் பிறவும். ஆனால் ஒன்று. எழுத்து ரூபத்தில் அமையும் வரை மனசில் உறுத்திக் கொண்டு கிடக்கும் நிலையில் இந்தக் கதைகள் யாவும் இவற்றைவிடச் சிறந்த ரூபத்தில் இருந்தன என்பது என் நம்பிக்கை. எழுதி முடித்தபிறகு அவை சற்று ஏமாற்றத்தையே அளித்துவந்திருக்கின்றன. ஆனால் ஏமாற்றம் வெகு நேரம் நீடிப்பதில்லை.

என் கதைகளில் எதையாவது ஒன்றைக் குறிப்பிட்டு அது பிறந்த விதத்தைச் சொல்வதென்றால் ரிஷிமூலம் நதிமூலம் காணுகிற மாதிரிதான். சில ஆபாசவேட்கையில் பிறந்திருக்கலாம். சில குரோத புத்தியின் விளைவாகப் பிறந்திருக்கலாம். வேறு சில சுமக்கும் பொருளுக்குச் சற்றும் சம்பந்தமே இல்லாத ஒரு காரியம் கைகூடாத போது எழுதப்பட்டிருக்கலாம். இதனால், சுயமாகக் கற்பனை பண்ணிக் கொண்டிருக்கிறவனுக்கு

இன்னதுதான் இந்தக் கதையை எழுதத் தூண்டியது என்று சொல்வது எளிதல்ல. கேட்டால், "என்னவோ தோணித்து, எழுதினேன்" என்றுதான் சொல்ல வேண்டும்.

என் கதைகளின் தராதரத்தைப் பற்றி "எரிந்த கட்சி" "எரியாத கட்சி" ஆடுகிறார்கள். அதற்குக் காரணம், பலர் இலக்கியத்தில் இன்னதுதான் சொல்ல வேண்டும். இன்னது சொல்லக்கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாகவும் அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல. சுமார் இருநூறு வருஷங்களாக ஒருவிதமான சீலைப் பேன் வாழ்வு நடத்திவிட்டோம். சில விஷயங்களை நேர்நோக்கிப் பார்க்கவும் கூசுகிறோம். அதனால்தான் இப்படிச் சக்கர வட்டமாகச் சுற்றி வளைத்துச் சப்பைக் கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும் ரத்தக் களறியையும் மனக் குரூபங்களையும் விகற்பங்களையும் உண்டாக்க இடமிருக்குமேயானால், ஏழை விபச்சாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப்போகப் போகிறது? இற்றுப் போனது எப்படிப் பார்த்தாலும் நிற்கப்போகிறதா? மேலும், இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சி தானே. நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், ஸினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரமநாயகம்-இத்தியாதி நபர்களை நாள் தவறாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல், காதல் கத்தரிக்காய் பண்ணிக் கொண்டிருப்பது போன்ற அனுபவத்துக்கு நேர்முரணான விவகாரம் வேறு ஒன்றுமில்லை. நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை.

நீளமாகத் தலை கத்தரித்து விட்டுக்கொண்டு, அடையாறு ஜிப்பா போட்டுக்கொண்டு, பங்கியடித்த மாதிரி கண்களை ஏறச்சொருக வைத்துக்கொண்டிருக்கும் படங்கள், அவை போன்ற கதைகள், நாசூக்கான கட்டம் வரை அதாவது உடை குலையாத கட்டம் வரை எழுதிக் கொண்டிருப்பதே கலையல்ல. அவைகளே, "அப்புறம்" என்ற நினைப்பைத் தட்டிவிட்டு ஆபாச வேட்கைகளைக் கிளப்புகின்றன. இலக்கியத்தில் கலையம்சம் என்பது ஜீவத் துடிதுடிப்பில்தான் இருக்கிறது. ராமாயணத்தில் விபசாரம் இல்லையா? தற்காலப் புஸ்தகத் தணிக்கை போர்டார், இப்பொழுது எழுதினால் "ஆபாசம்" என்ற தலைப்பில் கூட தடை விதிக்கக்கூடிய வேறு விவகாரங்கள் இல்லையா? ஒரு பெரிய மாளிகை மாதிரி ராமாயணம் அகண்டாகாரமாக இருப்பதால், அவை பலர் கண்களுக்குத் தென்படுவதில்லை. கோவில் கோபரச் சிற்பங்கள் போல என் கதைகள் அப்படிப் பட்டவையென்று நாமகரணம் சூட்டப்பட்டிருப்பதாக நான் தாக்குப்பிடித்துப் பேசவில்லை. என்னுடைய கதைகளில் அப்படிப்பட்டவை விலக்கு அல்ல என்று கூறுதல் பொருந்தும். ஏனென்றால் என் கதைகளில் ஒவ்வொன்றும், ஒரு விவகாரத்தைப் பற்றியதாக இருக்கும். ஆனால் என் கதைகளில் பொதுத்தன்மை நம்பிக்கை வறட்சி. "எதிர்மறையான குணங்கள் இலக்கியத்துக்கு

வலுக்கொடுக்குமா?" என்று கேட்கலாம். அது ஏற்பவர்களின் மனப்பக்குவத்தைப் பொறுத்ததே ஒழிய, எதிர்மறை பாவத்தின் விஷயத் தன்மையைப் பற்றியதல்ல.

ஒருவர் என்னுடைய புனைபெயரை வைத்துக் கொண்டு என்னை விமர்சனம் செய்தார். "பித்தமும் இடையிடையே புதுமையும் காணப்படும்" என்றார். வாஸ்தவம்தான். "பித்தா பிறைசூடி பெருமானே" என்ற உருவகத்தில் பொதிந்துள்ள உன்மத்த விகற்பங்களை அவர் குறிப்பிடுகிறார் என்று பொருள் கொண்டு, அவ்வளவும் நமக்கு உண்டு என ஒப்புக் கொள்கிறேன். அவரவர் மனசுக்கு உகந்த ரீதியில் இருப்பவைகளே புதுமை எனக் கொள்ளப்படுகின்றன. நான் பொருள் கொடுக்கும் பித்தம்தான் அதில் புதுமை. என் கதைகளின் புதுமை அதுதான்.

****

பின்னிணைப்பு - 2

சிறுகதை: மறுமலர்ச்சிக் காலம்

புதுமைப்பித்தன்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

சமீபத்தில் என்னுடைய நண்பர் ஒருவர் ரசமான சம்பவம் ஒன்றைச் சொன்னார். அது நம்மவரிடைக் கதையை பற்றி எவ்விதமான அபிப்பிராயம் இருக்கிறது என்பதைக் காட்டுவதுடன், கதையின் தத்துவத்தையே விளக்குகிறது. என்னுடைய நண்பரின் நண்பர் இலக்கிய ரசிகர். பாவம், பண்பாடு, மரபு முதலிய சொல்லடுக்குகளைக் கொண்டு அம்மானையாடுபவர். "நாங்கள் வெளியிட இருக்கும் விசேஷ மலருக்கு ஒரு அரிய கட்டுரையாவது அனுப்பித் தரவேண்டும் எனக் கோருகிறோம்" என அவருக்கு வந்திருந்த கடுதாசியைக் காண்பித்து, "கட்டுரை எழுதுவதென்றால் சிந்திப்பதற்கு அவகாசமே இல்லை, ஒரு கதையாவது எழுதியனுப்பி விடலாமா என்று நினைக்கிறேன்" எனத் தமது சங்கடத்தை என்னுடைய நண்பரிடம் பகிர்ந்து கொண்டார். எனது நண்பரும் சிரித்துக்கொண்டே "அப்படியானால் இராத்திரியே ஒன்றை எழுதி நாளைத் தபாலில் அனுப்பி விடுங்கள்" என்று யோசனை சொல்லிவிட்டுப் போனார். மறுநாள் காலையிலும் அந்த நண்பருக்கு "என்ன சார், கதை எழுதி அனுப்பிவிட்டீர்களா?" என்று மரியாதையாகக் கேட்டார். அந்த ரசிகர் பொதுவாக நல்ல மனுஷர். மனசில் உள்ளதை ஒளிக்கமாட்டார். "ஒட்டிப் புளுகுவதற்கு எவனுக்கு வருறது சார்?" நேற்று ராத்திரி "ராமசாமி எழுந்து நின்று அந்தச் சன்னலையே பார்த்துக் கொண்டிருந்தான்" என்று முதல் வாக்கியத்தை எழுதினேன், ராத்திரி இரண்டு மணியடிக்கிற வரைக்கும் ராமசாமி சன்னலையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். இன்னும் அப்படித்தான் திண்டாடிக் கொண்டிருக்கிறான். மேலே கதை ஓடவில்லை" என்று சொன்னார்.

இந்தச் சம்பவத்தில் ஒரு ரசமான ஆழ்ந்த உண்மையிருக்கிறது. கதை நன்றாக, வாய்ப்பாக, கவர்ச்சியாக அமைந்திருந்தால், நம்மாலும் எழுத முடியாதா என்ற மயக்க உணர்ச்சி தோன்றும்படி அவ்வளவு சுளுவாகத் தென்படும். தரை தெரியும்படியாக அவ்வளவு சுத்தமாக இருந்தால் ஆழம் புலப்படாதல்லவா? அது மாதிரிதான் இந்தக் கலை விவகாரம் எல்லாம். "பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போல வரும் வெண்ணிலாவே இந்த வேக முனக்காகாதே", "விதியே கொடியாய் விளையாடுதியோ?" என்று வரும் அடிகளில் லகுவாக
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

அமைந்திருக்கும் இயல்பு நம்மையும் பாட்டெழுத வைத்து, கேலிக்கு இடமாக்குகிறதல்லவா? இதுதான் கலையின் இயல்பு. வலிந்து கட்டிப் பேசுவது மாதிரி இருக்காது. சொல்லப்படும் விஷயம் எதுவாக இருந்தாலும், நம்மை அதில் ஒன்ற வைப்பதுடன், நாமும் செய்திருக்கலாமே என்ற மயக்கவுணர்ச்சியை ஏற்படுத்துகிறது. பயன் கருதாது, தன்மயமாகி, லயித்து, ஒட்டிப்புளுகுவது தான் கதை.

இந்தக் கதை விவகாரத்திலே, சமீபகாலமாக சிறுகதை என்ற சொல்லாட்சி ஒன்று அடிபட்டு வருகிறது. அந்தப் பதச்சேர்க்கையே நமக்குப் புதிது. விக்கிரமாதித்தனின் அறுபத்து நாலு பதுமைகள் சொல்லிய சின்னக் கதைகளும், கதைகள்தான். ராமாயணமும் கதைதான். சிறுகதை என்பது நம்மைப் பொறுத்தவரை அளவைத்தான் குறிப்பிட்டுக்காட்டி வந்தது. இப்பொழுது கொடுக்கும் விசேஷ அர்த்தத்தை அல்ல. இந்தப் பதச் சேர்க்கை வெளிநாட்டுச் சரக்கு. நமக்கு இந்தப் பதம் இங்கிலீஷில் short story என்ற பதத்திற்கு வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்புத்தான் சிறுகதை என்ற வார்த்தையும். இங்கிலீஷிலும் அந்தப் பதச்சேர்க்கை சமீபகாலமாக விவகாரந்தான். அளவைப் பிரதானமாகக் கொள்ளாது, அங்கும் அதற்கு விசேஷார்த்தம் கற்பிக்கப்படுகிறது. அவர்கள் வலிந்து அப்பதச் சேர்க்கை மீது ஏற்றியுள்ள அர்த்தத்தைத்தான் நாமும் சிறுகதை என்ற பதத்திற்குக் கொடுத்து வருகிறோம். இலக்கியத்தில் இது ஒரு துறை. இந்த முயற்சி வெளிநாட்டுச் சரக்காக இருப்பதனால்தான் சாதாரணமான ரசிகர்கள் இது புரியாது என்று சொல்லி, மரபுக்குப் பொருந்தாது என முடிவு கட்டுகிறார்கள். இதென்ன இடையிலே எங்கோ ஆரம்பித்து எங்கோ முடிக்கிறான், எனக்குப் புரியவில்லையே எனச் சொல்வது இயல்பு. ஆனால் அகப்பொருள் துறைகளிலும் புறப்பொருள் துறைகளிலும் பல்வேறு மன அவகாசங்களைக் காட்டி ஒரு காட்சியை, ஒரு கதையைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் அற்புதமான பாட்டுக்களை நுகர்ந்தவர்கள்கூட, இது புரியவில்லை என்று சொல்லும் போதுதான் விசித்திரமாக இருக்கிறது. சிறந்த சிறுகதைகளுக்கு இலக்கணமாக யாப்பில் எத்தனையோ உண்டு. வசனத்தில் தோன்றியுள்ள இன்றைய சிறுகதைகளைப் புரிந்துகொள்ளாதவர்கள் பழைய காவிய நுகர்ச்சியிலும் அதே நிலையில்தான் இருக்கிறார்கள்.

தமிழில் சிறுகதை என்பது சுமார் ஐம்பது வருஷத்து விவகாரந்தான். செல்வகேசவராய முதலியார் எழுதியுள்ள "அபிநவக் கதைகள்" என்ற சிறு தொகுதியை ஆரம்பமாக வைத்துக்கொண்டு கவனித்தால், இன்று நம்முடைய சாதனை பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடியதுதான்.

சிறுகதைகள் பிறந்து வளர்ந்த காலத்தை மூன்று பகுதியாகப் பிரிக்கலாம். செல்வகேசவராய முதலியாரிலிருந்து வ.வெ.சு.ஐயர் காலம் வரை ஒரு பகுதி. இதை வெறும்

சோதனைக் காலம் என்று சொல்ல வேண்டும். குறிப்பிடத்தக்க வகைகள் எதுவும் கிடையாது என்று பொதுவாகச் சொல்லலாம். இக்காலத்தில் பிற நாட்டுக் கதைகள், வாய்மொழியாக உலாவி வந்தவைகள், எழுத்தில் அமைந்தன. அவற்றில் பெரும்பான்மையாக ஒரு கதையிருக்கும். அவற்றில் நடமாடும் பாத்திரங்கள் உயிர்பெற்று இயங்காது. ஆசிரியர் அவற்றை இயக்குவதற்காக, சூத்திரக் கயிற்றைப் பிடித்து இழுப்பதுங்கூட நமக்குத் தெரியாது.

இதற்கடுத்தபடியாக வ.வெ.சு.ஐயர் யுகம் என்று சொல்ல வேண்டும். தமிழில் சிறுகதைக்கு உருவும் உயிரும் கொடுத்தவர் அவர்தான். ஒரு விதத்தில் இவரை "சிறுகதையின் பிதா" என்று ஆங்கில மரபையொட்டிக் குறிப்பிடலாம். இவரது கதைத் தொகுதியான "மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்" என்பதிலும் அவர் நடத்திய "பாலபாரதி" என்ற பத்திரிகையில் எழுதிய ராஜகோபாலன் கடிதங்கள் என்பவற்றிலும் அபூர்வமான கதைகள் பல உண்டு. குளத்தங்கரை அரச மரத்தை யார்தான் மறக்க முடியும்? அவருடைய கதைகளில் பாலையின் வெக்கை நம்மைப் பொசுக்கும். முகலாய அந்தப்புரத்து நந்தவனங்களின் வைபவங்கள் நம்மைக் களிப்பூட்டும். கிரேக்க தேசத்துக் கடவுளர் நம்முடன் உறவாடுவர். பிரெஞ்சுப் போர்க்கள ரத்த பயங்கரம் நம்மை மிரட்டும். பிறநாட்டு மரபுகளையும் பெயர்களையும் நம்மால் ரசிக்க முடியாது என இன்றைய விமர்சகர்கள் சிலர் சொல்லிக் கொண்டிருப்பதற்குத் தகுந்த பதில் அவரது கதைகள். இவர் காலத்தில், மாதவையா, சுப்பிரமணிய பாரதியார். ராமாநுஜலு நாயுடு ஆகியோர் கதைகள் எழுதி வந்தார்கள். மாதவையா, உலகத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடனே பார்த்ததனால், அவர் விரும்பும் கருத்துகளை வற்புறுத்துவதற்கு சவுக்கியமாக அமைந்த சாதனங்களாகவே கொண்டதால், கதைகள் உயிர்த் தத்துவம் இழந்த வெறும் உபாக்கியானங்களாக அமைந்து விட்டன. அவர் பதிப்பித்த "பஞ்சாமிருதம்" என்ற பத்திரிகையில் சில சிறந்த சிறுகதைகள் வெளிவந்துள்ளன. "மூன்றில் எது?" என்று வெளிவந்தது இன்றும் ஞாபகமிருக்கிறது. டாக்டர் சிகிச்சை, நாட்டு வைத்தியம், கோயில் பிரசாதம் இம்மூன்றில் எது சாகக்கிடந்த குழந்தையைப் பிழைக்க வைத்தது என்பதுதான் கதையின் ஆதாரக் கேள்வி. அதிலே தாயின் பரிதவிப்பு வெகு அழகாக விழுந்திருக்கிறது. எழுதியவரின் பெயர் எனக்கு நினைவில் இல்லை. ஸ்ரீமாதாவையா திடீரெனறு காலமானார். கடைசியாக அவர் பதிப்பித்த இதழில் "கண்ணன் பொருந்தூது" என்ற கதை பிரசுரிக்கப்பட்டுள்ளது. உருவ வார்ப்புக்குச் சிறந்த உதாரணமாக அதைத்தான் சொல்ல வேண்டும். கதைப் பாத்திரங்களின் குண விஸ்தாரமும் கதையின் போக்கும் பிரமாதம். அதில் எழுதியவர் யார் என்று குறிப்பிடப்படவில்லை. நடையைக் கவனித்தால் மாதவையாவே எழுதி இருக்கக்கூடும் என ஊகிக்க இடமிருக்கிறது. ஸ்ரீராமாநுஜலு நாயுடு கதை சொல்லுவதில் சமர்த்தர். பாத்திரங்கள் உயிர்த்தன்மையுடன் இயங்குபவை. பெண்களைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துகள்

விபரீதமானவை. கலையைப் பற்றியும் பெண்மையைப் பற்றியும் டால்ஸ்டாய் விசித்தமையான அபிப்பராயங்களைத் தான் கொண்டிருந்தார். அதற்காக அவர் சிறந்த கலைஞன் என்பதை நாம் மறந்துவிடுகிறோமா? அம்மாதிரியே ராமாநுஜலு நாயுடுவை நாம் பாவிக்க வேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக 1930ஆம் வருஷத்துக்குப் பின் உப்பு சத்தியாகிரகத்தின் இலக்கிய அலையாக ஒரு புது வேகம் இலக்கியத்தில் ஏற்பட்டது. அதாவது எதையும் சிரிக்க சிரிக்க எழுத வேண்டும் என்று ஒரு பாணியை வகுத்து அந்தத் துறையில் சிலர் இறங்கித் திறமைகளைக் காட்ட முயன்றார்கள். இவர்களுள் பிரதானஸ்தர் கல்கி. இவர்களுக்குச் சிரிப்பு மூட்டக் கூடிய தன்மையில் எழுத வேண்டும் என்பதே பிரதான லட்சியம். ஹாஸ்சியச் சுவை என்பது இயல்பாக அமைய வேண்டிய விவகாரமாதலால், வலிந்து கட்டிக்கொண்டு சிரிக்க வைக்க முயலுவது போட்டோவுக்காகச் சிரித்த மாதிரியாகத்தான் அமையும். கல்கியும், பிறரும் மேல் நாட்டு ஹாஸ்ய சாம்ராட்டுகளை மொழிபெயர்த்தும் தந்தார்கள். அவற்றை அனுசரித்தும் ஒட்டியும் பெயர்த்தும் எழுதினார்கள். கல்கி பிராபல்யத்துக்கு வந்தது அவர் சிரிக்க சிரிக்க எழுதுவார் என்பதிலிருந்துதான். ஆனால் பிற்காலத்தில் அவர் சிறு கதைத் துறையில் இறங்கிய பொழுது அவரது எழுத்துக்களில் மருந்துக்குக்கூட சிரிப்பு இல்லாமல் போனதற்குக் காரணம், ஹாஸ்யம் இவருக்கு இயல்பான குணம் அல்ல என்பதுதான். ஆனால் ஹாஸ்யமாக கதை எழுதக்கூடியவர்கள் தமிழில் உண்டு. அவர்களிருவர்: எஸ்.வி.வியும் கொனஷ்டையும். எஸ்வி.வி.யை விட கொனஷ்டையில் கலையம்சம் ரொம்பவும் நயமாக இருக்கும். கதைப் பாணி புதிதாக இருக்கும். இந்த ஹாஸ்ய யுகத்தின் வேகம் ஒடுங்கும் நிலையில்தான் இன்னும் ஒரு பேரலை எழுந்தது. அதில்தான் சிறுகதை தமிழில் பூரண வடிவம் பெற்றது. இதைச் சிறப்பாக மணிக்கொடி யுகம் என்று சொல்ல வேண்டும். இக்காலத்தில்தான் சிறுகதைக்கு இலக்கிய அந்தஸ்து ஏற்பட்டது. பிச்சமூர்த்தி, கு.ப.ரா.பி. எஸ். ராமையா, சிதம்பர சுப்பிரமணியன் முதலியவர்களும் நானும் கதைகள் எழுத ஆரம்பித்தோம். வாழ்வுக்குப் பொருள் கொடுப்பதுதான் கலை. சிறுகதை வாழ்வின் பல சூட்சுமங்களையும் எழுத்தில் நிர்மாணித்துக் காண்பித்தது. ''பரமசிவன் வந்து வரங்கொடுத்துப் போவார், பதிவிரதைக் கின்னல் வரும் பழையபடி தீரும்'' என்றிருந்த நிலைமை மாறி நிலாவும் காதலும் கதாநாயகனுமாக சோபித்த சிறுகதைகள் வாழ்வை, உண்மையை நேர் நின்று நோக்க ஆரம்பித்தன.

தமிழ் மரபுக்கும் போக்குவரத்துக்கும் புதிதாகவும் சிறப்பாகவும் வழி வகுத்தவர் ஒருவரைச் சொல்ல வேண்டும் என்றால், ''மௌனி'' என்று புனைபெயரில் எழுதி வருபவரைத்தான் குறிப்பிடவேண்டும். அவரைத் தமிழ்ச் சிறுகதையின் திருமூலர் என்று சொல்ல வேண்டும். அவர் மொத்தத்தில் இதுவரை பத்துக் கதைகள்தான் எழுதியிருப்பார். கற்பனையின் எல்லைக்கோட்டில் நின்று வார்த்தைக்குள் அடைபட மறுக்கும் கருத்துக்களையும் மடக்கிக் கொண்டுவரக்கூடியவர் அவர் ஒருவரே. தமிழிலே ''நட்சத்திரக் குழந்தைகள்'', ''சிவசைலம்'', ''எங்கிருந்தோ வந்தாள்'', ''கடவுளும் கந்தசாமி பிள்ளையும்''

என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கதைகள் ஒப்புயர்வற்றவை. இன்று சிறுகதைகள் வளர்ந்து வரும் லட்சியம். அதன் வரம்புகளையும் சாதனைகளையும் நிர்ணயிப்பது கடினம். இன்று கதைக்கெனவே தமிழில் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாணியைப் பின்பற்றி அற்புதமான பயன்களை அளித்து வருகின்றன. இவற்றில் சிறப்பாகக் "கலைமக"ளைக் குறிப்பிடவேண்டும். பிரதானமானவை எனச் சொல்லத்தக்கவை பல அதில்தான் வெளிவந்துள்ளன. இவை தவிர சாதனையை அளவிட்டுக் காட்டுவதுபோல, கோவையாகச் சிறுகதைகள் ஏராளமாக வெளிவந்துள்ளன. அவை இன்றைய நிலைமையை ஓரளவு தெளிவாகப் பிரதிபலிக்கும்.

****





புதுமைப்பித்தன்

காலம் வென்ற
மூத்த தமிழ் அறிஞர்,
பரந்துபட்ட ஆய்வு நெறியாளர் மற்றும்
வைணவத்தில்ஆழங்கால்பட்ட இறையன்பர்
ந சுப்பு ரெட்டியார் அவர்களின்
நூற்றாண்டை முன்னிட்டு



படைப்புகளில்

சிறப்புப் பார்வை

It is a novel and curious attempt to read his short stories with the hope that it would bring out more dimensions of his creativity and expertise in story telling and also, get more young readers of the 21st century interested.

Diamond Jubilee (1960-2020)
Department of TAMIL
SRI VENKATESWARA UNIVERRSITY



ISBN 978-81-943850-7-3